தர்மசக்கரம்



துந்துபி ௵ ஆடி ௴ சக்கரம் 31 ஆரம் 7

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

ஆனிமாத தர்ம சக்கரத்தில் தர்ம சக்கர சந்தாவை உயர்த்திப் புதிய சந்தா விவரங்களைத் தந்திருந்தோம். அதைக் கவனித்த அன்பர்கள் ஆண்டுச் சந்தா ரூபாய் 15 அனுப்பிப் புதிய சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே ஆண்டுச் சந்தாதாரர்களாக இருப்பவர்கள் ரூபாய் 15 அனுப்பித் தங்கள் ஆண்டுச் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ரூபாய் 15 அனுப்ப இயலாத நிலையில் மாதவருவாய் ரூபாய் 200க்குக் குறைவாக இருப்பவர்கள் சகாய சந்தா ரூபாய் 10 அனுப்பிச் சகாய சந்தாத் திட்டத்தில் சேர்ந்து பயனடையக் கோருகிறோம். ஏற்கனவே சகாய சந்தாவில் உள்ளவர்கள் ரூபாய் 10 அனுப்பிச் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளக் கோருகிறோம். தெய்விக விஷயமாதலால் ரூபாய் 15-00 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

டிபாசிட் சந்தா : ஏற்கனவே டிபாசிட் சந்தாதாரர்களாக இருப்பவர்கள் தொடர்ந்து சந்தாதாரர்களாக இருக்க மேற்கொண்டு ரூபாய் 50 அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அனுப்பாதவர்கள் விரைவில் ரூபாய் ஐம்பதையும் ஏற்கனவே தங்களிடம் உள்ள ரூபாய் 100 டிபாசிட் ரசீதையும் அனுப்பித் தந்து ரூபாய் 150க்கான ரசீதைப் பெற்றுத் தொடர்ந்து சந்தாதாரர்களாக இருக்கும்படி கோருகிறோம். பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாசிட் செய்த ரூபாய் 150ஐயும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். டிபாசிட் செய்த ரூபாய் 150ஐயும் பாங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது. பாங்கில் இருப்பாக வைத்துள்ள (**Fixed Deposit**) தொகைக்கு அதிகபட்சம் வட்டி 10 சதவிதம் தான் தருகிறார்கள். எனவே, ரூபாய் 150 டிபாசிட் தொகையாக இருந்தால்தான் அதிலிருந்து கிடைக்கும் வட்டி ரூபாய் 15ஐ தர்மசக்கர ஆண்டுச் சந்தாவுக்காக எடுத்துக்கொள்ள முடியும். டிபாசிட் சந்தாதாரர்கள் ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்க வேண்டியதில்லை. எனவே, இத்திட்டத்துக்குச் சந்தாதாரர்கள் ஊக்கம் காட்டுவதோடு தங்களுடைய மற்ற நண்பர்களையும் உறவினர்களையும் இத்திட்டத்தில் சேர்க்கும் பணியில் ஈடுபட்டால் அது ஞான யக்ஞம் ஆகும்.

டிபாசிட் சந்தாதாரர்களும் ஆண்டுச் சந்தாதாரர்களும் சூழ்நிலையை முன்னிட்டு வேறு வழியின்றிச் செய்ய நேர்ந்துள்ள இச்சிறு கூடுதலைப் பொருட்படுத்தாது தொடர்ந்து சந்தாதாரர்களாக இருந்து தாங்கள் பயனடைவதோடு புதிய சந்தாதாரர்களையும் சேர்த்து அவர்களும் பயனடையும்படி செய்யக்கோருகிறோம்.

இப்பொழுதுள்ள சந்தா விவரம் வருமாறு :

உள்நாடு டிபாசிட் சந்தா	ரூ.	150-00
உள்நாடு வருட சந்தா	ரூ.	15-00
உள்நாடு சகாய சந்தா	ரூ.	10-00
வெளிநாடு வருட சந்தா	ரூ.	35-00

வெளிநாட்டிற்கு டிபாசிட் சந்தாமுறை இல்லை.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31 | துந்துபி ஆடி | ஆரம் 7

பொருளடக்கம் — பக்கம்

அந்தர்யோக விவரங்கள்

சேலத்தில்—18—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

மதுரை ஜில்லா—தேனியில் 21—7—82 புதன்கிழமை

இடம் : ஸ்ரீ கணேச கந்தப்பெருமாள் ஆலயம்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 25—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : பெரிய காளியம்மன் கோவில்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 25—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ண–விவேகானந்த தபோவனம்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 25—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : எட்வர்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 1—8—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 8—8—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சிவன்கோவில் தெருவிலுள்ள சச்சிதானந்த சபை
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—ராஜபாளையத்தில் 15—8—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ பாரதி கல்யாண மண்டபம்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி : மதிய உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31	துந்துபி ௵ ஆடி ௴	ஆரம் 7

பிரார்த்தனை

सर्वभूतेषु सर्वात्मन् या शक्तिरपरा तव ।
गुणाश्रया नमस्तस्यै शाश्वतायै सुरेश्वर ॥

— विष्णु पुराणम्

ஸர்வபூதேஷு ஸர்வாத்மன் யா சக்திரபரா தவ ।
குணாச்ரயா நமஸ்தஸ்யை சாஸ்வதாயை ஸுரேச்வர ॥

— *விஷ்ணுபுராணம்*

சுரேச்வரா, உயிர்களனைத்திற்கும் ஆத்மாவாக நீ இலங்குகின்றாய். உனக்கு அன்னியமல்லாத சக்திதேவி நற்குணங்கள் அனைத்தும் வாய்க்கப்பெற்றவள். அங்ஙனம் சாஸ்வதமாய் இருப்பவளுக்கு நமஸ்காரத்தைத் தெரிவிக்கிறேன்.

சித்த நினைவும் செயும்செயலும், நீஎனவாழ்
உத்தமர்கட்கு ஆன உறவே பராபரமே.

— *தாயுமானவர்.*

அருள் விருந்து

மனம் எப்படியோ மனிதன் அப்படிப்பட்டவன்.

தீமையைச் சகிக்கவல்லவனே அத்தீமையை வெல்லுகிறான்.

உள்ளம் ஒழுங்கு அடைவதற்கேற்ப வாழ்வும் ஒழுங்காகிறது.

மனத்தெளிவுக்கு ஏற்பக் கொள்கைகளும் தெளிவடைகின்றன.

கஷ்டதசையைச் சமாளிக்கவல்லவனுக்கே வாழ்வு கைகூடுகிறது.

தன்னை அடக்கியாள்பவன் முடிசூடிய மன்னனுக்கும் மேலோனாகிறான்.

ஆத்மசொருபத்தில் திளைத்திருக்கத் தெரிந்துகொண்டவனுக்குச் சோர்வு இல்லை.

நதி பள்ளமாகத் தணிந்திருப்பது போன்று நல்லான் பணிவில் தணிந்திருக்கிறான்.

மாயப் பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ள பரத்தை அடையப்பெற்றவனே சாந்தமூர்த்தி ஆகிறான்.

உள்ளத்தில் உருவெடுக்கும் உறுதிப்பாட்டுக்கேற்ப வாழ்க்கைப் பிரச்னைகள் அடிபட்டுப் போகின்றன.

உள்ளிருந்து ஸதா இயம்பிக்கொண்டிருக்கின்ற மனச்சாட்சிக்குச் செவி சாய்க்க வல்லவன் நல்லவனாகிறான்.

இறைவா, என்னைச் சுயநலமற்றவனாக்குவாயாக. உறுதிப்பாடே வடிவெடுத்தவனாக ஆகும்படி செய்வாயாக.

சிறுவர்களைப் பள்ளிக்குப் பயில அனுப்பாது பணம் சம்பாதிக்கப் பயன்படுத்துவது க்ஷீணதசைக்கு அறிகுறியாம்.

அறநெறியைக் கடைப்பிடிப்பதற்கேற்ப வாழ்வு தூயதாகவும், எளியதாகவும், நிறைவுற்றதாகவும் வடிவெடுக்கிறது.

உண்பதும், உறங்குவதும் உயிர்களனைத்துக்கும் பொதுவானவை. மற்றுப் பகுத்தறிவோ மனிதனுக்கே சொந்தமாகும்.

உண்மையைக் கடைப்பிடிப்பவனுக்குச் சோதனை வருத்தத்தை உண்டு பண்ணுவதில்லை; அல்லல்படுதல் என்னும் மேகம் அவனுடைய மனத்தெளிவை மறைப்பதில்லை.

பரமஹம்சர் புகட்டிய
பெருநெறி விளக்கம்

பரமஹம்ச தேவர் பக்தர்களுடன் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார். அவர் பகர்ந்ததாவது:

பரமஹம்சதேவர்: ''கடவுளை அடைதற்கான வழிகளைச் சாஸ்திரங்களினின்று நீங்கள் அறிந்துகொள்ளக்கூடும். அம்முறைகளை நூல்களினின்று கற்றுக்கொண்ட பிறகு அவைகளை நடைமுறையில் கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாடிய லட்சியத்தை அடையப்பெறுவது சாத்தியமாகிறது.

''வெறும் ஏட்டுக்கல்வியால் மனிதனுக்கு ஆவது என்ன? பண்டிதன் ஒருவன் சாஸ்திரங்கள் பல கற்றிருக்கலாம். அவைகளுள் பலவற்றை மேற்கோளாக எடுத்துக்கூறும் திறமையும் அப்பண்டிதனுக்கு அமைந்திருக்கலாம். ஆனால் அப்பண்டிதன் இன்னும் பிரபஞ்ச பந்தபாசங்களிலேயே உழன்று கொண்டிருப்பானாகில், பொருளாசை படைத்தவனாக இருப்பானாகில், இந்திரிய சுகபோகங்களில் பற்றுதல் வைத்திருப்பானாகில் சாஸ்திரங்களின் உட்பொருளை அன்னவன் அறிந்து கொண்டவனல்லன். அத்தகைய மானுடன் ஒருவன் சாஸ்திரங்களை வேண்டியவாறுகற்றிருக்கலாம். அப்படிக்கற்றதனால் அவன் அடைந்தது ஒன்றுமில்லை.

''வருஷத்திலே இத்தனை ஆழாக்கு மழை பெய்யும் என்று பஞ்சாங்கத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அப்பஞ்சாங்கத்தைப்பிழிந்தால் ஒரு சொட்டு ஜலமும் அகப்படமாட்டாது.'' *(இதைக்கேட்டு எல்லாரும் நகைக்கின்றனர்)*

கிரீஷ்: *(புன்முறுவலுடன்)* ''ஐயனே, பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிவதைப்பற்றித் தாங்கள் பகர்ந்தீர்களல்லவா? அதிலிருந்து ஒருசொட்டு ஜலம்கூட அகப்படமாட்டாதா?'' *(இதைக்கேட்டு மீண்டும் எல்லாரும் நகைக்கின்றனர்)*

புன்னகைபூத்தவராகப் பரமஹம்சதேவர் மேலும் பகர்கிறார்: ''பண்டிதர்கள் பெரிய பெரிய விஷயங்களைப்பற்றித் தாராளமாகப் பேசுகிறார்கள். ஆயினும் அன்னவர்களின் மனது எதில் ஊறிக்கிடக்கிறது தெரியுமா? கழுகு வானத்தில் உயரப்பறக்கிறது; ஆயினும் அதனுடைய கண்பார்வை நிலத்தில் எங்கே நாற்றம் எடுத்துள்ள பிணம் இருக்கிறது என்பதை நாடுகிறது.''

கிரீஷரிடம் பரமஹம்சதேவர் மேலும் தெரிவித்ததாவது: ''நரேந்திரன் புனிதமே வடிவெடுத்துள்ள இளைஞனாவான். கலைகள் அனைத்திலும் அவன் திறமை மிக வாய்க்கப் பெற்றவன். இன்னிசைக் கருவிகளை நன்கு மீட்ட வல்லவனாக அவன் இருக்கிறான். இனிப்பாடுதலிலோ அவன் திறமை முற்றிலும் பாராட்டுதற்குரியதாம். கல்லூரிப் படிப்பிலும் அவன் நிபுணன். இவையாவுக்கும் மேலாக அவன் ஜிதேந்திரியன்-பொறி புலன்களை முற்றிலும் வென்றவன். சத்திய விரதத்திலே அவன் நன்கு நிலைபெற்றிருக்கிறான். விவேகமும், வைராக்யமும் வடிவெடுத்துள்ள விப்ரனாக அவன் இலங்குகின்றான். ஒரே மூர்த்தியினிடம் இத்தனை விதத் தெய்வ சம்பத்துக்கள் அமைந்திருப்பது அரிதிலும் அரிதாம்.'' *(மகேந்திரரைப் பார்த்துப் பரமஹம்சதேவர் மொழிகிறார்.)* ''நீ என்ன பகருகின்றாய்? அந்த இளைஞன் அசாதாரணமான பெயர் வழி அல்லனோ?''

மகேந்திரர்: ''ஆம் ஐயனே, அவ்விளைஞன் மகிமைகள் பல வாய்க்கப்பெற்றவனும்.''

இப்போது பரமஹம்சதேவர் கிரீஷரைக் குறித்து மகேந்திரரிடம் மேலும் மொழிந்ததாவது: ''இவன் விசுவாசமே வடிவெடுத்தவன்; இவனிடத்து அருள்தாகம் தலையெடுத்திருக்கிறது.''

இதைக்கேட்ட மகேந்திரர் கிரீஷரை உற்று நோக்கினர். மனதுக்குள்ளேயே அப்பெரியவர் படைத்திருந்த பண்புகளைக் குறித்து மகிழ்வடைந்தார். கிரீஷர் கொஞ்ச காலத்துக்கு முன்புதான் பரமஹம்சதேவரோடு இணக்கம் கொள்ள ஆரம்பித்தார்.

இந்தச் சிறிது காலத்திலேயே பரமஹம்ச தேவர் எத்தகைய பாரமார்த்திகப் பண்பு வாய்க்கப்பெற்ற பெரிய மூர்த்தி என்பதை அறிந்துகொண்டார். தம்மை அறியாது மகேந்திரர் அன்னவரிடம் தெய்விகப் பேரன்பு பூணலாயினர். தமக்குற்ற நண்பர் என்றும் தெய்விகப் பண்பால் தமக்குரிய உறவினர் என்றும் அவர் உணர்ந்தார். பரமஹம்சதேவர் பக்திமிக வாய்க்கப்பெற்றிருந்த அடியார்கள் கூட்டம் என்னும் மாலை ஒன்றை அணிந்திருந்தார் என்று வைத்துக்கொள்ளுவோமாகில், அம்மாலையிலே கிரிஷ் சந்திரகோஷர் அரியதோர் இடம் பெற்றிருந்தார்.

பரமஹம்சதேவர் பக்தி ததும்பும் பாடல் ஏதாவது ஒன்றைப் பாடுவாரா என்று நாராயணன் விண்ணப்பித்தான். அந்த வேண்டுதலுக்கிணங்கிப் பரமஹம்சதேவரும் அன்னை பராசக்தியைக் குறித்துப் பாடல் ஒன்றைப் பாடினர்.

''ஓ மனமே, நம் தாய் ஸ்யாமாவை அன்புடன் உள்ளத்தினுள்ளே வைத்து ஆதரிப்பாயாக. அவள் ஒப்பு உயர்வற்ற செல்வமாவாள். அவளுடைய சாந்நித்தியத்தை ஓ மனமே, நீயும் நானுமே தரிசித்து அனுபவிப்போமாக. நம் இருவரைத்தவிர வேறு யாருக்கும் அவள் சந்நிதானத்தின்கண் அணுக இடம் தரமாட்டோம்.

''ஓ மனமே,ஏகாந்தத்தில்இருந்துகொண்டு அன்னையின் சாந்நித்தியத்தை நன்கு அனுபவிப்போம். இந்திரிய நுகர்ச்சிகளுக்கு அங்குச் சிறிதேனும் இடமில்லை. பஞ்சேந்திரியங்களுள் நாவுக்கு மட்டும் அங்கு வர அனுமதி தருவோம். அந்த நாவானது தாயே, தாயே என்று அன்னையைக் கூவி அழைத்துக் கொண்டிருக்கட்டும்.

''ஈனமான ஆசை ஏதும் அங்கே நுழைந்து நமக்கு இடைஞ்சல் செய்யாதிருக்கும்வண்ணம் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளுவோம். ஆயினும் பேரறிவை அங்கே காவல் வைப்போம். பொருந்தாத பொல்லாங்கு ஏதும் அங்கே நுழைதற்கு அந்த அறிவு இடம் தராது.''

பரமஹம்சதேவர் மற்றோர் பாடல் பாடினர். உலகிலே துயருற்றுத் துடித்துக்கொண்டிருந்தவர்களுடைய நிலையில் தம்மை வைத்து அப்பாடலை அவர் பாடினர். அதன் உட்கருத்தாவது: ''யாண்டும் ஆனந்தத்தில் திளைத்திருக்கும்தாயே,உன்னிடத்திலிருக்கும் ஆனந்தத்தை நாடுகிற இத்தகுதியற்ற குழந்தையைப் புறக்கணித்து விடாதே. தாயே, உன்னுடைய தாமரைத் திருவடிகளைத் தவிர வேறு எதையும் என் மனது நாடாது. நமன் துன்புறுத்தும் பாங்கில் என்னை ஏறிட்டுப் பார்க்கிறான். அன்னவனுக்கு நான் இயம்ப வேண்டியது யாது என்பதைக் கிருபை கூர்ந்து எனக்குத் தெரிவிப்பாயாக.''

அன்னை பராசக்தியைக் குறித்து மற்றும் ஒரு பாடலைப் பரமஹம்சதேவர் பாடியருளினர்.

''என் தாய் பராசக்தி பரம சிவனரோடு ஆனந்தத்தில் திளைத்திருக்கிறாள். வேண்டியவாறு அவள் அமிர்தபானம் பண்ணியிருக்கிறாள். அதன் விளைவாக அவள் தடுமாற்றமுற்றிருக்கிறாள். ஆயினும் அவள் கீழே வீழ்வதில்லை.''

பக்தர்கள் பக்தி ததும்பும் இப்பாடல்களை அமைதியுடன் செவிகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தனர். பிறகு சிறிதுநேரம் மௌனம் நிலவியது. அதைத்தொடர்ந்து பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: ''எனக்குச் சிறிது தடுமன் பிடித்திருக்கிறது. ஆதலால் நன்குபாட எனக்கு இயலவில்லை.''

சிறிது சிறிதாக மாலை இருள் அணுகியது. இரவின் சாயை அச்சூழ்நிலை முழுதையும் மூடியது. கலகலப்பே வடிவெடுத்திருந்த கல்கத்தா நகர் சிறிதுநேரம் அமைதியுற்றிருந்தது. இல்லங்கள் பலவற்றிலிருந்து மணியோசையும் சங்க நாதமும் கிளம்பலாயின. அதைக்கேட்ட பக்தர்கள் வழிபாட்டுக்காக ஏனைய உலக வியவகாரங்களை ஒதுக்கிவைத்தார்கள். இரவும் பகலும் சந்திக்கிற இத்தகைய சந்தியா வேளையானது பரமஹம்சர் உள்ளத்திலே ஓர் ஆழ்ந்த அதித நிலையை உண்டுபண்ணுவதாயிற்று.

அத்தகைய அமைதியும், இனிமையும் வாய்க்கப்பெற்றுள்ள சந்தியா வேளையில் பரமஹம்சதேவர் அன்னை பராசக்தியின் திரு

நாமத்தைப் பரவசநிலையிலிருந்து கொண்டு ஓதுவராயினர். ஆங்குக்குழுமியிருந்த பக்தர்கள் அனைவரும் செவிசாய்த்து அவர் ஓதுவதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். திருநாமத்தை ஓதுதல் முற்றுப் பெற்றானபிறகு அன்னை பராசக்தியிடம் அவர் பிரார்த்தனை பண்ணினார். பரமஹம்சதேவரோ யாண்டும் பரதேவதையிடம் அபேத நிலையில் நிலைத்திருந்தார். அத்தகையவர்க்குப் பிரார்த்தனை எதற்காக? பிழைபோகும் பாங்குடைய மாந்தர்களுக்குப் பிரார்த்தனை எப்படிப் பண்ணவேண்டும் என்று விளக்கிக் காட்டுதல் பொருட்டே ஒருவேளை அவர் பிரார்த்தனை பண்ணினாரோ? அன்னை பராசக்தியிடம் வேண்டி அவர் செய்த பிரார்த்தனை யாவது: ''தாயே, என்னை முற்றும் உன்னுடைய கிருபைக்கு ஆளாக்குகிறேன். உன்னுடைய புனிதம் வாய்ந்த திருவடிகளிலே நான் சரண்புகுகிறேன். உடல் இன்பத்தையோ வசதியையோ நான் நாடமாட்டேன். பேருக்கோ, புகழுக்கோ நான் ஆசைகொள்வேன் அல்லேன். அஷ்ட சித்திகளையும் நான் நாடமாட்டேன். நான் உன்னிடத்துத் தூய பக்திபூண்டிருக்குமாறு கிருபைகூர்ந்துஅனுக்ரஹம் பண்ணுவாயாக. உலக ஆசை ஏதும் நான் பூணும் பக்தியில் புகுந்துவிடலாகாது. சுயநலம் ஏதும் அந்தப் பக்தியினுள் புகுந்து அதன் புனிதத்தைக் கெடுத்துவிடலாகாது. வேறுநாட்டம் ஏதுமின்றி முற்றிலும் பேரன்பின்பொருட்டே நாட்டப்பட்ட பக்தியாக அது இருத்தல் வேண்டும். ஓ தாயே, என்னை உய்வித்தருள்வாயாக. உலக ஆசை ஏதும் என் உள்ளத்தை வந்து தீண்டலாகாது. உலகமுழுதையும் மயக்குகிற உன் மாயாசக்தி என்மீது ஆதிக்கம் செலுத்தாதிருக்க எனக்கு நீ அனுக்ரஹம்பண்ணுவாயாக.''

''காமமும், காசு ஆசையும் என் உள்ளத்தில் எந்தவிதத்திலும் இடம் பெறாதிருக்கும் படி நீ அனுக்ரஹம் பண்ணுவாயாக. பேருக்கும் புகழுக்கும் நான் அடிமைப்படலாகாது. தாயே, மோகன சக்தி மிக வாய்க்கப்பெற்றுள்ள உன்னுடைய மாயையின் ஆதிக்கம் வல்லமை மிக வாய்க்கப்பெற்றது. அதன் போக்கு எத்தகையது என்பதை யாருமே விளக்கிச் சொல்ல முடியாது. ஆதலால் கிருபை கூர்ந்து என் ஆருயிர் தாயே, அந்த மாயையின் வலையிலிருந்து நீ என்னைக் காப்பாற்றி அருள்வாயாக. தாயே! நீயே எனக்குப் புகலிடம் ஆகின்றாய். உன்னைத் தவிர வேறு யாரையும் உற்றார் உறவினராக நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். தாயே! உன்னை வணங்கும் விதத்தை நான் முற்றிலும் அறிந்திலேன். நான் புரியும் ஏதோ அரைகுறை வழிபாட்டை நீ அன்புடன் ஏற்றுக்கொள்வாயாக. உன்னை அடைதற்கு இன்றியமையாத சாதனமாயுள்ள தவம் யாது என்பதை நான்அறிந்திலேன். பக்தியும் ஞானமும் ஏதோ ஒரு போக்கில் பட்டும் படாது என்னிடத்து அமைந்திருக்கின்றன. தாயே, என்மீது கருணை வைத்து அருள்புரிவாயாக.' உன்னுடைய அளப்பரிய கிருபையை என் மீது வைத்து அருள். உன்னுடைய தாமரைத் திருவடிகளிலே நான் மாறாத பக்திவைத்திருக்கும் வண்ணம் நீ அருள்புரிவாயாக.

இந்தப் பாங்கில் பரமஹம்சதேவர் பண்ணிய பிரார்த்தனையானது ஆங்கு அமர்ந்திருந்த பக்தர்கள் அனைவரின் உள்ளத்தையும் அப்படியே கொள்ளை கொண்டு போயிற்று. ஈசுவர வரப்பிரசாதமாக அவரிடத்து அமைந்திருந்த இனிய குரலும் அவர் முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த ஒரு குழந்தையின் இன்னியல்பும் ஒன்றுகூடி அவர்கள் எல்லாரையும் ஆனந்தப் பரவசம் அடைந்திருக்கும்படி செய்துவிட்டன.

கிரீஷ் சந்திரகோஷர் விண்ணப்பித்ததாவது: ''அண்ணலே, தாங்கள் இன்றிரவே அடியேனுடைய இல்லத்துக்கு எழுந்தருளத் திருவுளம் பூணுவீர்களாக.''

பரமஹம்சதேவர்: ''ஏற்கனவே காலம் மிகக் கடந்துபோயிருக்கிறது. மேலும் ஆங்குச் செல்வதால் நேரம் இன்னும் அதிகம் பிடிக்கும் அன்றோ?''

கிரீஷர்: ''இல்லை ஐயனே. தாங்கள்சிறிது நேரத்துக்கு ஆங்குத் திருவடி நாட்டினால் போதுமானது. அதன் பிறகு இன்றிரவு நான் நாடகக் கொட்டகைக்குப் போய்ப் பிணக்கு ஒன்றை இன்றிரவே ஒழுங்குபடுத்தியாகவேண்டும்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

7-3. தத்துவம்ஆம் பார்த்த ஜடஉருவைத் தான்
[சுமந்த
சிந்துஉருஆம் எம்மைத் தெரிசிப்பது எந்
நாளோ.

பிரகிருதித் தத்துவமும், புருஷ தத்துவமும் ஜீவாத்மனிடத்தில் ஒன்றுகூடியிருக்கின்றன. உயிரும் மெய்யும் சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாவதற்கு நிகர் ஜீவாத்மன். உயிர்மெய் எழுத்து யாண்டும் இருந்தபடி இருந்து மொழிக்குப் பயன்படுகின்றது. ஆனால் ஜீவாத்மனுடைய குறிக்கோள் யாண்டும் ஜீவாத்மனாகவே இருப்பது அன்று. அவனுடைய நிஜசொரூபம் ஆத்மா. தானல்லாத உடலைத் தானென்று கருதித் தொல்லைகள் பலவற்றிற்கு அந்த ஜீவாத்மன் ஆளாகி வருகிறான். உத்தமனாகிய அவன் உடலிலே குடியிருக்கும் பொழுதே அந்த உடலைத் தானென்று அபிமானிப்பதை அவன் தவிர்க்க வேண்டும். அந்த உடலுக்கு இருப்பிடம் உலகம். தன்மயமாயுள்ள ஆத்மனே அந்த இடத்தையும் சார்ந்தவனல்லன். இடம் அல்லது தேசம் என்பது மனதின் கற்பனை. மனதற்ற நிலையில் இடமும் ஒடுங்கிப்போகிறது. நாள்தோறும் ஜீவாத்மன் புரிகிற அயர்ந்த உறக்கமே அதற்குச் சான்றாகிறது. ஜீவாத்மன் உலகில் எப்படி வாழ்ந்திருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டை ஆன்றோர்களனைவரும் ஒரே போக்கில் பகர்ந்திருக்கிறார்கள். தாமரை இலை தண்ணீரில் தழைத்தோங்கி வளருவதுபோன்று மானுடன் பிரபஞ்ச வாழ்வில் முன்னேற்றமடைய வேண்டும். தண்ணீரைப் பயன்படுத்துகிற தாமரை இலை அத்தண்ணீரானது தன்னை நனைப்பதற்கு இடம் தருவதில்லை. அதே விதத்தில் உலகில் வாழ்ந்திருக்கும் மனிதன் உலகப்பற்றில் அகப்பட்டுக்கொள்ளலாகாது. உலகிலே மானுடன் வெறுமனே வாழ்ந்திருக்கலாகாது. அவன் தூக்கி வினைசெய்ய வேண்டும். அப்படி அவன் செய்யும் செயலின் வாயிலாக ஆத்மசாதனத்தில் அவன் முன்னேற்றமடைய வேண்டும். அதே வேளையில் அவனுடைய கிருத்தியங்கள் உலக மக்களுக்கு நல்வழியில் செல்லுவதற்கு நன்கு பயன்படவேண்டும். அப்படிச் செய்கின்றவனே உலகில் வாழ்வாங்கு வாழ்கின்றான். இதற்கு மாறாக உடற் பற்றை வளர்த்துக்கொண்டு அந்த உடலைப் பேணுதலிலேயே அல்லும்பகலும் கண்ணும் கருத்துமாயிருப்பானாகில் அன்னவன் பிறப்பெடுத்தது வீணிலேயாம். உடலும் அதற்கு ஆதாரமாயிருக்கும் உலகும் இருபத்து நான்கு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவைகள். அந்த இருபத்து நான்கு தத்துவங்களாவன: பூதங்கள் ஐந்து, அவைகளின் தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் கரணங்கள் நான்கு. இங்ஙனம் இருபத்து நான்கு தத்துவங்கள் மயமாயிருக்கிற உடலைச்சுமந்து திரிவதற்காக மானுடன் ஜன்மம் எடுத்தவனல்லன். அந்த உடலைத் தேவாலயமாகக் கருதிக்கடவுள் வழிபாட்டுக்கென்றே அதைப் பயன்படுத்துவானாகில் அவன் நல்வாழ்வு வாழ்ந்தவனாகிறான் என்பது இந்தக் கண்ணியின் கோட்பாடாம்.

7-4 பஞ்சப் பொறியைஉயிர் என்னும்அந்தப்
[பஞ்சம்அறச்
செஞ்செவே எம்மைத் தெரிசிப்பது எந்நாளோ.

பஞ்சம் அற-சிறுமையானது ஒழிய.

ஐம்பொறிகள் பிரபஞ்சத்தோடு தொடர்பு வைப்பதற்கு ஏற்ற ஞானக் கருவிகளாக அமைந்திருக்கின்றன. சிசு ஒன்று கைக்கு அகப்பட்டவை யாவையும் வாயில் வைத்துச் சுவைக்க முயலுகிறது. சுவைப்பதன் வாயிலாக உயிர்கள் உணவை ஏற்கின்றன. அப்படி ஏற்பதன் வாயிலாகத் தனக்குத் தேவையாயுள்ள உணவை எல்லா உயிர்களும் ஏற்றுக்கொள்ளுகின்றன. நாவுக்கு ஒத்திருப்பதைப் பொருந்திய உணவாகப் புசிப்பதும், ஒவ்வாததைத் துப்பித் தள்ளுவதும் ஜங்கமங்களின் போக்கு ஆகும். ஆகவே, அன்னமயமாகப் புறத்திலுள்ள

பொருள்களைச் சுவைத்துப்பார்த்து ஒவ்வோர் உயிரும் தனக்கு ஒத்ததைப் புசித்து, செமித்துத் தன்மயமாக்குகிறது. ஆதலால் சுவைத்தலுக்கேற்ற நா ஒரு ஞானேந்திரியமாக அமைந்திருக்கிறது. பிறந்த குழந்தை கண் எதிரே உள்ள பொருள்களையும், மக்களையும் உற்று நோக்குகிறது. மக்கள் இடம் மாறிப் போனால் அவர்கள்போகிற இடத்துக்குத்தன் கண்ணைத் திருப்பும் திறமை சிறு குழந்தைக்கு இல்லை. நாள் ஏற ஏறத் திரும்பிப் பார்க்கும் திறமையும் அக்குழந்தைக்கு வந்து அமைகிறது. அடுத்தபடியாக உற்றாரை அடையாளம் தெரிந்துகொள்ளும் அறிவுத் தெளிவு அக்குழந்தைக்கு வருகிறது. இன்னும் சிறிது காலத்துக்குப் பிறகு தன் பார்வையைப் பயன்படுத்திப் பார்க்கத்தக்கது எது, தகாதது எது, உறவாடுவதற்கு ஏற்ற உயிர்கள் எவை, ஒதுக்கித் தள்ளுவதற்கேற்ற எதிரிகள் யார் என்பனவற்றையும் குழந்தை அறிந்துகொள்ள வல்லதாகிறது. ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சி உடலெங்கும் வியாபித்திருக்கிறது. அத்தகைய அறிவைக்கொண்டு வெப்பம், தணுப்பு, மிருதுவானது, கடினமானது, தொடத் தக்கது, தகாதது ஆகியவற்றை வளர்ந்து வரும் சிசு அறிந்துகொள்ளுகிறது. ஓசை அல்லது சப்தம் காதின் வாயிலாகக் கிரஹிக்கப்படுகிறது. ஓசையில் அமைந்துள்ள வேற்றுமையைக் கொண்டு உற்றாரையும் வேற்றாரையும் பாகுபடுத்தும் திறமை சிறுவன் ஒருவனுக்கு வந்தமைகிறது. கேட்பதன் வாயிலாக ஓசையை உண்டுபண்ணும் திறமை குழந்தைக்குத் தானாகவந்தமைகிறது.அம்முறையில் மொழி வளர்க்கப்படுகிறது. மொழி ஓங்க ஓங்கக் கருத்துக்கள் அதிகமாகின்றன. இதை முன்னிட்டே பிரபஞ்ச அமைப்பை விளக்குகின்ற வேதங்கள் சுருதிகள் எனப்பெயர் பெற்றுள்ளன. சுருதி என்னும் சொல் காதால் கேட்டு அறிந்தது எனப்பொருள் படுகிறது. மெய்ப்பொருள் ஆராய்ச்சி முழுதும் மொழியின் வாயிலாக நிகழ்கிறது. அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணையாயிருப்பது செவி என்னும் ஞானேந்திரியம். ஐந்தாவது ஞானேந்திரியமாயிருப்பது மூக்கு. அதன் துணை கொண்டு சுவாசிக்கும் காற்று நல்லதா கெட்டதா எனப் பாகுபடுத்தப்படுகிறது. வாழ்ந்திருக்கும் காலமெல்லாம், மனிதன் சுவாசித்துக் கொண்டேயிருக்கிறான். உறங்குகின்ற பொழுதும் மூச்சை வாங்குதலும், விடுதலும் ஓயாது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அங்ஙனம் சுவாசிக்கின்றவன் தூங்குகின்ற பொழுதும் பொருந்தாத காற்றை அறிந்துகொள்ளும் திறமை படைத்தவனாக இருக்கிறான்.

இங்ஙனம் ஐம்பொறிகளும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்துவித அறிவுத் தொழிலின் வாயிலாகப் புறவுலகோடு தொடர்பு கொள்ளுகின்றன.

7-5. அந்தக் கரணம்உயிர் ஆம்என்ற அந்தரங்க
சிந்தைக் கனைத்திலஎம்மைத் தேர்ந்துஅறிவது
[எந்நாளோ.

புறக்கரணங்களில் ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து ஆகிய இந்தப் பத்துக் கரணங்களும் ஸ்தூல சரீரத்தின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இனி, அந்தக்கரணங்கள் முறையே மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்று இயம்பப்படுகின்றன. இன்பத் துன்பங்களை உணரும் பாங்கும் நலம் கேடுகளைப் பாகுபடுத்தும் பண்பும் இவைகளிடத்தில் இருப்பதால் இவைகளை ஆத்ம சொரூபமாகக் கருதுவது முற்றிலும் பரிபாகமடையாதவர்களுடைய போக்கு ஆகும். தண்ணீரில் பிரதிபிம்பிக்கப்பட்ட சூரியன் மூல சூரியன் ஆகமாட்டாது. அதே பாங்கில் ஆத்ம சைதன்யம் அந்தக்கரணத்தில் பிரகாசிக்கிறது. அங்ஙனம் பிரகாசிக்கின்ற அறிவோ ஆனந்தமோ அந்தக்கரணங்களுக்குச் சொந்தமாக மாட்டா. தூயவைகளாகும் பாங்கும், மலினப்படும் பாங்கும் அந்தக்கரணங்களுக்கு இருப்பதால் அவைகள் ஆத்ம சொரூபம் ஆக மாட்டா. ஆத்மப் பிரகாசமோ யாண்டும் இருந்தது இருந்தபடி இருக்கிறது. ஆதலால் ஆத்மசாதகன் பண்பட்ட அந்தக்கரணங்களையும் ஆத்ம சொரூபமாக எண்ணும் பாங்கு பெறலாகாது என்பது இக்கண்ணியின் கருத்து.

பழமையும் புதுமையும்

(சுவாமி விவேகானந்தர்)

இந்தியாவில் நிலவிவரும் ஜாதிப்பிரிவினை, மேனாட்டிலுள்ள ஜாதிப்பிரிவினைகளை விட மேலானது என்று கருதுகின்றேன். ஜாதி முற்றிலும் அவசியம் என்று சொல்லவில்லை. ஆனால் ஹிந்து என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் உங்கள் கதி என்னவாகி இருக்கும்? ஹிந்து உணர்ச்சி நமக்கு இல்லாவிட்டால் அன்னியர்கள் நம்மை ஒழித்துக் கட்டி விடுவார்கள். முகம்மதியர்கள் இந்தியாவைத் தூளாக்கிவிடுவார்கள். இந்தியச் சமுதாயம் இன்னும் உயிர்பெற்று இருக்க முடியுமா? ஹிந்து சமயம், முன்னேறிக் கொண்டே இருக்கிறது. சில சமயம் அந்நியப் படையெடுப்பால் முன்னேற்றம் மெதுவாக நிகழ்கிறது. மற்றச் சமயங்களில் முன்னேற்றம் விரைவாக நிகழ்ந்து வருகிறது. தாய்நாட்டு மக்களாகிய உங்களுக்கு நான் ஒன்று சொல்கின்றேன். "உங்களை நான் குறைகூறவில்லை. நம்நாட்டின் பழமையை உற்று நோக்குகின்றேன். நம் பண்டைய மக்கள் தமக்கிருந்த சூழ்நிலையில் மிகச் சிறப்பான செயல்களைச் செய்து இருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் செய்த செயல்களை இக்காலத்துக்கு ஏற்றவாறு திருத்தி அமைக்கவேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

மதத்தில் மாறியமைகின்ற பகுதிகளும் இருக்கின்றன; மாறாத பகுதிகளும் இருக்கின்றன. மதத்திலுள்ள கிரியாம்சங்களைக் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு மாற்றியமைக்கலாம். மதத்தின் சாராம்சமாக இருக்கும் தத்துவம் ஒருநாளும் மாறாது. மதம் வாழ்க்கைக்கு அவசியமானதே. மதத்திலுள்ள சடங்குகளைக் காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளலாம். பழமையை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான புது அமைப்புக்களை உண்டுபண்ணலாம். மதத்தை அழிக்க விரும்புவது அறிவீனம். பழமையின் பரிணாமமே புதுமை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

நம் தாய்நாட்டுக்கு உலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. எந்த நாடும் இந்தியாவைப் போன்று பொறுமையைக் கடைப்பிடிப்பது இல்லை. ஹிந்து பொறுமையே வடிவெடுத்தவன்; ஹிந்து சகிப்புத்தன்மை உடையவன். மேலாம் உண்மைகள் எப்பொழுதுமே இந்தியாவிலிருந்துதான் மற்ற நாடுகளுக்குப் பரப்பப்பட்டு வந்திருக்கின்றன. பேருண்மைகளைக் கண்ட ஞானிகள் இந்தியாவில்தான் தோன்றி இருக்கிறார்கள். மற்ற நாடுகள் தங்களுடைய கொள்கைகளை யுத்த பேரிகைகளைக் கொண்டும் ஆயுதந் தாங்கிய சேனைகளைக் கொண்டும் பரப்பி வந்தன. இரத்த வெள்ளத்தின் மூலமாகவும் இலட்சக்கணக்கான மக்களை வதைப்பதன் மூலமாகவும் தங்கள் கொள்கைகளைப் பரப்பினார்கள். ஆனால் இந்தியா பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அமைதியாக இருந்து வந்திருக்கிறது. சரித்திர காலத்துக்கு முன்பிருந்து இன்றுவரையிலும் உயர்ந்த கருத்துக்களையும் சிந்தனைகளையும் இந்தியா மற்ற நாடுகளுக்குப் பரப்பி வந்திருக்கிறது. இச்செயலை அன்புடனும் சமாதானத்துடனும் செய்து வந்திருக்கிறது.

இந்தியா பழங்கால வாழ்க்கையை ஆழ்ந்து சிந்திக்கின்ற அளவு எதிர்காலமும் மிகச் சிறப்பாக அமையும். இந்தியாவின் பழைய பெருமைகளை வீடுதோறும் எடுத்துச் சென்று போதிப்பவர் தாய்நாட்டிற்குப் பெரிய சேவை செய்பவராகின்றார். இந்தியாவின் வீழ்ச்சிக்குப் பழங்காலப் பழக்கவழக்கங்களும் சட்டதிட்டங்களும் காரணம் அல்ல. பழங்காலப் பழக்கவழக்கங்களும் சட்டதிட்டங்களும் சரியானமுறையில் செயல்முறைக்குக் கொண்டு வரப்படாமையினால், மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாகக் கைக்கொண்டமையினால், இந்தியா வீழ்ச்சியுற்றது. இந்தியாவின் பழமை காலத்துக்கேற்றமுறையில் செயல்படும்பொழுதுதான் இந்தியா மீண்டும் பழைய பெருமையை எய்தும்.

சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

[216ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தியா முழுவதும் ஸ்ரீ சைதன்யருடைய செல்வாக்குப் பரவியிருக்கிறது. பக்தி மார்க்கம் எங்கெங்கு அனுஷ்டிக்கப்படுகிறதோ அங்கங்கெல்லாம் சைதன்யரைப் போற்றவும் வழிபடவும் செய்கிறார்கள். ஸ்ரீவல்லபாச்சாரியருடையசம்பிரதாயம்முழுவதும் ஸ்ரீ சைதன்யரால் ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயத்தின் ஒருபிரிவுதான் என்று நம்புவதற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன. வங்காளத்தில் ஸ்ரீ சைதன்யருடைய சிஷ்யர்கள்என்றுசொல்லப்படுபவர்களுக்குச் சைதன்யருடைய சக்தி இந்தியா முழுவதும் எப்படி இயங்கி வருகிறது என்பது பற்றித் தெரியாது. சைதன்யர் இந்தியாவின் ஒவ்வொரு பகுதிக்கும் கால்நடையாகச் சென்று, வீடு வீடாகப் பக்திப் பிரசாரம் செய்தார். சமுதாயத்தில் மிகக் கீழ்நிலையில் உள்ளவர்களையும் கடவுளிடம் பக்தி கொள்ளுமாறு இறைஞ்சி வேண்டிக்கொண்டார். இன்று அவருடைய சீடர்களோ மடங்களுக்குத் தலைவர்களாக ஆகிவிட்டார்கள்.

சமயவாழ்வில் வங்காளம் இந்தியாவின் மற்றப் பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டு இருக்கிறது. வங்காளத்தில் விசித்திரமானதும், வைதிக நெறிக்குப் புறம்பானதுமான பரம்பரைக் குலகுரு சம்பிரதாயம் நிலவி வருவதே அதற்குக் காரணம். பரம்பரைக் குலகுரு சம்பிரதாயம் வங்காளத்தில் மட்டும்தான் காணப்படுகிறது. சந்நியாச வாழ்க்கை ஞானப் பண்பாட்டுக்கு மிக முக்கியமானதாகும். சந்நியாசிகளின் சங்கம் வங்காளத்தில் இன்றும் முக்கியத்துவம் பெறவில்லை. வங்காளத்தில் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் துறவை விரும்புவதில்லை. அவர்களுடைய மனப் போக்குப் போகத்தை நாடுவதாக இருக்கிறது. போகத்தை நாடும் அவர்களுக்கு அகமுகப்பட்ட ஆழ்ந்த ஆன்மீகக்கருத்துக்கள் எப்படி விளங்கும்? தியாகம் ஒன்றினாலேயே அழியாப் பெருநிலை அடையப்பெறுகிறது என்பது வேதவாக்கு. தியாகத்தாலன்றி அழியாப் பெருநிலையை எப்படி அடைய முடியும்?

ஞான ஒளி வீசும் தியாகிகள் வேதாந்த உண்மைகளை ஹிந்தி மொழி பேசும் பிரதேசங்களில் எல்லாம் வீடு வீடாகச் சென்று போதித்து வந்தார்கள். பஞ்சாபின் மன்னனை இரஞ்சித்சிங் ஆட்சியில் தியாகத்துக்கு உத்வேகம் அளிக்கப்பட்டது. வேதாந்தத் தத்துவத்தின் மகத்தான போதனைகள் கீழ்க்குல மக்களுக்கும் போதிக்கப்பட்டன. பஞ்சாபி குடியானப் பெண் ஒருத்தி பெருமிதத்தோடு கூறுவதாவது: ''என்னுடைய இராட்டையின் சக்கரங்கூட 'ஸோஹம் ஸோஹம்' என்று ஜபிக்கிறது.'' சந்நியாச உடை தரித்த மேத்தார் வகுப்புத் தியாகிகள் ரிஷிகேசத்தின் காடுகளில் வேதாந்தப் பாடங்களைப் படிப்பதை நான் பார்த்திருக்கின்றேன். கௌரவமுடைய உயர்தர மக்கள் அத்தியாகிகளின் காலடிகளில் அமர்ந்து வேதாந்தப் பாடம் கற்பதில் மகிழ்ச்சியடைகின்றனர். ''கீழ்க்குல மனிதனிடமிருந்தும் பரஞானம் பெறமுடியும்'' என்ற உண்மையை நாம் அறிவோம்.

வடமேற்கு எல்லைப் பகுதியிலும் பஞ்சாபிலும் ஆன்மீகக் கல்வி வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய இடங்களைவிட அதிக அளவுக்கு முன்னேறியிருக்கிறது. சன்னியாசிகள் என்பவர்கள் சதா சஞ்சரித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பந்திகள் என்றும் வேதாந்திகள் என்றும் தசநாமிகள் என்றும் அழைக்கப்படுவார்கள். வீடுதோறும் அவர்கள் தங்களை அறியாது சமயக் கல்வியைப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவைத் தவிர அவர்கள் வேறு எதையும் எதிர்பார்ப்பது இல்லை. அவர்கள் எவ்வளவு பெருந்தன்மை உடையவர்களாகவும் சுயநலம் அற்றவர்களாகவும் திகழ்கிறார்கள்! தங்களை எந்தச் சம்பிரதா

யத்தினருடனும் ஐக்கியப்படுத்திக்கொள்ளாமல் சுயேச்சையுடைய பந்திகள் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் ராஜபுதனம் முழுவதும் நாற்றுக்கணக்கான பள்ளிகளையும் தர்மஸ்தாபனங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார். காடுகளில் அவர் வைத்தியசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இமயமலையின் பள்ளத்தாக்குகளில் எத்தனையோ பாலங்களைக் கட்டியிருக்கிறார். அவர் தம் கையால் காசைத் தொடுவதில்லை. அவருக்கு ஒரு கம்பளியைத் தவிர இப்பூவுலகில் சொந்தமானது ஒன்றும் இல்லை. ஒரு கம்பளியை மட்டும் அவர் வைத்திருந்ததால் கம்பளிவாலா சுவாமி என்ற புனைபெயர் அவருக்கு ஏற்பட்டது. அவர் வீடுவீடாகச் சென்று பிக்ஷை ஏற்று உண்பார். யாருக்கும் சுமையாக இருக்கக்கூடாது என்பதற்காக ஒரே வீட்டில் உணவை ஏற்றுக்கொள்ளமாட்டார். இத்தகைய நடமாடும் தெய்வங்கள், தெய்வத்தன்மை பொருந்திய மக்கள் சனாதன தர்மமாகிய நம் மதத்தைக் காப்பாற்றி வரும் வரையில் நம்முடைய பழைய மதம் அழிந்துவிடும் என்று நினைக்கிறீர்களா?

அமெரிக்க நாட்டில் மத போதகர்கள் ஆண்டுக்கு ரூபாய் மூவாயிரம், நாலாயிரம், ஐந்தாயிரம், ஒன்பதாயிரம் என்று சம்பளம் வாங்குகிறார்கள். அவர்கள் வாரத்துக்கு ஞாயிற்றுக்கிழமை மட்டும் இரண்டு மணி நேரம் பிரச்சாரம் செய்கிறார்கள். அதுவும் வருடத்துக்கு ஆறு மாதங்கள் மட்டுமே வேலைசெய்கிறார்கள். அவர்கள் மதத்துக்காகக் கோடி கோடியாகச் செலவழிக்கின்றார்கள். முற்றிலும் சுயநலமற்ற கம்பளி சுவாமிகளைப் போன்ற தியாக மூர்த்திகளைச் சோம்பேறிகள், நாடோடிகள் என்று கருதும்படி வங்காள இளைஞர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ''என்னுடைய பக்தர்களிடம் பக்தி பூண்டவர்கள் யாரோ அவர்களே எனக்குச் சிறந்த பக்தர்களாகிறார்கள்'' என்பது நம் சமய போதனையாகும்.

நூலறிவு இல்லாத ஒரு துறவியை எடுத்துக்கொள்வோம். அவர் கிராமப்புறத்திற்குச் செல்லும்போது அவருக்குத் தெரிந்ததைக் கிராமப்புற மக்களுக்குப் புகட்டுகிறார். துளசிதாசர், சைதன்யர், ஆழ்வார் போன்ற அருளாளர்களுடைய கருத்துக்களைத் தமக்குத் தெரிந்த அளவு கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றார். அவருடைய செயல் கிராம மக்களுக்கு நன்மை செய்யும் அன்றோ? அவர் அதற்காகப் பொருளுதவி எதையும் எதிர்பார்ப்பதில்லை. தம் வயிற்றுக்குச் சிறிது உணவும், உடுக்க உடையும் இருந்தால் அவருக்குப் போதுமானது. அத்தகைய பெருமக்களைக் குறித்துக்குறைகூறிப் பேசுபவர்கள் தாங்கள் நாட்டுக்காக என்ன செய்கிறார்கள் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். பொதுமக்களுடைய பொருளையும், உழைப்பையும் பயன்படுத்திக் கல்வியறிவைப் பெற்றுள்ள இளைஞர்கள் தங்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியவைகளைச் சம்பாதிக்க முயலுகிறார்கள். யாருடைய உழைப்பில் தாங்கள் கல்வி பெற்றார்களோ அவர்களுக்கு ஒன்றும் செய்வதில்லை. அவ்விளைஞர்கள் நாட்டிற்கு நலம் செய்துகொண்டிருக்கும் துறவிகளைக் குறித்து நாடோடிகள் என்று சொல்லுகிறார்கள்.

இந்துமதத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தைக்குறித்து வங்காளத்திலுள்ள சில சகோதர மக்கள் குறை கூறுகின்றார்கள். இந்துமதம் தற்பொழுதுதான் வங்காளத்தினுள் ஊடுருவிக்கொண்டிருக்கிறது. வங்காளத்தில் வெகுகாலமாக உண்ணல்,அருந்துதல், மணம்புரிந்துகொள்ளுதல் போன்றஅப் பிராந்தியப் பழக்கவழக்கங்களின் தொகுதிகள் தாம் சமயம் என்று கருதப்பட்டு வந்தன. ஆகையினால் இந்துமதத்தில் ஏற்பட்ட அபிவிருத்திக் கருத்துக்கள் அவர்களுக்குக் குறையுடையவையாகத் தென்படலாம்.

இந்தியா முழுவதிலும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் போதித்து வரும் இந்து சமயக் கோட்பாடானது சாஸ்திரங்களுக்குப் பொருத்தமானதா இல்லையா என்பது பற்றி இங்கு விமர்சனம் செய்ய நேரமில்லை. ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களைக் குறைகூறுபவர்களுக்குச் சில குறிப்புக்களை இங்கே தருகின்றோம். அவை அவர்களைப் புரிந்துகொள்வதற்கு உதவி செய்யும்.

(தொடரும்)

யோக வாழ்வு

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1974ஆம் ஆண்டில் திருவேடகத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கான கோடைப் பயிற்சி முகாமில் நிகழ்த்திய சொற்பொழிவு.)

[214ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயமப் பகுதியிலுள்ள அஹிம்சையை ஆராய்ந்தோம். அடுத்து, சத்தியத்தை எடுத்துக்கொள்வோம்.

'தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்'

என்பது பொய்யாமொழி.

சத்தியமே பேசும்பொழுது மனச்சாட்சி தெளிவாகின்றது. சத்தியத்துக்கு மாறுனதைப் பேசும் பொழுதோ, எண்ணும் பொழுதோ மனச்சாட்சி கெட்டுப்போகின்றது. சத்தியத்திலிருந்து பிறழ்கின்றபொழுது மனச்சாட்சியை ஓர் இருள் மறைத்துவிடுகிறது. சத்தியத்திலேயே ஒருவன் நிலைபெற்று இருப்பானுகில் அவன் ஞானவான் ஆகின்ருன். கலியுகத்தில் சத்தியத்திற்கு நிகரான தவம் இல்லை. ஹரிச்சந்திரன் என்னும் அரசன் சத்தியத்தைக் கடைப்பிடித்தான். அவன் வாழ்க்கையில் பெரிய பெரிய சோதனைகள் வந்தன. சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக ஹரிச்சந்திரன் நாட்டை இழந்தான். மனைவியையும், மகனையும் சத்தியத்தினின்றும் பிசகாதிருப்பதற்காக விலைக்கு விற்ருன். கடைசியாகத் தன்னையும் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக வீரபாகு என்னும் புலையனுக்கு விலைக்கு விற்ருன். நாடு, நகரம், மனைவி, மகன், தான் ஆகிய அனைத்தையும் இழக்கும்படியான சோதனைகள் ஹரிச்சந்திரனுக்கு வாழ்க்கையில் நேர்ந்த பொழுதிலும் தான் மட்டும் சத்தியத்தினின்றும் பிசகாதவனுக நடந்துகொண்டான். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கெல்லாம் அத்தகைய சோதனைகள் வரும். அப்பொழுது அவர்கள் ஹரிச்சந்திரன் போன்று நடந்துகொள்ளவேண்டும். ஹரிச்சந்திரனுக்கு எத்தனையோ சோதனைகள் வந்தபொழுதிலும் அவன் சத்தியத்தை விட்டுப் பிசகவில்லை. சத்தியம் கடைப்பிடித்தது ஹரிச்சந்திரன் செய்த தவம் ஆகின்றது. அவன் சத்தியத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் பரஞானத்தைப் பெறத் தகுதியுடையவன் ஆனுன். சத்தியத்தில் நிலைபெற்றிருப்பவன் எண்ணியதை எண்ணியாங்கு அடையப்பெறுபவன் ஆகின்ருன். சத்தியத்துக்கு மாறுனதை எண்ணுதிருக்கும்பொழுது மனம் உறுதிப்பாடு உடையதாகின்றது. அத்தகைய உள்ளத்தில் உதிக்கின்ற எண்ணம் நிறைவேறியே தீரும். இதற்குப் பாரதத்தில் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வோம்.

ஒரு சமயம் யுதிஷ்டிரன் தம் தம்பிமார்களுடனும், திரௌபதியுடனும் தாங்கள் வாழ்ந்த குடிசையின் வாயிலில் வந்து நின்ருர். அப்பொழுது இரவு நேரம். வாயிலில் நின்றபடியே உள்ளே இருந்த தம் தாயாரிடம் அவர் கூறியதாவது: 'அம்மா! இன்று நாங்கள் புதிய பிக்ஷைகொண்டு வந்திருக்கின்ரேம்.' தாயார் உள்ளிருந்தபடியே, 'ஐவரும் அதை அனுபவியுங்கள்' என்று கூறினுள். வெளியில் வந்து பார்த்தபொழுது மக்கள் ஐவருடனும் திரௌபதி தேவியும் நின்ருள்; திகில் அடைந்தாள். 'நான் இது வரையிலும் சொன்னது எதுவும் பொய் போனதில்லை. ஐவரும் வைத்து அனுபவியுங்கள் என்று சொன்னது திரௌபதியை வைத்து ஐவரும் அனுபவியுங்கள் என்பதைக் குறிக்கும். இது எப்படிச் சாத்தியமாகும்?' என்று திகைப்புற்றவளாய் மௌனமுற்று நின்ருள். குந்தியின் மனதில் இருந்ததை தர்மன் அறிந்துகொண்டார். 'என்னுடைய மனதிலும் தர்மத்துக்கு மாருன எண்ணம் இதுவரையிலும் உதித்ததில்லை. ஐவரும் திரௌபதியை மணப்பது தர்மம் ஆகுமா?' என்று எண்ணுகின்ருர். தர்மனும் குந்தி தேவியும் பெரிய மூர்த்திகள் ஆவார்கள். அவர்கள் எப்பொழுதும் சத்தியத்தை விட்டுப் பிசகியது இல்லை. அவ்வமயம் தர்மருடைய உள்ளம் சொல்லியதாவது: 'திரௌபதியை ஐவரும் மணப்பது தர்மத்துக்கு முரணுகாது.' எனவே அவர் தாயாரிடம்,

'அம்மா! கவலைப்படாதீர்கள். எல்லாம் மங்களமாக முடியும்' என்று கூறினர். சத்தியம் பேசுபவர்களுடைய உள்ளத்தில் எண்ணும் எண்ணம் நிறைவேறியே தீரும் என்பது சத்தியத்தினுடைய மஹிமையை வெளிப்படுத்துகிறது.

சத்தியத்தைக் கடைப்பிடித்து வருகிறவர்களுக்குச் சத்தியமார்க்கம் விளங்குகிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டி அரசியல் துறையில் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி ஆராயும். ஆனால் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாது திகைக்கும். அப்பொழுது மஹாத்மா காந்தி சிறிது காலம் அவகாசம் கேட்டு அதைப்பற்றிச் சிந்திப்பார். உண்ணாவிரதம் இருந்து பிரார்த்தனைமூலம் அதற்கு வழிதேட ஆரம்பிப்பார். ஆணவ அகங்காரத்தை அகற்றிவிட்டு உள்ளிருக்கும் மனச்சாட்சி என்ன வழி காட்டுகிறது என்பதை மஹாத்மா கூர்ந்து கவனிப்பார். அவருக்குச் சரியான வழியை அது காட்டித்தரும். மனச்சாட்சி காட்டும் வழியைப் பின்பற்றுவார். எடுத்துக்கொண்ட காரியம் வெற்றிகரமாக முடியும். அர்ஜுனனுக்குப் போர்புரிவதா கூடாதா என்ற ஐயப்பாடு வந்தபொழுது கண்ணீரும் கம்பலையுமாகக் கிருஷ்ணனிடம் தன் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன். அவன் கிருஷ்ணனிடம் பிரார்த்தித்ததாவது:

कार्पण्यदोषोपहतस्वभावः पृच्छामि त्वां धर्मसम्मूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां
त्वां प्रपन्नम् ॥

கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா:
யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தன்மே
சிஷ்யஸ்தேஅஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம்

'சிறுமை என்ற கேட்டினல் நல்லியல்பை இழந்த நான் அறநெறியை அறியப்பெருது மயங்கி உம்மை வினவுகின்றேன். எனக்குச் சிறப்பினுவதை உறுதியாக இயம்பும்; நான் உமது சிஷ்யன்; தஞ்சம் அடைகின்றேன்; உபதேசித்து அருளும்.' இப்பிரார்த்தனையை மஹாத்மா காந்தி தமக்குரிய தாக்கிக்கொண்டார். இந்த மனநிலை அவருக்கு வரும் பொழுது அவருடைய உள்ளொளி அவருக்கு வழிகாட்டித்தரும். உள்ளொளி காட்டுகின்ற நெறியில் செல்வார்; காரியம் வெற்றிகரமாக முடியும். உள்ளொளிகாட்டும் வழியில்சென்று அவர் தோல்வி அடைந்ததில்லை. இங்ஙனம் சத்தியத்தைக் கடைப்பிடித்த பெரியார்கள் எல்லாரும் வெற்றியடைந்திருக்கிருர்கள். 'நானேதும் அறியாது என் உள்ளத்துள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்ருய்' என்று அப்பர் சுவாமிகள் பகர்கின்ருர். உள்ளத்துக்குள்ளே இறைவனேடு தொடர்பு வைக்கத் தெரிந்துகொள்ளவேண்டும். உயிர்கள் அனைத்துக்கும் பொதுவாக இருந்து அவைகளின் உள்ளத்திலிருந்து பரம்பொருள் வழிகாட்டிக்கொண்டு இருக்கிருர். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்கள் அப்பரம்பொருளோடு யோகம் செய்ய முடிகிறது. இறைவன் சர்வ வியாபி என்றும் சர்வக்ஞன் என்றும் சர்வ சக்திமான் என்றும் அழைக்கப்படுகின்ருர். அத்தகைய பொருளோடு யோகம் பண்ணும்பொழுது அப்பொருள் நமக்கு வழிகாட்டுகின்ருர். மஹாத்மா காந்தியை உப்புச்சத்தியாக்கிரகம் செய்யும்படி அவருள்ளிருந்து பரம்பொருள் தூண்டினர். உப்புச்சத்தியாக்கிரகச் செய்தி வைச்ராய்க்கு எட்டியபொழுது வைச்ராய் காந்தி போக்கில் போகட்டும் என்று சொல்லி அதை அலட்சியப்படுத்தினர். ஆரம்பத்தில் நான்கைந்து பேருடன் காந்தியடிகள் தண்டி யாத்திரை புறப்பட்டார். சத்தியத்தின் பேரில் நம்பிக்கை வைத்து அவர் அந்த யாத்திரையை மேற்கொண்டார். அவர் பம்பாய் போய்ச் சேர்ந்தபொழுது இரண்டு இலட்சம் மக்கள் சேர்ந்துவிட்டார்கள். மஹாத்மா காந்தி ஆரம்பித்த அதே நேரத்தில் இராஜகோபாலாச்சாரியாரும் உப்புச்சத்தியாக்கிரகத்தில் இறங்கினர். அவர் வேதாரண்யம் சென்ற பொழுது இலட்சம் மக்கள் கூடிவிட்டார்கள். சென்னை, கள்ளிக்கோட்டை போன்ற கடற்கரைகளிலெல்லாம் இலட்சக்கணக்கான மக்கள் கூட ஆரம்பித்துவிட்டனர். ஆங்கில அரசாங்கத்தினர் அவ்வெழுச்சியை அடக்க முடியாது திண்டாடினர்கள். மஹாத்மா

காந்தி அதில் முழு வெற்றியடைந்தார். சத்தியத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே மஹாத்மா காந்தி ஆட்டம் காணச்செய்துவிட்டார். சத்தியத்தில் நிலைபெறுகின்றபொழுது ஒருவர் யோகியாகவும் மேன்மகனாகவும் ஆகின்றார் என்பதைக் காந்தியடிகள் தம் வாழ்க்கையில் நிரூபித்து இருக்கின்றார்.

அஸ்தேயம் அல்லது கள்ளாமை என்ன என்பதை ஆராய்வோம். உடல் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாததாகிறது. நாம் உண்ணுகின்ற உணவுக்குப் பாடுபடவேண்டும். பாடுபடாது உண்கின்றவர்கள் யாரோ சம்பாதித்ததைத் திருடி உண்பவர்களாகின்றார்கள். ஒவ்வொரு நாளும் உண்பதற்கு முன்பு 'இன்றைக்கு இவ்வுணவுக்கேற்ற உழைப்பு உழைத்திருக்கின்றேனா?' என்று எண்ணிப்பார்க்கவேண்டும். பாடுபடாது உண்பவர்கள் திருடிச் சாப்பிடுகின்றவர்களாகின்றார்கள். தற்காலத்தில் நூல்கள் எழுதுகின்றவர்கள் இருபது முப்பது புத்தகங்களை எடுக்கின்றார்கள். ஒவ்வொன்றிலிருந்தும் சிலகருத்துக்களை எடுத்து அவற்றை ஒன்றாகத் திரட்டித் தாங்கள் எழுதிய நூல் என்று வெளியிடுகின்றார்கள். அப்படி அவர்கள் செய்வது பிறர் கருத்துக்களைத் திருடுவது ஆகாதா? சாஸ்திரங்களைப் படிக்கவேண்டும். அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைச் சிந்திக்கவேண்டும். அக்கருத்துக்களைச் சிந்தித்து ஜீரணம் செய்து நம் மயமாக்கவேண்டும். அப்படிச் செய்தால் அவை நம் கருத்துக்களாகின்றன. மேஜையின் மீது ஒரு மாம்பழம் வைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அது மேஜையின்மீது இருக்கும்பொழுது நம்முடையதன்று. அதைப் பெற்று உண்டு ஜீரணம் செய்துவிட்டால் அது நம் மயமாகிறது. பிறர் கருத்துக்களை ஜீரணம் செய்யாது எழுதும்பொழுது அவை நம்முடைய கருத்துக்களல்ல. கருத்துக்களைச் சிந்தித்து நம் மயமாக்கிய பிறகு எழுதினால் அவை நமக்குச் சொந்தமாகின்றன.

கள்ளாமைக்கும், பொருள் மிகப்படையாமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பொருள் மிகப் படையாமையிலிருந்து கள்ளாமைக்குச் செல்லலாம். எளிய வாழ்வு; உயர்ந்த சிந்தனை—இது தான் நம் தேசிய இலட்சியம். நம் தேவைகளை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கைப் பிரச்னைகள் தீர்கின்றன. வாழ்க்கைக்குச் சிறிதளவு பொருள் தேவை. சிவபெருமான் நமக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றார். சிவபெருமானுடைய உடைமைகளைப்பற்றி மாணிக்கவாசகர் பகர்ந்திருப்பதாவது:

'கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்
[சாழலோ.'

சிவபெருமானுக்கு வீடு சுடுகாடாக உள்ளது. சுடுகாட்டை யாரும் விரும்பமாட்டார்கள். சரீரத்தைச் சுடுகாடாகக் கருதவேண்டும். உயிரோடு வாழ்ந்திருக்கும்பொழுதே சரீர உணர்வில் செத்ததற்கு நிகராக இருக்கவேண்டும். சரீரத்துக்கு வேண்டிய தேவைகளைக் குறைத்துப்பழகவேண்டும். மனம் சரீரப்பற்றிலிருந்து விலகியிருக்கவேண்டும். 'செத்தாரைப் போல் திரி நெஞ்சே' என்று பட்டினத்தார் பகர்ந்துள்ளார். சிவபெருமான் கௌபீனத்தோடு இருக்கின்றார். அவருக்குப் பிக்ஷையெடுக்கும் பாத்திரமாக அமைந்திருப்பது மண்டையோடாகும். அவர் கபாலத்தைக் கையில் வைத்திருப்பதால் கபாலீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். அவருடைய மண்டை ஓட்டை யாரும் களவாடமாட்டார்கள். அவர் ஆபரணமாக அணிந்திருப்பது பாம்பு. பாம்பை அணிந்திருப்பதால் அவர் பன்னக பூஷணன் என்று அழைக்கப்படுகின்றார். சிவபெருமான் அணிந்திருக்கும் ஆபரணத்தைப் பெறுவதற்கு யாரும் விரும்பமாட்டார்கள். அவர் மேனியில் பூசியிருப்பது சுடலைப்பொடியாகும். எனவே அவர் 'சுடலைப்பொடி பூசி' என்றழைக்கப்படுகின்றார். இப்படித் தேவைகளைக்குறைத்து வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளுவதுதான் இந்தியாவின் இலட்சியமாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மிராசுதார், அவ

ரிடம் வேலைபார்க்கும் ஆள் ஆகிய இருவருக்கும் இடையில் வேற்றுமை எதையும் கண்டு பிடிக்கமுடியாது. இந்தியர்கள் ஒவ்வொரு நாளும் தாங்கள் பல் துலக்கும் குச்சியைத் தூக்கியெறிந்து விடுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவேளையிலும் தாங்கள் உண்கின்ற இலையைத் தூக்கி எறிந்து விடுகின்றார்கள். இத்தகைய ஆடம்பர வாழ்வு இந்தியர்கள் வாழ்ந்துவருகிறார்கள் என்று அமெரிக்கர்கள் ஒருபோக்கில் இந்தியர்களைப் பரிகாசம் செய்து வருகிறார்கள். இந்தியர்களுக்கு இயற்கையைப் பயன்படுத்தி எளியவாழ்க்கை வாழ்வது சாத்தியம். இதைத்தான் அபரிக்கிரஹம் என்று சொல்லவேண்டும்.

அஸ்தேயம் என்பது பிறர்பொருளைத் திருடாமையையும்பிறர் பொருள்மீதுஆசைவைக்காமையையும் குறிக்கும். பிறர் பொருள் மீது ஆசை வைத்தாலே திருடுவதற்கு நிகராகும். பிறர் பொருள்மீது ஆசை வைக்கலாகாது. பொருள்மீது பற்று வைக்காது மனதை அதிலிருந்து விலக்கி எடுத்துக் கொள்ளவேண்டும். பொருள்மீது மனதை எப்படி விலக்கி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கணவனும் மனைவியும் கிரஹஸ்த வாழ்வைத் துறந்துவிட்டு வானப்பிரஸ்த ஆசிரமத்தை மேற்கொண்டு பிருந்தாவனத்துக்குச் சென்று கொண்டிருந்தார்கள். கணவன் முன்பாகவும் மனைவி அவனைத் தொடர்ந்தும் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் சென்ற வழியில் ஒரு பொற்காசு கிடந்தது. கணவன் கண்ணில் அது பட்டது. அதைப் பார்த்தால் தன் மனைவிக்கு அதில் ஆசை வந்துவிடும் என்று எண்ணித் தன் காலால் மண்ணைத்தள்ளிக்கணவன் அதை மூடினான். அப்படி அவன் மூடியதைப் பின்னால் வந்த மனைவி பார்த்து விட்டாள். 'என்ன பொருளை அப்படிக் கவலையோடு மண்ணைப் போட்டு மூடினீர்கள்?' என்று கேட்டாள். 'பொற்காசு ஒன்று கிடந்தது; அதை நீ பார்த்து விட்டால் உனக்கு அதன்மீது ஆசை வந்து விடுமோ என்று எண்ணி அதன்மீது மண்ணைப் போட்டு மறைத்தேன்' என்றான். 'மண்ணுக்கும் பொன்னுக்கும் வித்தியாசம் பாராட்டலாமா? அந்த மண்ணுக்குப் பொன் என்று ஏன் மதிப்புத்தர வேண்டும்?' என்றாள் மனைவி. பொன் என்ற மதிப்புத் தருவது அதன்மீது ஆசை வைத்ததற்கு நிகராகும். அதற்கு மதிப்புத் தராத நிலைதான் ஆசையற்ற நிலை. முதல் உலக மகாயுத்தத்துக்குப் பின் ஜெர்மனியில் பணத்தின் மதிப்பைக் குறைத்தார்கள். அதனால் ரூபாய் நோட்டுக்களுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. சுபாஷ்சந்திரபோஸ் அச்சடித்த பத்தாயிரம் ரூபாய் நோட்டை மியூசியத்தில் வைத்திருக்கிறார்கள். அதற்கு இப்பொழுது பத்துப் பைசா கூட மதிப்பில்லை. எனவே பொருளுக்கு மதிப்பைத் தருவது நம்மைப் பொறுத்திருக்கிறது. மதிப்பு இருக்கும் பொழுதே அதற்கு மதிப்புத் தராதிருப்பது தான் ஆசையற்றநிலை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு கையில் பொன் கட்டியையும் மற்றொரு கையில் மண்கட்டியையும் எடுத்து, 'மனமே, இவ்விரண்டையும் சமமாகப் பார்' என்று கூறிக் கங்கையில் விட்டெறிந்தார். அது தான் பொருளுக்கு மதிப்புத் தராதநிலை; ஆசையற்றநிலை என்கின்றோம். அத்தகைய ஆசையற்ற நிலையே அஸ்தேயத்தின்உயர்ந்த இலட்சியம்.

பொருள் மிகப் படையாமை, ஏலாமை ஆகிய இரண்டு குணங்கள் அபரிக்கிரஹம் என்பதற்கு இருக்கின்றன. ஏற்பது இகழ்ச்சி என்பது கோட்பாடு. நாம் உலகத்துக்கு வழங்குவதை விட உலகத்திலிருந்து பெறுவது அதிகமாக இருந்தால் ஏற்கின்ற நிலையில் இருக்கின்றோம். அது இகழ்ச்சிக்குரியதாகும். சந்நியாசியும், பிராம்மணனும் பொருள் படைத்திருக்கக் கூடாது. சந்நியாசியை உணவு தேடிக்கொண்டு வருகிறது. பிறரிடமிருந்து உணவு ஏற்கின்றேன் என்ற எண்ணம் துறவிக்கு இல்லை. இறைவன் திட்டப்படி யாவும் நிகழ்கின்றன என்று துறவி நினைக்கின்றான். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய குரு தோதாபுரியாவார். தோதாபுரியினுடைய குருசகோதரர் சாமேலிபுரி. சாமேலிபுரி தோதாபுரியை விட வயதில் சிறியவர். சாமேலிபுரி காசியில் வசித்து வந்தார். காசியைச் சுற்றிலும் உள்ள தோப்புக்களில்

துறவிகள் தங்குவதற்குக் குடிசைகள்போட்டு வைக்கப்பட்டிருக்கும். அப்படிப் போட்டப் பட்ட குடிசை ஒன்றில் சாமேலிபுரி முப்பது ஆண்டுகள் தங்கியிருந்தார். ஒவ்வொரு நாளும் மாலை ஐந்து மணி முதல் ஆறு மணி வரை தம்மிடம் வருபவர்களிடம் சம்பாஷணை செய்வார். மற்ற நேரங்களில் அவர் யாருட னும் பேசமாட்டார். அவர் இருந்த குடிசை யாருக்குச் சொந்தம் என்பது அவருக்கே தெரியாது. அதைப்பற்றி அவர் யாரிடமும் விசாரித்துக்கொள்ளவில்லை. அவருக்கு நாள் தோறும் குறித்த காலத்தில் உணவு வந்து கொண்டிருந்தது. அது யாரிடமிருந்து வரு கின்றது என்று அவர் விசாரித்துத் தெரிந்து கொள்ளவில்லை. அவருக்கு உணவுஅனுப்பிக் கொண்டிருந்த அன்பர் ஒருநாள் மாலை சாமேலிபுரியைப் பார்க்க வந்தார். அந்த அன்பருக்கும் சாமேலிபுரிக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாஷணை வருமாறு:

அன்பர் : ''கடந்த பத்து ஆண்டுகளாகத் தங்களுக்கு வந்துகொண்டிருக்கும் மதிய உணவை நான்தான் அனுப்பிவைத்துக் கொண்டிருக்கிறேன். அவ்வுணவு தங்க ளுக்கு ஒழுங்காக வந்துகொண்டிருக்கும் என்று நினைக்கின்றேன்.''

சாமேலிபுரி: ''நீ யார் எனக்கு உணவு கொடுப்பதற்கு? மாதா அன்னபூரணி எனக்கு உணவு அனுப்பிவைத்து வருகின் றாள். எனக்குத் தேவையானதை மாதா அன்னபூரணி பார்த்துக்கொள்வாள். நீ எனக்கு உணவு அனுப்பவில்லை.''

சாமேலிபுரி இருந்த நிலைதான் அபரிக் கிரஹ நிலையாகும். யாருக்கும் அவர் அடிமை யாக இருக்கவில்லை. அவருக்குரிய கடமை யைச் செய்து வந்தார். அவர் சம்ரக்ஷணைக்கு வேண்டியதைத் தெய்வம் அனுப்பிவைத்துக் கொண்டிருந்தார். சாமேலிபுரி போன்று யாருக்கும் கட்டுப்படாத வாழ்க்கை வாழ்ந்து வரவேண்டும். யாரிடமாவது இருந்து தானம் ஏற்றுக்கொண்டால் கடமைப்பட்ட வர்களாகப் போய்விடுவோம். அப்பொழுது அந்தக்கரண சுத்தி ஏற்படாது. யோகி யாருக்கும் கடமைப்பட்டவனல்லன். அவன் யாண்டும் சுதந்தரமாக இருக்கவேண்டும்.

மக்களை நான்கு தரத்தினர்களாகப் பிரிக்க லாம். பிராம்மணன், க்ஷத்திரியன், வைசி யன், சூத்திரன் என்பவர்கள் நான்கு வகை யினர் ஆவார்கள். தரத்தில் மேலே போகப் போகப் பொருளைப்பற்றிய சிந்தனை குறை கிறது. ஆன்மீகச் சிந்தனை தரத்தில் மேலே போகப் போக முதலிடம் பெறுகின்றது. சூத்திரன் பொருளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றான். வைசியன் பொருளை உண்டு பண்ணுகின்றான். க்ஷத்திரியன் பொருளைப் பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறான். அந்தணன் பொருளைப்பற்றி நினைப்பதில்லை. இந்தியப் பண்பாடு ஆன்மீகத்தை அடிப் படையாகக் கொண்டு அமைந்திருக்கிறது. ஆன்மீகத்துக்குத்தான் இந்தியா மதிப்புக் கொடுக்கின்றது. பொருளுக்கு இந்தியா மதிப்புத் தருவதில்லை. ஒருவன் கோடீஸ்வர னாக இருக்கிறான் என்று வைத்துக்கொள் வோம். மற்றவன் துறவு வாழ்க்கையில் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். இந்தியா துறவிக்குத் தருகின்ற மதிப்பைக் கோடீஸ்வரனுக்குத் தருவதில்லை. அரசன் ஆன்மீகத்தில் முதிர்ந்த ரிஷியின் முன் தலை வணங்குகின்றான். அதுதான் இந்தியா வின் இலட்சியம். அந்தணன் ஆன்மீகத் துறையில் முன்னேறியவனாகின்றான். அவன் பரம்பொருளுக்குத்தான் அடிமையாகின் றான். வேறு யாருக்கும் அவன் அடிமையாவ தில்லை. அப்பர் சுவாமிகள் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று கூறியுள்ளார். ஆனால் 'கோமாற்கே மீளா ஆள்' என்றும் கூறி யுள்ளார். அந்தணனுக்குப் பொருளுடைமை எதுவும் இருக்கக்கூடாது. அவன் யாண்டும் தெய்வத்தை நம்பி வாழ்கிறான். அரசன் பொருளைப் பொது நன்மைக்காகப் பயன் படுத்துகின்றான். வைசியன் பொருளை உண்டுபண்ணுகிறான். மனபரிபாகத்தில் மேலே வரவரப் பொருள் மிகப் படையாமை இயல்பாகவே வந்தமைகிறது.

அடுத்து, பிரம்மசரியம் வருகிறது. பண் டைக் காலத்தில் பிரம்மசரிய ஆச்ரமம் அக்னி போன்று ஜ்வலித்துக் கொண்டிருந் தது. அதன் விளைவாகப் பிணியறியாப் பேராளர், எண்ணியதை எண்ணியாங்கு

எய்தவல்ல வீரர், நமனை அஞ்சாதவர், நரகத்தில் இடர்ப்படாதவர்—இத்தகைய பெருமக்கள் இந்தியாவில் தோன்றினார்கள். ஞானம்பேசிய ஞானசம்பந்தன், நசிகேதன், சுகதேவர் போன்ற ஞானிகளும் தோன்றிய காலம் நாட்டில் பிரம்மசரிய ஆச்ரமம் அக்னி போன்று ஜ்வலித்துக் கொண்டிருந்த காலமாகும்.

ब्रह्मचर्य प्रतिष्ठायां वीर्यलाभः ।

என்று யோக சூத்திரம் கூறுகிறது. பிரம்மசரியத்தில் நிலைநிற்பவர்க்கு வீரிய லாபமுண்டாகிறது என்பது அதன் பொருள். காம உணர்ச்சிகளை அடியோடு வென்று விடுவது பிரம்மசரியம். பிரம்மசரியம் கடைப்பிடிக்கும் பொழுது சித்தத்திலுள்ள மலங்களெல்லாம் நீங்கப் பெறுகின்றன. அப்பொழுது சித்தம் ஸ்படிகம்போன்று ஆய்விடுகின்றது. பிரம்மசரியம் இல்லாது யோகம் இல்லை. இராமன் இருக்கிற இடத்தில் காமன் இல்லை; காமன் இருக்கிற இடத்தில் இராமன் இல்லை. ஆத்மசாதனத்தில் மேலே போகின்றவர்கள் காமத்தை வென்று விடுகின்றார்கள். அவர்களுடைய உள்ளத்தில் காசு ஆசையும் இருப்பதில்லை. பிரம்மசரியத்தைத் தீவிரமாகக்கடைப்பிடிக்கும் சமுதாயம் பண்பாட்டில் மேலே வருகிறது. காமத்தையும் காசு ஆசையையும் வெல்லுகின்றவர்கள் விரைவில் மேல் நிலைக்கு வருகின்றார்கள். காமத்தையும் காசு ஆசையையும் வென்றவர்களே வாழ்க்கையில் அரிய காரியங்களைச் சாதிக்கின்றார்கள். ஒரு சமுதாயம் ஒழுக்கத்தையும், உயர் நெறியையும், புலனடக்கத்தையும், பிரம்மசரியத்தையும் எவ்வளவுக் கெவ்வளவு கடைப்பிடிக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அந்தச் சமுதாயம் உயர்வடைகின்றது. இன்றைக்குப் பொதுவாக உலகத்தில் ஒழுக்கம் குன்றியிருக்கிறது. ஆனாலும் நம்நாட்டு ஒழுக்க நெறி மற்ற நாடுகளைவிட மேலானது. நாம் பண்பாட்டில் உயர்ந்தவர்களாக இப்பொழுது இல்லை. பண்பாட்டில் எவ்வளவு கீழ் நிலைக்குப் போக முடியுமோ அவ்வளவு கீழ்நிலைக்குப் போய்விட்டோம். இந்த நிலை மாறி அமைந்தால்தான் நம் நாட்டிற்கும் உலகிற்கும் சுபிட்சம் உண்டாகும்.

இயமத்தில் கூறியுள்ள அஹிம்சை, சத்தியம், பிரம்மசரியம், அஸ்தேயம், அபரிக்ரஹம் இவ்வைந்தும் வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக இருக்கின்றன. கட்டடத்துக்கு அஸ்திவாரம் உறுதியாக இருக்கும் அளவு கட்டடம் உறுதிப்பாடு உடையதாகிறது. அஸ்திவாரம் உறுதியாக இல்லாவிட்டால் கட்டடம் எப்பொழுது வேண்டுமானாலும் விழுந்துவிடும். வாழ்க்கை இயமப் பகுதியில் ஸ்திரமாகாவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் அது சரிந்துவிடும். இயமப் பகுதி முழுவதும் ஒழுக்கத்தை வலியுறுத்துகிறது. ஆன்மீக வாழ்வில் ஒழுக்கத்தைப் பின்பற்றாது முன்னேற முடியாது. பன்னிரண்டு ஆண்டுகள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களாலும் பூரண பிரம்மசரியம் கடைப்பிடிப்பவனுக்கு மேதை நாடி உண்டாகிறது என்றும் அதன்மூலம் அதிசூட்சுமத்தை அறிந்துகொள்ளும் சக்தியும் அபாரமான ஞாபகசக்தியும் ஒருவன் பெறுகிறான் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். பிரம்மசாரி உடலழகில் கருத்துச் செலுத்தலாகாது. காமாந்தர எண்ணங்களில் பிரம்மசாரியின் மனம் ஈடுபடலாகாது. அப்பொழுதுதான் பூரண பிரம்மசரியம் கடைப்பிடிப்பதாகிறது. மனம் பூரண பிரம்மசரியத்தைக் கடைப்பிடிக்கும் அளவிற்கு அதற்குத் தெளிவும் உறுதிப்பாடும் உண்டாகின்றன. யோக வாழ்வு என்பது மனத் தூய்மையையும் மனத் தெளிவையும் பெறுவதாகும். யோகியின் உள்ளம் யாண்டும் பரத்தைச் சார்ந்திருக்கிறது. உலக சுகத்தில்யோகியின் உள்ளம் ஈடுபடுவதில்லை. உலக சுகம் யோகிக்குச் சுகமாகத் தோன்றுவதில்லை. உலக சுகத்திலிருந்து மனதை விடுவித்துக்கொள்ள முயல்வதே ஒழுக்கம் எனப்படுகிறது. ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற அளவு உள்ளம் உயர்வடைகிறது. காமமும் காசு ஆசையும் மனத்தை மாசுபடுத்துகின்றன. அவ்விரண்டு ஆசைகளிலிருந்தும் மனதை விடுவிக்க வேண்டும். இயமம் என்பது புற ஒழுக்கமாகும். இனி, அகவொழுக்கத்தைப்பற்றிக் கூறும் நியமப் பகுதியை ஆராய்வோம். (தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-167

941. **மனோமயீ மனோமயீ**— மனதாக வடிவெடுத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

காண்போனுகிய ஜீவாத்மன் காணப்படு பொருளாகவிருக்கின்ற பிரபஞ்சத்தை அறிந்துகொள்ளுதற்கு ஞானேந்திரியங்கள் ஐந்து இருக்கின்றன. அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவாம். புறத்திலுள்ள உலகை அறிந்துகொள்ளுதற்கு இந்த ஐந்து இந்திரியங்களும் கருவிகளாக அமைந்திருக்கின்றன. இந்த ஐந்து இந்திரியங்களின் செயல்களுக்கும் முதற்காரணமாயிருப்பது மனது. ஆதலால் இந்திரியங்களில் நான் மனதாயிருக்கிறேன் என்கிறுர் ஸ்ரீ கிருஷ்ணன்.

இந்த ஐந்து இந்திரியங்களின் அமைப்போ கிட்டத்தட்ட ஒரே பாங்கில் மக்கள், விலங்குகள், பறவைகள் ஆகிய உயிர்களனைத்துக்கும் அமைந்திருக்கின்றன. ஆனுல் இந்த இந்திரியங்களைப் பயன்படுத்தும் முறையில் வேற்றுமை மிக உண்டு. சிற்றுயிர்களிடத்து மனது இன்ப துன்பங்களையும் அனுகூலமான, பிரதிகூலமான சூழ்நிலைகளையும் அறிந்துகொள்ளுதற்கு மட்டும் பயன்படுகிறது. மற்று மனிதனிடத்தோ மனதின் போக்கு அலாதியானது. எத்தனை மனிதர்களோ அத்தனைவித மனப்பாங்குகள் உள என்பது அடிப்படைக் கோட்பாடு ஆகும். சுவைக்கின்ற உணவை மக்கள் தத்தம் மனப்பான்மைக்கு ஏற்பப் பொருள்படுத்துகின்றனர். கசப்புடைய பண்டங்களை வெறுப்பது மக்களுடைய பொது இயல்பு. மற்றுத் தித்திப்புப் பண்டத்தை வெறுப்பவர்களும் இருக்கிறுர்கள். மன வேற்றுமையே இதற்குக் காரணமாகும்.

இருண்டு வருகிற நேரத்தில் வழிப்போக்கர்கள் பாதைக்கருகில் தென்பட்ட வடிவம் ஒன்றை அவரவர் மனப்பான்மைக்கு ஏற்பப் பொருள்படுத்தினர். திருடன் ஒருவன் அவ்வடிவத்தைப் போலீஸ்காரனுகப் பொருள்படுத்தினுன். போலீஸ்காரன் ஒருவன் அதே வடிவத்தைத் திருடனுகப் பொருள்படுத்தினுன். பயங்கொள்ளி ஒருவனுக்கு அவ்வடிவம் பேயோ பிசாசோ என்னும் எண்ணத்தை ஊட்டியது. இந்த வடிவம்தான் என்ன என்று ஒருவன் மின் விளக்கைக்கொண்டு பார்த்தான். அந்த வடிவம் உண்மையில் ஒரு மரக்கட்டை. அதைப் பலர் பலவித வியாக்யானங்கள் செய்தது அவரவர் மனப்பான்மையை ஒத்ததேயாம். ஒருபொருளை மற்றொரு பொருளாக வியாக்யானம் பண்ணும் திறமை மனதுக்கு உண்டு என்பது இந்நிகழ்ச்சிகளினின்று வெளியாகிறது.

மனதைப்பற்றிய மற்றுேர் அதிசயமாவது காண்போனுகிய மனிதனுக்கும் காணப்படு பொருளாயிருக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையிலே பாலம் கட்டுவது மனது. கோட்டை ஒன்றனுள் சேனை ஒன்று இருக்கின்றது. கோட்டையைச் சுற்றிலும் அகழி அமைக்கப்பட்டிருக்கிறது. மடக்குப்பாலம் உள்ளே வருவதற்கும், வெளியே போவதற்கும் பயன்படுகிறது. அந்த மடக்குப் பாலத்திற்கு நிகரானது மனது. உடல் வாழ்க்கை என்னும் கோட்டைக்குள்ளிருக்கிற ஜீவாத்மன் மனது என்னும் மடக்குப்பாலத்தைப் பயன்படுத்திப் புறவுலகோடு தொடர்பு கொள்கிறுன். உறக்கத்தின் வாயிலாக மனது என்னும் மடக்குப்பாலம் உள்ளே ஒடுங்கிவிடுமாகில் புறவுலகம் இருந்தும் உறங்குபவனுக்கு அது சூனியமாய் மறைந்துபட்டுப்போகிறது. இதே நிகழ்ச்சி மயக்கத்திலும் உண்டாகிறது. எனவே காண்போனுகிய ஜீவாத்மனுக்கு மனது செயலற்றுப் போய்விடுமாகில் தெற்றெனத் தோன்றிக் கொண்டிருக்கிற புறவுலகம் ஒரு நொடிப்பொழுதில் மாயமாய் மறைந்து போகிறது. மனதின் பாங்கு இத்தகையதாம்.

மனது கண்ணுடிக்கு நிகரானது. நீலக் கண்ணுடி போட்டுக்கொண்டு பார்ப்பவனுக்குப் புறவுலகம் நீல நிறம் உடையதாகத் தென்படுகிறது. சிவப்புக்கண்ணுடி போட்டுக்கொண்டு பார்ப்பவனுக்கு அது சிவப்பு நிறம் உடையதாகத் தென்படுகிறது. மேடு

பள்ளமாக அமைக்கப்பெற்றுள்ள கண்ணுடி போட்டுக்கொண்டு பார்க்கிறவனுக்குப்புறத் திலுள்ள மக்கள் எல்லாரும் கோணல் கோணலாகத் தென்படுகிருர்கள். ஆகவே மனது எத்தகையதோ அத்தகையவனுக அம்மனிதன் அமைகிருன்.

மனதை உடையவன் மனிதன் என்னும் காரணப் பெயர் மனிதனுக்கு வந்திருக் கிறது. நல்ல மனம் படைத்திருப்பவன் நல்லவனுகத் திகழ்கிருன். கெட்ட மனம் படைத்திருப்பவன் கேடே வடிவெடுத்திருப் பவனுகக்காட்சி கொடுக்கிருன். மனம் திருந்தியமைவதற்கேற்பத் தென்படுகிற உலகமும் அவனுடைய காட்சியில் திருந்தி யமைகிறது. எனவே, மானுடன் ஒருவ னுக்குப் புறவுலகம் எத்தகைய காட்சியளிக் கிறதோ அதுவே அவன் தனது மனதின் கண் அடைந்துள்ள பரிபாகமாம். அற்புத மான மனது என்னும் இந்த அரிய கருவி யைத் திருத்தியமைப்பது மனிதனுக்கு அமைந்துள்ள குறிக்கோளாம். அத்தகைய மனிதனுக்கு மனேமயமாயுள்ள அன்னை பராசக்தி முன் மாதிரியாக அமைந்திருக் கிருள். நல்ல மனது எது என்னும் கேள்வி எழுங்கால் அதற்கு விடையாக அன்னை பரா சக்தி படைத்திருக்கும் மனதே நல்ல விளக்க மாம். தூய மனது ஆசாபாசங்களுக்கு அடிமைப்படுவதில்லை. விருப்பும், வெறுப் பும் தூய மனதுக்கு இல்லை. சோம்பலை அதனிடத்தில் காணமுடியாது. சோகமும் அதனிடத்து இல்லை. ஸ்படிகம் போன்று யாண்டும் தெளிந்த நிலையில் நல்ல மனது இருக்கின்றது. பொருத்தமாக அமைக்கப் பெற்ற தராசு எடையை உள்ளபடி காட் டித் தருவதற்கு நிகராக நல்ல மனது புறப் பொருள்களை ஐயம் திரிபு அற உள்ளபடி விளக்கிக்காட்ட வல்லதாம். ஆகவே, தூய மனம் படைத்தவளாக அன்னை பராசக்தி இருந்துகொண்டு மக்களுக்குத் தங்கள் மன தைப் பண்படுத்தும் வழியைக் காட்டி யருளிக்கொண்டு இருக்கிருள். ஆதலால் அவள் மனேமயீ என்று போற்றப்பெறு கிருள்.

942. व्योमकेशी வ்யோமகேசீ—வ்யோம கேசனுகிய சிவனுருடைய சக்தி சொரூப மாயிருப்பவள்.

சிவ என்னும் சொல் ஆண்பாலைக் குறிக் கிறது. சிவா என்னும் சொல் அச் சிவனுரு டைய சக்தியாகவிருக்கும் அம்பிகையைக் குறிக்கிறது. அதேவிதத்தில் வ்யோமகேசனு யிருக்கும் சிவனுரிடத்து அவருக்கு அபேத மாயிருக்கும் சக்திதேவியானவள் வ்யோம கேசீ என்னும் பெயர் பெற்றுள்ளாள். சொரூபம் ஒன்று. அதை ஆண்பாலாகக் கருதுமிடத்து சிவன். அதே பொருளைப் பெண்பாலாகக் கருதுமிடத்து அம்பிகை. அகிலாண்டங்களனைத்தின் சொரூபமாகப் பரதேவதையிருப்பதால் அவள் யாண்டும் விச்வ வடிவத்தில் இலங்குகின்ருள். அந்த விச்வ சொரூபத்துக்குப் புறம்பாக ஏது மில்லை. விச்வத்தின் மூலப்பொருள்களாக அமைந்திருப்பவை பஞ்ச பூதங்கள். அந்தப் பஞ்ச பூதங்களுள் ஆகாசம் சூட்சுமமானது. ஆதலால் நீக்கமற அந்த ஆகாசம் எங்கும் நிறைந்திருக்கிறது. அத்தகைய ஆகாசம் அம்பிகையின் கூந்தலாகக் கருதப்படு கிறது. ஒரு மூர்த்தியை விளக்குமிடத்துப் பாதாதிகேசமாக அது விளக்கப்படுகிறது. அன்னை பராசக்தியை விசுவரூபம் படைத்த வள் எனக் கருதுகின்றபொழுது ஆகாசம் அவளுக்குக் கேசம் அல்லது கூந்தலாயிருக் கிறது. அந்நிலையில் ஐந்தாவது பூதமாகிய மண் அவளுடைய திருவடியாக அமைந்தி ருக்கிறது. அம்பிகையே யாவுமாக இலங்கு கின்ருள். ஆதலால் ஆத்ம சாதகனுக்குப் புலப்படுகிற பொருள்களனைத்தையும் அம் பிகை சொரூபமாகப் பாவிப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது. பிரபஞ்சத்தை ஜடப் பொருளாகக் கருதுவது அக்ஞானத்தின் கூறு. அதே பிரபஞ்சத்தைச் சித் சொரூப மாக இலங்கும் அம்பிகையின் திருமேனியா கக் கருதுவது நல்ல ஆத்ம சாதனமாகிறது. ஆகவே, தன்னுடைய விச்வ சொரூபத்தில் யாவுமாக இலங்கிக்கொண்டிருக்கின்ற அம் பிகைக்குக் கூந்தலாக அமைந்திருப்பது வெட்டவெளி அல்லது உரோமம் எனப் பொருள்படுத்துவது நல்ல ஆத்ம சாதன மாம்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (317) முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் செய்து வருவதுபோன்று ஹிந்துக்கள் ஒரே தெய்வத்தை நம்புவதும் வழிபடுவதும் நலம் தரும் அல்லவா ?

இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் கடவுள் தத்துவத்தை உள்ளபடி அறிந்து கொண்டவர்கள் அல்லர். அந்தந்த மதத்துக்குத் தனித் தெய்வங்கள் உண்டு என்று அந்த இரண்டு கூட்டத்தாரும் நம்பி வருகிறார்கள். அல்லா என்னும் தெய்வம் அலாதியாக இஸ்லாமியர்களுக்கு உரிய தெய்வம் என்றும், ஏசுநாதர் கிறிஸ்தவர்கள் வழிபடும் தெய்வம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் பல நூற்றாண்டுகளாக மதத்தின் பெயரால் சண்டை போட்டவர்கள். அவர்கள் நம்பிக்கைப் பிரகாரம் அவரவர் தெய்வம் அவரவர்க்கு மட்டும் அருள் புரிகிறது. இந்த நம்பிக்கையில் பிழை இருக்கிறது. மதவெறியை இது உண்டுபண்ணுகிறது.

ஹிந்து மதப் பிரகாரம் பரம்பொருள் ஒன்றே, பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமாய் இலங்குகின்றது. உலகெங்குமுள்ள நீர் ஒன்று; அந்த ஒரே நீர் கடல் நீர், மழை நீர், ஓடை நீர், கிணற்று நீர், ஆற்று நீர், இப்படியாக வடிவெடுத்திருக்கிறது. விதை ஒன்று, அது முளைத்து வளர்ந்து வந்தான பிறகு அடிமரம் வேறு, கிளைகள் வேறு, இலைகள் வேறு, பூக்கள் வேறு, கனிகள்வேறு. இவையாவும் ஒரே போக்கில் பயன்படுபவைகள் ஆகமாட்டா.

புறமதஸ்தர்கள் கொள்கைப்படி நல்லவைகளை உண்டுபண்ணியவர் கடவுள். கெட்டவைகளை உண்டுபண்ணியவன் சைத்தான். கடவுளுக்கும் சைத்தானுக்கும் எப்பொழுதும் சண்டை. இந்தக் கோட்பாட்டை ஹிந்து மதம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆதிபகவன் ஒருவரே உலகிலுள்ள நலங்கேடு அனைத்துமாக வடிவெடுத்திருக்கிறார். ஒரு சூழ்நிலையில் ஒருவனுக்குக் கேடாயிருப்பது மற்றொரு சூழ்நிலையில் இன்னொருவனுக்கு நலமாக அமைகிறது. இது ஹிந்து மதக் கோட்பாடு. மற்ற மதஸ்தர்கள் சைத்தான் என்று சொல்லுவதை அக்ஞானம் அல்லது அறியாமை என ஹிந்துமதம் பொருள் படுத்துகிறது. ஒரே நீர் ஆவியாகவும், பாய்ந்தோடும் நீராகவும், உறைபனிக் கட்டியாகவும், மூடுபனியாகவும், மஞ்சு ஆகவும், ஆலங்கட்டியாகவும் இன்னும் என்னென்னவோ வடிவெடுத்து இருக்கிறது. ஒரு நிலையில் இருக்கும் அந்த வஸ்து ஒரு காரியத்துக்குப் பயன்படுவதுபோன்று மற்றொரு காரியத்துக்குப் பயன்படாது. அதே விதத்தில் அனந்தங்கோடி உயிர்வகைகளாகக் கடவுள் பரிணமித்திருக்கிறார். பசுவாக வடிவெடுத்திருப்பதும் கடவுள். பாம்பாக வடிவெடுத்திருப்பதும் கடவுள். இது ஹிந்து மதக் கோட்பாடு. இந்தத் தத்துவம் புற மதஸ்தர்களுக்குத் தெரியாது.

ஒரே பரம்பொருள் எண்ணிறந்த மகிமைகளோடு இலங்கிக்கொண்டிருக்கிறார். அப்பெரிய பொருளைச் சூரியநாராயணனாகவோ, அக்னி தேவதையாகவோ, வாயுதேவதையாகவோ, மழையை வாரிக்கொட்டும் வருணனாகவோ வைத்து வழிபடுவதில் தோஷமில்லை. அதே தெய்வத்தை ஆணாகவும் பெண்ணாகவும் வைத்துவணங்குவது ஹிந்து மத சம்பிரதாயம். இந்த இரண்டு பால்களைக் கடந்த நிலையிலும் பெரிய பொருள் இருக்கிறது.

நோய்களனைத்துக்கும் ஒரே ஒரு மருந்து உதவாது. நோய்க்கேற்ற பல மருந்துகள் இருக்கின்றன. அரசாங்கத்தில் இலாகாக்கள் பல இருக்கின்றன. ஓர் இலாகா ஒரு துறையில் உதவுவது போன்று மற்றோர் இலாகா இன்னொரு துறையில் உதவுகிறது. கடவுள் தத்துவமும் அத்தகையதே.

பரம்பொருள் ஒன்று; அதன் சொரூபங்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். ஆற்றல் தெய்வம், அன்பு தெய்வம், அறிவுத் தெய்வம் — இங்ஙனம் மெய்ப்பொருளின் விபூதிகள் அல்லது மகிமைகள் பல இருக்கின்றன. முக்தியை நாடுகின்றவன் மூலப்பொருளை வணங்குகிறான். உலக சம்பத்

தைத் தேடுகிறவர்கள் அவரவர் தேடுதலுக்கேற்ற தெய்வத்தை வணங்குவதே முறை. நோயாளி டாக்டரிடம் போகவேண்டும். வழக்குத் தொடுப்பவன் வக்கீலிடம் போகவேண்டும். கட்டடம் கட்டுபவன் என்ஜினியரிடம் போகவேண்டும். கல்வி கற்பவன் ஆசிரியரிடம் போகவேண்டும். ஒரு தெய்வம் எண்ணிறந்த மகிமைகளோடு இலங்குவதால் ஒவ்வொரு மகிமையும் தெய்வத்தின் ஒரு தனிச்சொரூபம் எனக்கருதுவது முறை. இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே ஒரே பரவஸ்து எண்ணிக்கையில் அடங்காத தேவர்களாக வடிவெடுத்து உலகுக்குப் பயன்பட்டு வருகிறது என்பது ஹிந்து மதக்கொள்கை. இதுவே யுக்திக்கும் பொருந்தியது. ஆன்றோர்கள் பலர் இயற்றியது இந்த ஹிந்து மதம். வாழ்க்கைக்கு இதுவே ஒத்தது. மற்ற மதங்களைச் சேர்ந்த அறிஞர்களும் ஹிந்துமதம் ஒன்றே தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது என அறிய வருகின்றனர். அதற்கு ஒத்தபடி தங்களுடைய வழிபாட்டு முறைகளையும் அவர்கள் மாற்றியமைத்து வருகின்றனர்.

ஆதலால் உலகுக்கு முன் மாதிரியாயிருப்பது ஹிந்துமதம். அரைகுறைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ள மற்ற மதங்களிடத்திருந்து ஹிந்துக்களாகிய நாம் அறிந்துகொள்ளவேண்டியதோ, பின்பற்ற வேண்டியதோ ஏதுமில்லை. சென்ற நூற்றாண்டிலே அமெரிக்காவில் நிகழ்ந்த சர்வமத மகாசபையில் சுவாமி விவேகானந்தர் புகட்டிய ஹிந்து மதமே மதங்கள் அனைத்துக்கும் தாய்மதமாகிறது என்னும் முடிவுக்கு அந்த மகாசபை வந்தது.

கேள்வி: (318) நலன் செய்ய விரும்புகிறவர்களுக்குச் செய்வதற்கேற்ற வசதியில்லை. இறைவன் இந்த நெருக்கடியில் நல்லவர்களை ஏன் வைத்தார்?

நலன் செய்ய விரும்புகின்றவர்கள் இன்னதுதான் நலன் என்று கற்பனை பண்ணிக்கொள்ளுகிறார்கள். தங்கள் கற்பனைக்கேற்ற வாய்ப்பு அமையாவிட்டால் இறைவனுடைய திட்டத்தைக் குறை கூறுகிறார்கள். உண்மையாகப் பரநலசேவைக்குப் பாடுபட முயலுகிறவர்களுக்கு எண்ணிறந்த வாய்ப்புக்கள் தினந்தோறும் வந்துஅமைந்துகொண்டே இருக்கின்றன. விருப்புக்கோ, வெறுப்புக்கோ அடிமைப்பட்டிருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு விளங்குவதில்லை.

'அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்னும் கோட்பாட்டின்படி பிறர்க்குத் தேவையாயிருக்கும் பணிவிடைகளை அப்போதைக்கப்போது தொண்டன் ஒருவன் நிறைவேற்றுகிறான். சுவாசிப்பது எப்படித் தானாக நிறைவேறுகிறதோ பணிவிடையும் அவ்வளவு சுலபமாக நிறைவேறவல்லதாம். தெய்வம் இதற்குத் தடைபோடுவதில்லை. தற்பெருமையும், வீண் ஆடம்பரமும், விளம்பரமுமே பணிவிடைக்கு இடைஞ்சலாகக் குறுக்கிடுகின்றன.

தொண்டன் ஒருவனுக்குப் பணிவிடையில் பெரியது சிறியது என்றும், தன் அந்தஸ்துக்குத் தக்கது தகாதது என்றும் பாகுபாடுகள் இல்லை. கடவுளுக்குப் பக்தராக அமைகிறவர்கள் மக்களுக்குக் காயத்தாலும், வாக்காலும், எண்ணத்தாலும் யாண்டும் பணிவிடை செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள். பஞ்சபூதங்களாயிருந்து சிவனார் தோட்டி வேலை செய்வதற்கு நிகராகத் தொண்டர்களும் எல்லாவிதப் பணிவிடைகளையும் ஆண்டவனுக்குரிய ஆராதனையாகக் கருதுகிறார்கள். இத்தகைய சீரிய மனப்பான்மை வாய்க்கப் பெற்றிருக்கும் தொண்டர்கள் பணிவிடையை நாடி இங்குமங்கும் ஓடுவதில்லை. அன்னவர்களுக்குப் பணிவிடை செய்ய சந்தர்ப்பம் வாய்ப்பதும் வாய்க்காதிருப்பதும் ஈசனுடைய திருவுளப் பாங்கை ஒட்டியவைகளாம். என்னை வைத்துக்கொண்டு 'நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்னும் எண்ணத்தில் நல்ல தொண்டன் ஊறியிருக்கிறான். அன்னவர்கள் மூலம் நிச்சயமாக அரும்பெரும் செயல்கள் இறைவனருளால் நிறைவேறுகின்றன. நல்ல தொண்டனாவது தனக்கு வாய்த்த பாக்யம் என்று பக்தன் யாண்டும் அன்பர் பணிவிடையில் ஈடுபட ஆவலோடு இருக்கிறான்.

ஆத்ம போதம்

(திரு. V. S. நரசிம்மன்)

देहेन्द्रियमनोबुद्धिप्रकृतिभ्यो विलक्षणम् ।
तद्वृत्ति साक्षिणं विद्यादात्मानं राजवत्सदा ॥

देह इन्द्रिय (தேஹ, இந்திரிய) உடல், ஐம் புலன்கள் मनः बुद्धिः (மன: புத்தி:)மனம், புத்தி प्रकृतिभ्यः (பிரகிருதிப்ய:) மூலப்பிரகிருதி ஆகியவற்றினின்றும் विलक्षणम् (விலக்ஷணம்) வேறுபட்டதும் सदा (ஸதா) என்றும் राजवत् (ராஜவத்) அரசனைப்போல் तत् वृत्ति (தத் விருத்தி) அத்தகைய விருத்திகளுக்கு साक्षिणं (ஸாக்ஷிணம்)சாக்ஷியாக आत्मानं (ஆத்மானம்) ஆத்மாவை विद्यात् (வித்யாத்) அறிந்து கொள்ளவேண்டும்.

உடல், ஐம்புலன்கள், மனம், புத்தி, மூலப் பிரகிருதி ஆகியவற்றினின்று மாறுபட்டு, ஆனால் அவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு, அரசனைப்போல், சாக்ஷியாக ஆத்மா உள்ளது என்று அறிய வேண்டும்.

மூன்று சரீரங்கள் என்ற உபாதிகளுக்கு அப்பாற்பட்டதாக ஆத்மாவை அறியவேண்டும் (சுலோகம் 14) என்று உணர்த்தப்பட்டது. உபாதியைத் தவிர்த்து, சொரூப நிலையில் பொருந்துவது எங்ஙனம் என்ற சாதனை முறை ஈண்டு குறிப்பிடப்படுகிறது. வித்யாரண்ய சுவாமிகள் அரசவையில் ஒளிரும் தீபத்திற்கு ஆத்மாவை ஒப்பிட்டுச் செய்த வர்ணனையை முன்பே கண்டோம். (சுலோகம் 14) அரசன் தானே ஓடியாடி வேலை செய்ய மாட்டான். ஆனால் அவன் முன்னிலையில் ஊழியர்கள் திறம்படப் பணி புரிகின்றனர். சாக்ஷியாக அவன் அமர்கின்றான். அதுபோன்று நிகழும் வியாபாரங்கள் அனைத்திற்கும் ஆத்மா சாக்ஷியாக உள்ளது. (1) ஆத்மா விருத்திகளினின்றும் வேறுபட்டது. (2) விருத்திகளின் சாக்ஷியே ஆத்மா. இந்த இரண்டு கருத்துக்களையும் ஆராய்ந்தால் சாதனைமுறை நன்குவிளங்கும்.

யோக: சித்த விருத்தி நிரோத: மனதில் உள்ள விருத்திகளை அடக்குவதே யோகம். (பதஞ்சலி யோக சூத்திரம்) இதுவே முதற்படி. எண்ணங்களின் வேகத்தைத் தணிக்க மந்திர ஜபம், பூஜை முறைகள், குறிப்பிட்ட உருவத்தை நெஞ்சில் நிலைநிறுத்தல், ஜபமாலையைக் கொண்டு மந்திரத்தை உச்சரித்தல் - என்று பல முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவரவர் மனப்பாங்கிற்கு ஏற்ற சாதனை முறையைப் பயில வேண்டும்.

தியானம் வேறு ஒரு முறையாலும் செய்யலாம். சினிமாப் படம் பார்ப்பவன் திரையில் தோன்றும் காட்சிகளுக்கு அப்பாற்பட்டவனாகத் தன்னைக் காண்கின்றான். அதற்கு அவன் சாக்ஷி; அதில் பங்கு எதுவும் எடுப்பதில்லை. அங்ஙனம் அகத்தே எழும் சிந்தனைகளுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளாது, அந்த விருத்திகளுக்கு வேறான (விலக்ஷணம்) சைதன்ய சொரூபம் எனத் தன்னை உணரவேண்டும். சிந்தனை ஓட்டத்தோடு ஈர்த்துச் செல்லப்படாது, எழுகின்ற சிந்தனை நன்றே ஆயினும், தீதே ஆயினும், அதற்குச் சாக்ஷியாக இருக்கவேண்டும். இதுவே தியானம். சாக்ஷி பாவத்தால் மனதின் வேகம் அடங்கும். விலக்ஷணம், விருத்தி சாக்ஷிணம் என்ற சொற்களால் அந்தர்முகத் தியானத்தை அறியவேண்டும்.

யோகவாசிட்டத்தில் சிகித்வஜன், சூடாலை ஆகியோரின் வரலாறு உள்ளது. ஆத்ம விசாரணை செய்யும் சூடாலை எங்ஙனம் ஒவ்வொரு உபாதியை ஒதுக்குகின்றாள் என்பதை அழகு மிளிரக் காணலாம். கடைசியில் ஆத்மனின் சாக்ஷி சைதன்ய பாவத்தை உணரும்போது, மிகுந்த பரவசத்தோடு 'ஆ! அஹோ! ஞாதம் ஏதேன' என்று மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கின்றாள்.

கூடஸ்தன் - அசைவற்றவன் என்று பரம்பொருளுக்கு ஒரு பெயர். அசையும்பொருள்களுக்கு ஆதாரமாக, ஆயினும் அவற்றின் அசைவைப் பார்த்துக்கொண்டு, தான் மட்டும் அசையாது உள்ள தத்துவமே சாக்ஷியாகும். அந்தச் சைதன்ய சொரூபத்தோடு நம்மை ஐக்கியப்படுத்திக்கொள்ள, அத்தன்மையைத் தியானித்து இருப்பதே சைதன்ய சாக்ஷிபாவ தியானம் எனப்படும்.

व्यापृतेष्विन्द्रियेष्वात्मा व्यापारीवाविवेकिनाम् ।
दृश्यतेऽभ्रेषु धावत्सु धावन्निव यथा शशी ॥

यथा (யதா) எவ்வாறு, अभ्रेषु धावत्सु (அப்ரேஷு தாவத்ஸு) மேகங்களின் ஓட்டத்தில் शशी (சசி) நிலவு धावन् इव (தாவன் இவ) ஓடுவதைப் போல (தோன்றுகின்றதோ, அவ்வாறு) अविवेकिनाम् (அவிவேகினும்) அஞ்ஞானிகளுக்கு व्यापृतेषु इन्द्रियेषु (வ்யாப்ருதேஷு இந்த்ரியேஷு) இந்திரியங்கள் வேலைசெய்யும் சூழ்நிலையில், व्यापारी इव (வ்யாபாரீ இவ) செயல்படுபவன் போல் आत्मा (ஆத்மா) ஆன்மா, दृश्यते (த்ருச்யதே) காணப்படுகின்றது.

''வானில் மேகக் கூட்டம் நகர்ந்து செல்லும் போது நிலவும் நகர்வதைப் போல் தோன்றுகின்றது. அங்ஙனம் இந்திரியங்கள் செயல்படும்போது ஆத்மா செயலில் ஈடுபடுவதாக அஞ்ஞானிகளுக்குத் தோன்றுகின்றது.''

எளிய, ஆயினும், நுட்பமான உவமானத்தின்மூலம் ஆழ்ந்த வேதாந்தக் கருத்துக்களை ஆத்ம போதம் விளக்குகின்றது. மேகங்களின் ஓட்டத்தை நிலவின் ஓட்டமாக உலகோர் கருதுவது இயல்பே. ஆயினும் அந்த முடிவு அஞ்ஞானம். நதியின் ஓட்டம் கரையில் உள்ள மரங்களின் ஓட்டமாகப் படகில் உள்ளோரால் காண இயலும். அசையாத புகைவண்டியில் அமர்ந்திருப்போர் எதிரில் ஓடும் வண்டியின் ஓட்டத்தைத் தம்முடையதாக எண்ணி மருள்வதையும் நாம் அறிவோம். அங்ஙனம் அஞ்ஞானத்தின் வலிவால் வேகமற்ற, அசைவற்ற ஆத்மா வேகத்துடன் அசைவதாக செயல்படுவதாகக் காண்கின்றோம். இந்திரியங்களின் அசைவும் வியாபாரமும் இங்ஙனம் ஆத்மாவில் ஆரோபிக்கப்படுகின்றன. 'अतास्मिन् तत् बुद्धिः- அது இல்லாத இடத்தில் அதைப்பற்றிய எண்ணமே' அவித்யை எனக் கண்டோம். இந்த மருளை நீக்குவதே (அபவாதம்) ஞானம். கீதையில் கூறப்படுவதுபோல் 'இந்திரியாணி இந்திரிய அர்த்தேஷு வர்த்தந்த இதி தாரயன்-புலன்கள் விஷயங்களில் தொடர்பு கொண்டு உள்ளன. (V-9)' என்று உணர்ந்து வியாபாரமற்ற, சலனம் அற்ற சாக்ஷி சைதன்யத்தில் நிலைத்து இருப்பதே செய்ய வேண்டியது ஆகும்.

आत्मचैतन्यमाश्रित्य देहेन्द्रिय मनोधियः ।
स्वक्रियार्थेषु वर्तन्ते सूर्यालोकं यथा जनाः ॥

யதா (யதா) எவ்வாறு सूर्यालोकं (ஸூர்யாலோகம்) கதிரவனின் ஒளியில் जनाः (ஜனா:) மக்கள் (அவரவர் தொழிலில் ஈடுபடுகின்றனரோ அவ்வாறே) आत्मचैतन्यं (ஆத்ம சைதன்யம்) ஆத்மனின் பிரகாசத்தை आश्रित्य (ஆச்ரித்ய) ஆதாரமாகக்கொண்டு देह इन्द्रिय मन धियः (தேஹ, இந்திரிய, மன, திய:) சரீரம், இந்திரியங்கள், மனம், அறிவு ஆகியவை स्वक्रिय (ஸ்வ கிரிய) தத்தம் செயல்களுக்குரிய अर्थेषु (அர்த்தேஷு) விஷயப் பொருள்களில் वर्तन्ते (வர்தந்தே) ஈடுபடுகின்றன.

''சூரியன் பிரகாசிக்கத் தொடங்கியவுடன் மக்கள் தத்தம் கர்மத்தில் ஈடுபடுகின்றனர். அதுபோன்று ஆத்மாவின் பிரகாசத்தை ஆதாரமாகக்கொண்டு சரீரம், இந்திரியம், மனம், புத்தி ஆகியவை தத்தமக்கு உரிய விஷயப் பொருள்களை நாடுகின்றன.''

கதிரவன் உதித்ததும், செயல்கள் தாமே நிகழ்கின்றன. கர்மத்திற்குத் தூண்டுகோலாக அவனது பிரகாசம் அமைகின்றது. ஆயினும் செயல்களின் தன்மை, விளைவுகள் இவற்றால் கதிரவன் சிறிதும் பாதிக்கப்படுவதில்லை. தன்னளவில் அது பிரகாசிக்கின்றது; ஏனையோர் கர்மம் புரிகின்றனர். அதுபோன்றே, ஆத்மாவின் சைதன்யப் பிரகாசம் கர்மத்திற்குத் தூண்டுகோலாக அமைகின்றது. எத்தகைய செயலைச் சரீரம், மனம் ஆகியவை புரிந்தாலும், அதன் விளைவு எதுவாக இருப்பினும், அதனால் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை.

காந்தத்தின் அருகே வைக்கப்படும் இரும்புத் துகள்கள் அசைகின்றன. அவற்றின் அசைவிற்குக் காரணம் காந்த சக்தியே. கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலையில் இடப்படும் இரும்புக்கோளம் தீயில் பிரகாசித்து, தீ உருண்டையாகக் காணப்படும். ஜடப்பொருள்களாகிய தேகம், இந்திரியம், மனம் ஆகியவை செயல் புரியினும், சைதன்யமாகத் தோன்றினும் அவற்றிற்கு ஆதாரம் ஆத்ம சைதன்யமே.

देहेन्द्रिय गुणान्कर्माण्यमले सच्चिदात्मनि ।
अध्यस्यन्त्यविवेकेन गगने नीलतादिवत् ॥

गगने (ககனே) ஆகாயத்தில் नीलतादिवत् (நீலதாதிவத்) நீலநிறத்தைக் (காண்பது போல்), अविवेकेन (அவிவேகேன) அஞ்ஞானத்தால் अमले (அமலே) மாசற்ற, सत् चित् आत्मनि (ஸத்சித் ஆத்மனி) சத் சித் ஆனந்த ஆத்மனில் देह इन्द्रिय (தேஹ இந்திரிய) தேகம், இந்திரியங்களின் गुणान् (குணன்) குணங்களையும், कर्माणि (கர்மாணி) கர்மங்களையும் अध्यस्यन्ति (அத்யஸ்யந்தி) கற்பிக்கின்றார்கள்.

''நிறமற்ற ஆகாயத்தில் நீல நிறத்தைப் பார்ப்பது போல், மாசற்ற சச்சிதானந்த ஆத்மனில், தேக இந்திரியங்களின் குணங்களையும், கர்மங்களையும் அஞ்ஞானத்தால் கற்பிக்கின்றனர்.''

குணமும், கர்மமும் அற்ற ஆத்மனில் அதற்குப் புறம்பான தன்மைகளைக் காண்பது அஞ்ஞானம், அத்தியாசம். ஆகாயத்திற்கு நிறம் கிடையாது; கவிந்து இருப்பது போன்ற தோற்றமும் கிடையாது. அங்ஙனம் காண்பது அஞ்ஞானம். அதுபோன்று ஆத்மாவிற்கு விலக்ஷணமான கர்மங்களை அகற்றி, 'உள்ளதை உள்ளபடி உள்ளத்தே உள்ளலே உண்மையாம்.'

अज्ञानान्मानसोपाधेः कर्तृत्वादीनि चात्मनि ।
कल्प्यन्तेऽम्बुगते चन्द्रे चलनादि यथाऽम्भसः ॥

यथा (யதா) எவ்வாறு अम्भसः (அம்பஸ:) தண்ணீரின் चलन आदि (சலன ஆதி) அசைவு போன்றவை, अम्बुगते (அம்புகதே) நீரில் தோன்றும் चन्द्रे (சந்த்ரே) சந்திரனில் कल्प्यन्ते (கல்ப்யந்தே) கற்பிக்கப்படுகின்றனவோ (तथा அவ்வாறு) अज्ञानात् (அஞ்ஞானாத்) அறியாமையினால் मानसः (மானஸ:) மனதின் उपाधेः (உபாதே:) உபாதியைச் சேர்ந்த कर्तृत्व आदीनि (கர்த்ருத்வ ஆதீனி) செயல்புரிதல் போன்றவை आत्मनि (ஆத்மனி) ஆத்மாவில் (கற்பிக்கப்படுகின்றன).

தண்ணீரின் ஓட்டம், அசைவு ஆகியவற்றால் நீரில் பிரதிபலிக்கும் நிலவும் ஓடுவதாக, அசைவதாகக் காண்கின்றோம். 'நான் கர்த்தா, நான் போக்தா' என்ற மனதிற்குரிய உபாதிகளும் இவ்வண்ணமே ஆத்மாவிற்கு உரியதாக அஞ்ஞானத்தால் கற்பிக்கப்படுகின்றன.

रागेच्छा सुखदुःखादि बुद्धौ सत्यां प्रवर्तते ।
सुषुप्तौ नास्ति तन्नाशे तस्माद् बुद्धेस्तु नात्मनः ॥

राग (ராக) பற்று इच्छा (இச்சா) ஆசை सुख (சுக) சுகம் दुःख (து:க) துக்கம் आदि (ஆதி) ஆகியவை बुद्धौ सत्यां (புத்தௌ ஸத்யாம்) புத்தி இருக்கும் வரையில் प्रवर्तते (ப்ரவர்ததே) ஏற்படுகின்றன. सुषुप्तौ (ஸுஷுப்தௌ) ஆழ்ந்த உறக்கத்தில் तत् नाशे (தத் நாசே) புத்தி அழிந்தபோது नास्ति (நாஸ்தி) இருப்பதில்லை. तस्मात् (தஸ்மாத்) ஆகவே (அவை) बुद्धेः (புத்தே:) புத்தியைச் சார்ந்தவை, न आत्मनः (ந ஆத்மன:) ஆத்மாவை அல்ல.

''பற்று, ஆசை, சுகம், துக்கம் ஆகியவை புத்தி இருக்கும்போது மட்டுமே காணப்படுகின்றன. ஆழ்ந்த உறக்கத்தில், புத்தி அழிந்துள்ளபோது, இவை இல்லை. எனவே இவை புத்தியைச் சார்ந்தவை, ஆத்மாவை அல்ல.''

மனதில் தோன்றும் விருத்திகள் (ராகம், இச்சை), சரீரத்தில் உண்டாகும் அனுபவங்கள் (சுகம், துக்கம்) அனைத்திற்கும் அப்பாற்பட்டது ஆத்மா. அன்வய, வ்யதிரேக முறையைக்கொண்டு இக்கருத்து விளக்கப்படுகின்றது. புத்தி இருக்கும்போது இவை இருக்கின்றன; (அன்வயம்). புத்தி இல்லாதபோது இவையில்லை, வ்யதிரேகம். எனவே இவை புத்தியை மட்டுமே சார்ந்துள்ளவை, ஆத்மாவை அல்ல.

அயர்ந்த உறக்கத்தில், அந்தக்கரணம் அழிந்து போவதால் சரீர, மன விகாரங்களுக்கோ, விருத்திகளுக்கோ இடமேதும் இல்லை. 'நான் சுகமாகத் தூங்கினேன்' என்று அனுபவத்தை ஏற்கும் 'நான்' அழியாத ஆத்மாவே அன்றி, ஆணவமல்லேன். ஸ்ரீ ரமண மகரிஷியிடம் பலரும் வந்து, 'நான் படாத பாடுபடுகின்றேன். எல்லாம் என் தலைவிதி' என்று அங்கலாய்ப்பர். அப்போது மகரிஷி, ''தூக்கத்தில் நீ எப்படி இருந்தாய்? இந்தக் கஷ்டம் இருந்ததா? அதே நிலையில் நீ ஏன் எப்போதும் இருக்கக்கூடாது?'' என்று கேட்பார்.

प्रकाशोऽर्कस्य तोयस्य शैत्यमग्नेर्यथोष्णता ।
स्वभावः सच्चिदानन्द नित्य निर्मलता आत्मनः ॥

अर्कस्य (அர்கஸ்ய) சூரியனுக்கு प्रकाशः (பிரகாச:) வெளிச்சம், तोयस्य (தோயஸ்ய) நீருக்கு शैत्यं (சைத்யம்) தண்மை, अग्नेः (அக்னே:) நெருப்பிற்கு उष्णता (உஷ்ணதா) வெப்பம் यथा (யதா) எவ்வாறு (இயல்பான தன்மைகளோ, அவ்வாறு) आत्मनः (ஆத்மன:) ஆத்மாவிற்குसत् चित् आनन्द (சத் சித் ஆனந்த) சச்சிதானந்தமும், नित्य (நித்ய) நித்தியத் தன்மையும் निर्मलता (நிர்மலதா) மாசற்று இருப்பதும் स्वभावः (ஸ்வபாவ:) இயல்பான தன்மைகளாகும்.

"சூரியனுக்குப் பிரகாசம், நீருக்குத் தண்மை, நெருப்பிற்கு வெப்பம் ஆகியவை இயல்பான தன்மைகள். அதுபோன்று ஆத்மாவிற்குச் சத், சித், ஆனந்தம், நித்யம், நிர்மலம் ஆகியவை இயல்புகள்."

இந்தச் சுலோகத்தில் ஆத்மாவின் லக்ஷணங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. கூட்டத்தில் ஒருவர் மட்டும் குடையோடு சென்றால் 'குடையோடு செல்பவர்' என்று அவரைப் பிரித்துக் குறிப்பிடலாம். குடை அவருக்குத் தடஸ்த லக்ஷணம். தற்காலிகமாக அது அவருடைய குறிப்பாகிறது. அதுபோன்று படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்கிரஹம் செய்தல் என்ற ஐந்து தொழில்களால் இறைவனைக் குறிப்பிடும்போது இவை பரம்பொருளுக்கு தடஸ்த லக்ஷணங்கள் ஆகின்றன. ஸ்வரூப லக்ஷணம்-பிரித்து எடுக்க இயலாதது. இதனை அப்பொருளின் 'தர்மம்' என்றும் குறிப்பிடலாம். நீரின் தர்மம் குளிர்ந்திருப்பது; நெருப்பின் தர்மம் சுடுவது. ஆச்சாரிய சங்கரர் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். "நூற்றுக்கு மேற்பட்ட சுருதி வாக்கியங்கள் 'நெருப்பு உஷ்ணமும், பிரகாசமும் அற்றது' என்று கூறினாலும், அந்த வாக்கியத்தை நான் பிரமாணமாகக் கருதமாட்டேன்." இங்ஙனம் தர்மத்திற்கு ஒத்திருப்பதை ஸ்வபாவம் (இயல்பு) எனலாம். ஆத்மாவிற்கு இத்தகைய ஸ்வரூப லக்ஷணங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார். சத் சித் ஆனந்தம், நித்யம், நிர்மலம் ஆகியவை அவை. இவற்றை ஒதுக்கி ஆத்மாவை அறிய முடியாது. 'அன்பே தெய்வம்', 'சத்தியமே தெய்வம்' என்ற வாக்கியங்களும் இதே கருத்தையே வெளிப்படுத்துகின்றன.

பிடிக்கப் போனவன் பிடிபட்டான்

ஒரு சமயம் நர்மதை ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டு இருந்தது. அதன் கரையிலிருந்து ஒருமனிதன் வெள்ளத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது நட்டாற்றில் கம்பளி மூட்டை ஒன்று மிதந்துகொண்டு போனதை அவன் பார்த்தான். அக்கம்பளிமீது அவனுக்கு ஆசைவந்துவிட்டது. அதைப்பற்றிப் பிடித்துக் கரை சேர்க்க எண்ணி ஆற்றில் குதித்து நீந்திச்சென்றான். அவன் நீந்திப்போனதை அவன் நண்பன் கரையிலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். நீந்திச்சென்றவன் கம்பளி மூட்டையைப் பற்றிப் பிடித்திழுத்தான். கம்பளி மூட்டை அவனைப்பற்றி இழுத்தது. இருவர்களுக்கிடையில் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. கரையிலிருந்த நண்பன் "கம்பளி போனால் போகிறது, அதை விட்டுவிட்டு நீ கரை வந்துசேர்" என்று நீந்திப்போனவனை அழைத்தான். அவன் பகர்ந்ததாவது: "நண்பா! நான் இப்பொழுது அதை விடுவதற்குத் தயார்; ஆனால் அது என்னை விடுவதற்குத் தயாராக இல்லை. பிடிக்கப்போன நான் பிடிபட்டவனானேன்." கம்பளி மூட்டைபோன்று தென்பட்டது கம்பளி மூட்டை அன்று. அது கரடியாகும்.

உலகமக்கள் உலகப்பொருள்களின்மீது ஆசை வைத்து அவற்றைப்பற்றிப்பிடிக்க முயல்கிறார்கள். ஆனால் உலகம் அவர்களைப்பற்றிப் பிடித்துக்கொள்கிறது. பிறகு அவர்கள் உலகை விட்டுவிட நினைத்தாலும் உலகம் அவர்களை விட்டு விடுவதாக இல்லை. கரடி கையில் அகப்பட்டவன் திண்டாடியதுபோன்று உலகமக்கள் பந்தபாசங்களில் பிடிபட்டுத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நெஞ்சு பொறுக்குதிலையே

(சுவாமி துருவானந்தர்)

நெஞ்சு பொறுக்கு திலேயே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்......

என்று பாரதி பாடினனே, மனிதர்கள் மீது பாரதிக்கு என்ன அப்படிக் கோபம்? நிலை கெட்டுப் போனவர்கள் என்று எதைக் கருதி அவன் பாடினன் என்று ஆராய்ந்துகொண் டிருந்தபோது சற்றுக் கண் அயர்ந்தது. திடீ ரென்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. யார்? என்றேன். உனது இதயம் பேசுகிறது என்றது குரல். விஷயம் என்ன என்றேன். நிலைகெட்ட மனிதனை நினைத்துவிட்டால் எனப் பாரதி பாடினனே, மனிதன் நிலை கெட்டவனு என்பதை அறிந்து அவனை நிலை மாருத உள்ளம் படைத்தவனுக ஆக்குவது எப்படி என்பதை அறிந்து வருகிறேன் என் றது. உன் பெயர் என்ன என்றேன். மனம் என்றது. கடலின் ஆழத்தைக்கூட அறிந்து விடலாம். ஆனல் உன்னைப் புரிந்துகொள்ள முடியாதே என்றேன். விரைவில் புரிந்து கொள்வாய்; வருகிறேன் என்று சொல்லி மறைந்தது.

ஆண்டுகள் சில கழிந்தன. ஏதோ சிந்தனை யில் நான் மூழ்கியிருந்தபோது, யாரோ என்னை அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பி னேன். யார்? என்றேன். நிலைகெட்ட மனி தன் யார் என்று ஆராயப்போன உன் மனம் தான் என்றது. போன காரியம் என்ன ஆயிற்று என்றேன். மனம் பேச ஆரம்பித் தது. ''அன்பா, நான் ஓர் ஊருக்குச்சென் றேன். அவ்வூரிலே ஒரு காளியம்மன் கோயில் இருந்தது. நான் சென்றபோது கோவிலிலே விழா தொடங்கி இருந்தது. ஆகவே கூட் டம் அதிகம். நானும் கோயிலுக்குள் போக லாம் என்று முயன்றேன். ஆனல் 'ஏ பாவி களே! நான் சொல்வதைக் கேளுங்கள்!' என்ற குரல் கேட்டது. அருகில் சென்றேன். 'ஏ பாவிகளே! பரலோகத்திலிருக்கும் பிதாவை விசுவாசியுங்கள்; ஆசீர்வதிக்கப் படுவீர்கள். இல்லையேல் நரகம்தான் உங்க ளுக்குக் கிடைக்கும். கல்லைக் கும்பிடாதீர் கள், கர்த்தரைக் கும்பிடுங்கள். கிறிஸ்தவ மதத்தில் சேருங்கள்' என்று கிறிஸ்தவப் பிரசாரம் நடந்துகொண்டிருந்தது. இதைக் கேட்ட வாலிபன் ஒருவன் குறுக்கிட்டு, 'கிறிஸ்துவ மதத்திற்கு ஆள் சேர்க்க ஹிந் துக் கோயிலருகே வந்து இப்படிப் பேசுவதற் குப் பதிலாக உங்கள் கர்த்தரைக் கேட்டால் அவரே மக்களை மதமாற்றம் செய்வாரே' என்ருன். உடனே அந்தக் கிறிஸ்துவன் குறுக் கிட்டு 'இப்படிப்பட்ட சிறு விஷயத்திற்கெல் லாம் நாங்கள் அவரைக் கேட்பதில்லை' என் ருன். உடனே அந்த வாலிபன் 'நான் கிறிஸ் தவ சமயத்தில் சேர என்ன செய்யவேண் டும்?' என்ருன். அதற்குப் பக்கத்திலிருந்த கிறிஸ்தவர்கள் 'பரமண்டலத்திலிருக்கும் பரம பிதாவை ஸ்தோத்திரம் செய்து எங்க ளோடு வா' என்றனர். அந்த இடத்திலேயே முழந்தாளிட்டான் அந்த வாலிபன். கிறிஸ் தவன் சொன்னது போன்று ஸ்தோத்திரம் செய்தான். அங்கிருந்த கிறிஸ்தவர்களுக் குத் தகுந்த பாடம் கற்பிக்க விரும்பி னன். உடனே எழுந்தான். அவன் கூறி னன், 'எல்லாரும் கேளுங்கள். பரமண்ட லத்திலுள்ள பரமபிதா என்னிடம் ஒரு செய்தி சொன்னர். நான் பரமண்டலத் தில் இருக்கிறேன் என்று கிறிஸ்தவர்கள் சொல்லுகிருர்கள். பின்பு ஏன் பரமண்ட லத்தில் எனக்கு சர்ச், மாதா கோயில் கட்டக் கூடாது? நான் இருக்கிற பரமண்டலத்தில் ஆலயம் கட்டுவதை விட்டு விட்டு அவர்கள் இருக்கிற பூலோகத்தில் தேவாலயம் கட்டு கிருர்கள். செய்யக்கூடாத தவறுகளைச்செய்து வருகிற கிறிஸ்தவர்களுக்குப் பாவ மன்னிப் புக்கொடுத்து நான் மன்னித்ததாகப் புளுகி விடும் பாதகர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்போகிறேன் தெரியுமா? உலகத் தில் தோன்றியிருக்கிற எல்லா உயிர்களிடத் தும் நான் இருக்கிறேன். அந்தந்த மதத் திற்கு ஏற்ப நான் ஹிந்துமதத்தில் பலதெய் வங்களின் வடிவங்களாகவும், கிறிஸ்தவ மதத் தில் ஏசுநாதராகவும், பௌத்த மதத்தில் புத்தராகவும் பெயரை மட்டும் சூட்டிக்

கொண்டேன். வாடிய பயிரைக் கண்ட பொழுதெல்லாம் வாடித் துடிக்கும் வள்ள லாராக வாழ்ந்தவன் நானே. ஆனல் அந்தோ! கிறிஸ்தவப் பிரசாரம் செய்யும் கிறிஸ்தவர்கள் நான் எல்லா உயிர்களிலும் இருப்பதை மறந்துவிட்டனர். ஆடு, மாடு, கோழி போன்ற வாயில்லா ஜீவன்களும் என் னுடைய படைப்புத்தானே! இவற்றைக் கொன்று தின்னும் அளவுக்கு இரக்கமற்ற வர்களாகப் போனதால்தான் கிறிஸ்தவர் களைத் தவிர மற்றச் சமயத்தாரும் கர்த்தரை நம்பிஞல்தான் விமோசனம்; இல்லையென்ருல் அவர்களுக்கு நரகமே என்று வாய் கூசாது புளுகுகிருர்கள். பிறருடைய துன்பத்தைக் கண்டு ரத்தக்கண்ணீர் விட்டவன் நான். அதனுல்தான் ஏசுவாக இருந்தபோது பிற ருக்காகச் சிலுவையில் ஏற்றப்பட்டேன். ஆனல் இன்றோ என்னுடைய ஹிந்து குழந் தைகளை இந்தக் கொடிய கிறிஸ்தவ அரக்கர் கள் கொடுமை செய்வதும், அவர்கள் வீட்டை எரிப்பதும், ஹிந்துக்களையே அழிக்க நினைப்பதும் எனக்குச் சம்மதமில்லை.

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே! நின் விளையாட்டு அல்லால்
மாறுபடும் கருத்துஇல்லை; முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா

என்று தாயுமானவர் ருபத்தில்நான் மக்களுக் குச் சொன்ன அறிவுரைகளையும் மதவெறி பிடித்தவர்கள் மறந்துவிட்டனரே. நான் கண்ணனுக அவதரித்துச் சொன்னதை மீண் டும் ஞாபகப்படுத்துகிறேன். அதர்மம் தலை தூக்கி, தர்மம் எப்பொழுது நலிகிறதோ, நல் லவர்கள் தொகை குறைந்து தீயவர்கள் எப் போது பெருகுகிருர்களோ அப்பொழுது தீயவர்களை ஒழித்து நல்லாரைக் காக்க, நலத்தை நிலைநாட்ட நான் யுகந்தோறும் அவதரிக்கப்போகிறேன். கிறிஸ்தவனுகஇருந் தாலும்சரி, முஸ்லிமாக இருந்தாலும் சரி, ஹிந்துவாக இருந்தாலும் சரி நல்லவனுக வாழ்ந்து பிறரும் வாழ உதவி செய்து பரஸ் பரம் உதவிக்கொண்டு என்னை எந்த வடிவத் தில் வழிபட்டாலும் என்னை அடைகிருர்கள். வீணுக ஏசுபிரான் என்று என் பெயரைச் சொல்லி என் குழந்தைகளுக்குத் துன்பம் கொடுத்து வெறும் மதப்பிரச்சாரத்தில் ஈடு பட்டு மக்களிடையில் பிளவு மனப்பான்மை யைப் பரப்பும் சமயவாதியை நான் முதலில் ஒழிப்பது உறுதி. இப்படியாக நம் கர்த் தர் ஏசு பெருமகனுர் எனக்குச்சொல்லி, இத னைக் கிறிஸ்தவர்கள் மத்தியில் சொல்லு, போ என்று ஆணையிட்டார்' என்ருன். இதைக்கேட்ட கிறிஸ்தவர்கள்உடம்புசிலிர்த் தனர். ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். எதுவும் பேச விரும்பாத வர்களாக இருந்த சிலர் தங்கள் தவறை உணர்ந்து அந்த ஆவேசமாகப் பேசிய வாலி பன் காலில் விழுந்து இனிமேல் தாங்கள் செத்தாலும் மற்ற மதத்தினரைத் துன் புறுத்த மாட்டோம். துவேஷ மனப்பான் மையை ஊட்டிய துரோகியரிடமிருந்து விலகித் தாய் மதமான ஹிந்து மதத்திற்கே மாறி எல்லாருடனும் சமமாகப் பழகி வாழ விரும்புகிருேம் என்று கூறினுர்கள். வாலி பன் இதைக்கண்டு மகிழ்ந்து அவர்களைக் காளியம்மன் கோவிலுக்குஅழைத்துச்சென்று அவர்கள் வாழ்க்கையில் புதிய திருப்பத்தை உண்டுபண்ணினுன். பிறகு அவன் தன் போக்கில் போனுன். மேலும் அவன் என்ன செய்யப் போகிருன் என்று பார்த்தேன். சில ஆண்டுகளாக அவனைப்பற்றிய விப ரம் ஏதும் தெரியாதிருந்தது. ஒருநாள் அவனை மரத்தடியில் கண்டேன். தீண்டத் தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட கூட்டத் தில் அவ்வாலிபன் இருந்தான். அடை யாளம் கண்டுபிடிப்பதற்கு முன்பு அவனே அவர்களுக்குத் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான். பட்டாளத்திற்குப் போய் விட்டு விடுமுறையில் தன் தாய் தந்தை யரைப் பார்க்க வந்திருப்பதாக அவன் பேசிய பேச்சிலிருந்து தெரியவந்தது. அவன் தன்னை அறிமுகப்படுத்திய உடனே கூட்டத் தாரைப் பார்த்துக் கேட்டான்: 'அன்பர் களே, எல்லாரும் ஏன் இங்கு இருக்கிறீர்கள்? நம் ஊருக்குப் போனேன். வீடெல்லாம் இடிந்து கிடக்கிறது. உறவினர்கள் எல் லாரும் ஊரைவிட்டே போய்விட்டதாகச் சொல்கிருர்களே, அது உண்மையா? என்ன நடந்தது? விபரமாகக் கூறுங்கள்' என்ருன்.

அந்த வாலிபன் வீரனுக இருந்தாலும் நடக்கக்கூடாதது ஏதோ நடந்துள்ளது என்ற வேதனையில் கண்ணீர்விட்டுக் கேட்டான். கூட்டத்தார் அனைவரும் மௌனமாயிருந்தனர். ஒரு பெரியவர் பேசினுர்: 'தம்பி, நாம் தாழ்ந்த ஜாதி. உயர் ஜாதிக்காரர்கள் சில நேரங்களில் எப்படி நடந்துகொள்கிறுர்கள் என்பது உனக்கு முன்பே தெரியும். உன் மாதிரி சில துணிச்சலான ஹிந்து இளைஞர்கள் இருந்ததனுல்தான் நிம்மதியாக இருந்தோம். நீ பட்டாளத்துக்கு வேலையில் போய்ச் சேர்ந்த பின்பு மற்ற இளைஞர்களும் வேலைதேடி வெளியூருக்குப் போய்விட்டார்கள். மறுபடியும் இவ்வூரில் தீண்டாமை தலைவிரித்தாடியது. சக்கிலியன், பள்ளன், பறையன் என்று ஊரைவிட்டே போகச் சொல்லி எங்களை ஊருக்கு அப்பால் பள்ளமாயுள்ள இடத்தில் குடியிருக்கச் சொன்னுர்கள். நாம் ஊருக்குள்ளே போகக்கூடாதாம். ஓட்டலிலே காசுகொடுத்தாலும் வெளியே நம்மை நிற்க வைத்து நாய்க்குப் போடுகிற மாதிரிதான் பலகாரத்தை எறிகிறுர்கள். உயர் ஜாதிக்காரர்கள் பள்ளிக்கூடத்தில் நம் குழந்தைகள் படிக்கப் போகமுடியாது. நமக்கு நோய் வந்தால் டாக்டர் வரமாட்டார். தண்ணீர்கூட ஊர்ப் பொதுக்கிணற்றில் எடுக்கக் கூடாது. மீறித் தண்ணீர் எடுக்கப்போனுல் நீரில் மருந்தைக் கலக்கிவிடுவார்கள். உயர்ஜாதிக்காரன் வீட்டில் கிணறு இருக்கும். நாங்கள் இரண்டு மூன்று மைல் போய்த்தண்ணீர் எடுத்துவர வேண்டி இருக்கிறது. உன் அப்பா செத்துப்போன பிறகு அவரைப்புதைப்பதற்குக்கூடப்பொது மயானத்திலே இடம் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். இப்படிப்பட்ட வெறியர்களிடத்திலிருந்து எத்தனை நாள் கொத்தடிமை போல வாழ்வது?' இந்த நேரத்தில் பழைய பாதிரியார்வந்தார்.என்னென்னமோ சொன்னுர்: 'எங்கள் மதத்தில் எல்லாஜாதியாரையும் சமமாய் நடத்துவோம். எல்லா உதவியும் கிடைக்கும். கிறிஸ்தவமதத்திலே சேருங்கள்' என்றுர். நாங்கள் நூறு குடும்பங்கள்கிறிஸ்தவமதத்திலேசேர்ந்துவிட்டோம்'. இவ்வாறு பெருமூச்சுவிட்டுப்பேசிமுடித்தார் பெரியவர். இதைக் கேட்டவுடன் வாலிபன் துடித்தான். 'ஐயோ! பெரியவர்களே, அவர்கள் கொடுத்த பணத்துக்கும் ஆசைவார்த்தைக்கும் அடிமையாகிவிட்டீர்களே! நம்தாய் மதமான ஹிந்து மதத்திற்குத் துரோகம் செய்துவிட்டீர்களே! எவன் நம்மைமதம்மாற்றத்திட்டமிட்டுக்கொண்டிருந்தானுே அவன் வலையில் நீங்களே போய் விழுந்து விட்டீர்களே! நமக்குள்ள உரிமையை நாம் போராடிப் பெறவேண்டும். நமக்குள்ள உரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமையில்லை. தீண்டாமை மாபெரும் குற்றம். தீண்டாதே என்று யார் கூறினுலும் அந்தத் துரோகியை விடக் கூடாது. நான் சில ஆண்டுகள் இல்லாதபோது என்னென்ன நடக்கக் கூடாதோ அவை எல்லாம் நடந்து விட்டன. கவலைப் படவேண்டாம். நமக்குரிய உரிமையைப் பெற நாம் போராட ஆயத்தமாவோம். நான் நாடு முழுதிலும் சுற்றிப் பார்த்துள்ளேன். தீண்டாமைக்கு யாரும் ஆதரவுதருவதில்லை. தீண்டாமைக்கு ஆதரவு தருகின்றவனைக் கொலைக் குற்றம் சாட்டி அவனைத் தூக்கில் போடவேண்டும். நான் இருக்கின்றேன், பயப்படாதீர்கள். அனைவரும் வாருங்கள். ஊர்ப்பொதுக்கிணற்றிலே குளியுங்கள். காளி கோயிலுக்குப் போய் அவளிடம் நீங்கள் அறியாமையினுல் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்ததைச் சொல்லி மன்னிப்புக்கேட்டு கழுத்தில் அணிந்துள்ள சிலுவையைக் கழற்றி எறிந்து விடுங்கள். காளிதேவி உங்களைக் காப்பாளாக.' இந்த வீறுகொண்ட உரையைக் கேட்ட நூறு குடும்பத்தினரும் காளியின் நாமத்தைஜபம்பண்ணிக் கொண்டு ஊர்ப்பொதுக் கிணற்றில் குளித்தனர். சீர்திருத்த இளைஞர்களும் ஹிந்து வாலிபர்களும்பெரியோர்களும் அனைவரும்சேர்ந்து காளிகோயிலுக்குப் போய் வணங்கி, கழுத்தில் அணிந்திருந்த சிலுவையைக் கழற்றி எறிந்துவிட்டனர். நெற்றியிலே விபூதிபூசிக் கொண்டு வந்தனர். ஹிந்து முன்னேற்றக் கழகம் என்று சங்கம் ஆரம்பித்து தெருத் தெருவாகப் பிரசாரம் செய்தனர். அகம்பாவம் பிடித்த உயர்ந்த ஜாதிக்காரர்களும் காலத்தின் மாறுபாட்டை உணர்ந்து

வாயைத் திறக்காது வீட்டை விட்டு வெளி வராதிருந்தனர். அந்த ஊரில் ஹிந்து நற்பணி மன்றம் ஒன்று ஆரம்பித்து ஊர் இளைஞர் அனைவரும் ஊர் நலனில் குறிப்பாக ஹரிஜனங்களுக்கு எல்லா வழிகளிலும் சேவை செய்ய இறங்கினர்.

இதிலிருந்து நம் ஹிந்துக்களுக்கு நல்வழி காட்டி நம் நாட்டில் ஹிந்து சாம்ராஜ்யம் ஏற்பட வழி என்ன என்று ஆராய்ந்தேன். இதுவரை அந்த வாலிபனைக் கண்காணித்து வந்த நான் அந்த வாலிபன் தன் ஊரில் ஹிந்து எழுச்சியை உண்டுபண்ணியது போன்று நம் நாடு முழுதும் ஹிந்து எழுச்சியை, ஹிந்து உணர்ச்சியை நாம் ஏன் உண்டுபண்ணமுடியாது என்றுதீர்மானித்து அந்த வாலிபனிடமிருந்து பிரிந்து சுதந்திரமாய்ப் புறப்பட்டேன்.''

மனம் இங்ஙனம் தொடர்ந்து பேசிய பிறகு சற்று நிறுத்தியது. அப்போது அதனிடம் நான் கூறினேன்: '' மனமே, காளியம்மன் கோயிலில் ஆரம்பித்த உன் பயணத்தில் எத்தனையோ சம்பவங்களைச் சந்தித்துள்ளாய். மதமாற்றக் கொடுமைகளை நீ சொல்லுகிறபோது எனக்கு ஆத்திரம் பொங்குகிறது. முஸ்லீம் படையெடுப்பு ஆரம்பித்த நாள் முதல் புளியங்குடி கலவரம் நடைபெற்று ஓய்ந்துள்ள இந்நாள் வரை இவ்வளவு அக்கிரமங்கள் நடந்தும் நம் ஹிந்துக்கள் ஒன்றும் தெரியாதவர்களாக வாழ்ந்துகொண்டே இருக்கின்றனரே. இவர்களை ஒற்றுமைப்படுத்தி ஹிந்து உணர்வுடையவர்களாக்கி, ஜாதிப்பித்தை உள்ளத்திலிருந்து அகற்றி அனைவரும் சகோதரர்கள் போல் வாழ வழிகாட்டாது சுதந்திரமாய்ப் புறப்பட்டுவிட்டேன் என்றுசாதாரணமாகக் கூறுகிறாயே! நீ பயணம் செய்த நோக்கம் வெறுமனே வேடிக்கை பார்த்துவிட்டு வந்து என்னிடம் சொல்வதற்காகவா? அந்த வீர வாலிபன் தன் ஊரில் நிகழ்த்திய பெரிய மாற்றத்தை, தீண்டாமையை ஒழித்ததை, ஹிந்து உணர்வை அனைவரிடமும் ஊட்டியதைச் சொன்னுயே தவிர நீ ஏதும் செய்யாது எதற்காகஇங்கு வந்தாய்?''என்று கோபத்தோடு கேட்டேன். மனம் சற்றும் தடுமாற்றமடையாது, ''நான் இன்னும் சொல்லவேண்டிய பகுதி நிறைய இருக்கும் போது நீங்கள் அவசரப்பட்டால் எப்படி? நான் சொன்ன விஷயங்களில் நீங்கள் ஈடுபடுகின்றீர்களா என்பதைப் பார்க்கத்தான் சற்று நிறுத்தினேன்'' என்றது. பிறகு ஆர்வத்தோடு சொல்ல ஆரம்பித்தது: ''முஸ்லீம் படையெடுப்பும், கிறிஸ்தவ ஆதிக்கமும் என்று நம் நாட்டிற்குள் புகுந்தனவோ அன்றே நம் நாட்டிற்குக் கேடு வந்துவிட்டது என்று நினைத்தேன். ஆனல் இப்போது என் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டேன். ஒவ்வொரு கேட்டையும் தொடர்ந்து நலன் வருகிறது என்பது வாழ்க்கையைப் பற்றிய கோட்பாடு ஆகும். கேடு போன்று நம் நாட்டில் புகுந்துள்ள இந்த இரண்டு சமயங்கள் நமக்கு நல்லதொரு விழிப்புணர்வை ஊட்டியுள்ளன. அதுவும் நன்றே. இரு சமயத்தைச் சார்ந்தவர்களும் மதமாற்றச் செயலில் ஈடுபடாது நம் போன்று இருந்திருப்பார்களானல் நாம் இன்னும் ஜடம் போன்று நம்மைக் காப்பாற்ற, பலப்படுத்த, ஒற்றுமைப்படுத்தச் சக்தியில்லாதுபோயிருந்திருப்போம். இப்போது நம்மில் சிலருக்காவது ஹிந்து உணர்வு வந்தது குறித்துப் பெருமையடையவேண்டும். அதோடு நின்றுவிடாது நம்மிடையே இந்த ஐக்கிய உணர்வை உண்டுபண்ணுவது எப்படி என எண்ணினேன். ஒரு சர்ச்சுக்கு முன்னல் நின்றுகொண்டு பார்த்தேன். அந்தச் சர்ச்சுக்குப் பக்கத்தில் ஒரு நர்சரிபள்ளி, அதற்குப் பக்கத்தில் கர்த்தர் பெயரால் மருத்துவமனை இப்படியாக அவர்களுடைய மதப் பிரசாரப் பாசறையைக் கண்ணுற்றேன். உண்மையைச் சொன்னலே ஒத்துக்கொள்ள மறுக்கிற, உண்மையை நிந்திக்கிற இந்தக் காலத்திலே மூடக் கொள்கைகள் மலிந்த இந்த மதங்கள் எப்படி மக்கள் உள்ளத்தில் இடம் பிடித்து அவர்களுடைய தாய் மதத்தையே வெறுக்கச்செய்து மற்ற மதத்தாரை ஒழித்துக் கட்டும்படி தூண்டுகிறது என்று பார்த்தபோது இந்தப் பயிற்சிப்பாசறைகள் தாம் கண்களுக்குப் புலப்பட்டன. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு

அனுப்புகின்றனர். கிறிஸ்தவப் பள்ளிக்குப் போய்ப் படிக்கின்றவர்களுக்குக் கிறிஸ்தவ மதம் தான் உண்மையான மதம், ஹிந்துமத தெய்வங்கள் கல், மண், பேய், பூதம் என்று கூறி ஹிந்து மதத்தை அவர்கள் வெறுக்கும் படிசெய்துவிடுகின்றூர்கள். ஒருகிறிஸ்தவ நர்சரிப்பள்ளியில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்று. சிறுவர், சிறுமிகள் நிறைந்த கிறிஸ்தவ நர்சரிபள்ளி. கிறிஸ்தவ ஆசிரியை குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய நீர்த் தொட்டியருகே போனுள். குழந்தைகள் அந்த ஆசிரியையைப் பின் தொடர்ந்து போனுர்கள். அந்தக் கூட்டத்தில் கிறிஸ்தவக் குழந்தைகள் குறைவு. ஹிந்துக் குழந்தைகள் அதிகம். அந்தக் கிறிஸ்தவ அம்மை 'எங்கள் கர்த்தராகிய ஏசு பெரியவரா, உங்கள் ஹிந்துக்கடவுள் கிருஷ்ணன் பெரியவரா என்பதை இப்பொழுது பார்ப்போம்' எனக் கூறி ஒரு மரக்கட்டையில் செய்த சிலுவையையும், கல்லால் ஆன கிருஷ்ணன் விக்ரஹத்தையும் எடுத்துக் காட்டி 'இவ்விரண்டையும் தண்ணீருக்குள் மூழ்கடிப்போம். எந்தத் தெய்வம் சக்தி பொருந்தியதோ அது உடனே தண்ணீருக்கு மேலே வரும். சக்தியற்றது தண்ணீருக்குள்ளேயே கிடக்கும்' என்று சொல்லி அவற்றைத் தண்ணீருக்குள் மூழ்க வைத்தாள். உடனே மரச்சிலுவை தண்ணீருக்கு மேலே வந்து மிதந்தது. அந்த ஆசிரியை 'பார்த்தீர்களா? ஏசுவின் சிலுவைதான் சக்தி பொருந்தியது. ஆகவே அது மேலே வந்தது. கிருஷ்ணன் சக்தியற்ற தெய்வம்' என்று கூறியவுடனே சிறிய குழந்தைகள் அக்கூற்றை நம்பிவிட்டார்கள். மரக்கட்டை மிதக்கத்தானே செய்யும்! கல் மூழ்கித் தானே கிடக்கும் என்கிற இயற்கை நியதி குழந்தைகளுக்குத் தெரியாததன்ருே? கிறிஸ்தவப்பிரசாரம்இத்தகையது. இத்தகைய பிரசாரத்தை முறியடிக்க ஹிந்துக்கள் ஒன்று சேர்ந்து நர்சரிப் பள்ளிகள் அமைத்து ஹிந்துப் பண்புகள், ஒழுக்கம், பக்திமுதலியவற்றைப் புகட்டிக் குழந்தைகளை ஹிந்துஉணர்வோடு வளர்க்க வேண்டும். பள்ளிகளும், கல்லூரிகளும் சமய உண்மைகளைப் புகட்ட வேண்டும். இவ்வளவும் செய்யப் பொருள் வசதி வேண்டும். ஹிந்து அபிமானிகளிடம் போனேன்; என் கூற்றைக் கேட்டு நகைத்தார்கள். மடங்களை ஆதீனங்களைச்சந்தித்து ஹிந்து சமய வளர்ச்சியானுல் தானே, புறச்சமய வளர்ச்சி தடையுறும். கல்வி ஸ்தாபனங்கள், மருத்துவ மனைகளைப் பெருக்கிஹிந்துப் பண்பைப் போதனைகள் மூலம் புகட்டலாமே என்றேன். ஆதரவு தருவார் யாருமில்லை. பழைமை பேசி ஜாதி வெறியை வளர்ப்பவர்களைத்தான் கண்டேன். ஒரு சம்ப்ரதாயத்தார் மற்ருெரு சம்ப்ரதாயத்தாரோடு பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாதிருப்பதைப் பார்த்தேன். ஒருவரைவிட மற்றவர் தங்களைப் பெரிதாக நினைத்துக்கொள்ளுகின்றனர். இதற்கிடையில் ஹிந்து தர்மம் காப்போம், ஹிந்துக்களாக வாழ்வோம் என்று சிலர் சொல்லிக் கொண்டு அதே வேளையில் வேத பாடசாலை என்று ஒன்று ஆரம்பித்து அதில் பிராமணர்கள் தாம்வேதம் படிக்கலாம்,மற்றவர்களுக்கு அங்கு இடம் கிடையாது என்று சொல்லுகிற ஜாதி வெறியைப் பார்த்தேன். இறைவா, இதை மனிதனுல் திருத்த முடியாது; நீதான் சரிப்படுத்தவேண்டும் என்று அன்னை கருமாரியிடம் பிரார்த்திக்கக் கருமாரியம்மன் கோவிலுக்குச் சென்றேன். அக்கோயிலிலே ஒரே கூட்டம். என்ன செய்வது? திருவிழா. இருந்தாலும் ஐந்து ரூபாய் கொடுத்தால் அம்மனின் அருகில் சென்று தரிசிக்கலாம் என்று சிலர் சொன்னுர்கள். தாயைப் பார்க்கக்கூடக் குழந்தைக்கு உரிமையில்லையா? அதற்கும் காசுதான் தேவையா?

நெஞ்சு பொறுக்கு திலேயே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்

என்று பாரதி அன்றைக்குப் பாடியது அன்றைக்கு மட்டுமன்று; அது என்றைக்கும் உரியது. நிலை கெட்ட மனிதனை நிராகரித்து விட்டு நிலையான ஆண்டவனை மனம் கசிந்து வேண்டி அவனருளை நாடி உன்னிடம் வந்தேன்'' என்று மனமானது பேசி முடித்தது. என் கனவு முற்றிலும் கலைந்தது. படுக்கையை விட்டு எழுந்தேன்.

பொருளாதாரக் கொள்கைகள்

(சுவாமி ஸதானந்தர்)

[228ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டில் அபிவிருத்தி ஏதாவது செய்ய நேர்ந்தால்புதியவரிகள் போடப்படுகின்றன. பழைய வரிகள் உயர்த்தப்படுகின்றன. அப்படிச்செய்யும் போதெல்லாம் ஏழைகளைப் பாதிக்காதவாறு திட்டமிடுவார்கள். கல்வி, ராணுவம்,வைத்திய சாலைகள்,தொழில் அபிவிருத்திகள், சுகாதார வசதிகள், சாலைகள், ஆலயங்களமைத்தல் ஆகிய எல்லாப்பொதுக் காரியங்களும் வரியினால் நடத்தப்படுகின்றன. ஏழைகள் அதிகம் வரி செலுத்தாது இந்த நன்மைகளை யெல்லாம் அனுபவிக்கவில்லையா? விற்பனை வரி, தமாஷா வரி- இந்த இரண்டு மூலமும் ஏதோ சொற்ப வரி செலுத்துவதாகச் சொல்லலாம். ஆனால் அது கணக்கில் எடுத்துக்கொள்ள இயலாத சிறு அம்சம். அந்த வரியையும் புஷ்பங்களில் இருக்கிற தேனைத் தேனீ சேகரித்துத் தருவது போன்று வியாபாரி சேகரிக்கிறான். ஏழைகள் உழைத்துக் கொடுத்துத்தான் அவன் பணக்காரன் ஆகியிருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. மாடு உழைத்துப் பரம்பு அடித்தது. மனிதன் வரப்பு வெட்டினான், நாற்றுச் சுமந்தான், நட்வு நட்டான், உரம் போட்டான், மருந்து அடித்தான், தண்ணீர் பாய்ச்சினான், காவல் காத்தான், களை எடுத்தான், அறுத்தான், கதிர்அடித்தான், நெல்லைப் பெற்றான். இது யாருடைய உழைப்பால் வந்தது என்று சொல்வது? அவரவர் உழைப்புக்கு அவ்வப்போது கூலி வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களுக்கு வேலை செய்ததைத் தவிர வேறு பொறுப்பில்லை, கவலையில்லை. பாசிகள் தனித்தனியே கிடக்கின்றன. அவைகளை ஒரு நாலில் சேர்த்து அம்மா அழகான பாசி மாலை ஆக்கினாள். உதிரியாகக் கிடந்த பாசிகளை, கண்ணுக்குத் தெரியாமல் உள்ளே இருந்து நூல் அதை ஒரு மாலையாக ஆக்கியிருப்பதுபோன்று கால்நடை, மனிதர்கள் இவர்களின் உழைப்பை இணைத்து அதை உருப்படியாக்கி ஒரு விளைபொருளை உண்டாக்கின ஒருவனைப் பற்றி யாராவது சிந்தித்தது உண்டா? ஆகாயத்தில், காற்றில் நீர்ப்பசை, நீர்த்திவலை இருக்கிறது. அது குடிக்க, குளிக்க, பாசனத்திற்கு உதவுமா? அது மேகமாகக் குளிர்ந்து மழையாகப் பொழிந்தால்தான் அதைப் பயன்படுத்த முடியும். இப்போது சிந்தியுங்கள். அவரவர் சுபாவத்திற்கேற்றபடி நான்கு வருணங்களைச் சிருஷ்டிக்கிறேன் என்று பகவான் சொல்லுகிறார். மானுட உடலில் தலை போன்று பிராம்மணனும், ஹிருதயம் போன்று க்ஷத்திரியனும், வயிறுபோன்று வைசியனும், கை கால்போன்று சூத்திரனும் இருக்கிறார்கள் என்று பாகவதம் விளக்குகிறது. சரீரத்தில் எல்லா உறுப்புக்களும் முக்கியமாகவும் தேவையாகவும் இருப்பன போன்று சமூகம் என்கிற அமைப்புக்கு நான்கு வர்ணங்களும் தேவை. அவற்றிற்குரிய ஸ்தானத்தில் அவைகள் இருக்கவேண்டும். நீங்கள் பையனுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுக்கிறீர்கள் என்று அம்மா, அப்பாவிடம் கோபிக்கிறாள். அந்த நிலையில் இன்று தொழிலாளிகள் செல்லம் கொடுத்து அரசியல் கட்சிகளால் வளர்க்கப்படுகிறார்கள். அதன் விளைவு இன்று பெரும் தொந்தரவுக்கு ஆளாகியிருக்கிறோம். தொழிலாளர்களே, நீங்களும் சிந்தியுங்கள். சமூகத்தில் உங்கள் பங்கு என்ன? அவரவர்க்கு அமைந்த அறிவு, செல்வம், சரீரம், சூழ்நிலை, நமக்கு அமைகிற எல்லா வாய்ப்புக்களும் நமது வினைப்பயனால் வாய்த்தவை. அவற்றிற்குப் பிறர் யாரும் பொறுப்பாளிகளல்லர். நீங்கள் முயன்று முன்னேறுங்கள். அதற்கு எல்லாரும் துணை புரிவார்கள். தொழிலாளியாக இருங்கள். கடமைகளை நன்கு விசுவாசமாய்ச் செய்யுங்கள். யஜமான விசுவாசம் அடிமைத்தனத்தின் அறிகுறியன்று. அது கடவுள் பக்தியின் முளை அல்லது இளம் பயிர் ஆகும். இன்றைக்குக் கெட்ட யஜமானனும் தொழிலாளிக்குக் குறிப்பிட்ட சலுகைகள் காட்டியே தீர

வேண்டும். அந்த அளவு சட்ட் திட்டங்கள், மனப்பான்மைகள் உருவாகிவிட்டன. ஒரு காலத்தில் காலனி ஆட்சி மூலம் தன் சொந்த தேச நலனையும் செல்வத்தையும் பெருக்கிக் கொண்டே இருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு நிலையில் இனி காலனி ஆட்சியால் லாபமில்லை, நாம் தாம் செலவுபண்ணி அதைக் காப்பாற்றி வரவேண்டும் என்கிற நிலையில் காலனி ஆட்சிகளுக்குச் சுதந்திரம் வழங்கியது. அது போன்ற ஒருநிலை இன்று தொழிலாளி, முதலாளி நிலைமையில் உரு வாகிறது. முதலாளியாய் இருப்பதில் இனி லாபமில்லை. தொழிலாளிக்கு அதிகச் சலுகை கள் தரப்படுகின்றன. வியாபார மந்தம், மழையின்மை, நோயினுல் பயிர்ச் சேதம் இக்காரணங்களால் நொடித்துப்போன விவ சாயி, வியாபாரி இவர்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் இந்த உண்மைகள் ஓரளவு விளங்கும். யானைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒருகாலம் என்பார்கள். அப்படி இன்று தொழிலாளர் காலம். அது நன்றே. ஆனுல் தீமையிலும் பொறுப்பற்ற தன்மையிலும் போகிறதைக் குறித்துப் புத்தி புகட்டுகிற வர்களேஇல்லை. தொழிலாளர்களே! பொறுப் பாக நடந்துகொள்ளுங்கள். பாபமும் பாத ரஸமும் ஜீரணம் பண்ண முடியாதவை. வினைப்பயன் என்று ஒன்று உண்டு. புண்ணி யமும் பாபமும் நன்மையும் தீமையும் தனது வினையின் பயன்களே. லோகத்தில் நல் வாழ்வு, சீலம், ஒழுக்கம், சன்மார்க்கம் இல்லாமல் பாரமார்த்திக வாழ்வு, இறை வன் அருளுக்குப் பாத்திரமாதல் சாத்தியமே இல்லை. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளுடன் வாழுங்கள். கடைசியில் கசப் பான உண்மை ஒன்றைச் சொல்லவேண்டி யது அவசியமாகிறது. நாம் விலங்கு நிலைக் குப் போயிருக்கிருேம். யானைகள் சமூக வாழ்க்கை (social life) வாழும் விலங்கு இனம் ஆகும். அவைகள் தங்களுக்குள் ஒரு தலைவனைப் பொறுக்கி எடுத்து அதன் சொற் படி நடக்கின்றன. அத்தலைவனை அவைகள் எப்படிப் பொறுக்கி எடுக்கின்றனதெரியுமா? ஆண் யானைகளில் வலிவு மிக்கவை தலைமைப் பதவிக்கு முன்வருகின்றன. அவைகளுக்கிடை யில் சண்டை நடக்கிறது. முடிவில்வெற்றி பெற்ற முரட்டு யானை தலைவனுகக்கருதப்படு கிறது. இன்று மக்களுக்கிடையில் எப்படித் தேர்வு நடக்கிறது என்பதைப் பார்ப்போம். இன்று யார் மிகவும் பொல்லாதவர்களோ யார் பாபத்துக்கு அஞ்சமாட்டார்களோ எத் தகைய தீங்கையும் துணிந்து செய்வார்களோ அத்தகையவர்கள் ஆட்சிக்குப் பொறுக்கி எடுக்கப்படுகிருர்கள். பண்பு மிக்கவன் தலை வன் ஆவது பண்டைய முறை. இன்ருே நாம் விலங்கு நிலைக்கு இறங்கியுள்ளோம். ஆகை யால் பொய்ப் பிரசாரத்தில் ஜனரஞ்சகமான பேச்சில், வீண் பேச்சுக்களை, குதர்க்கங் களைப் பேசி வெற்றி பெற்று வருகிருர்கள். கீழ்த்தர மக்களுக்கு ஓட்டுரிமை எதற்காக? விவசாயமோ, தொழிலோ, வியாபாரமோ, உத்தியோகமோ திறமையாகச் செய்து பிழைக்க மாட்டாதவர்கள் அரசியலுக்கு வந்து என்ன செய்யப் போகிருர்கள்? மக்களே சிந்தியுங்கள். நமக்கு எத்த கைய அரசியல் வேண்டும்? இன்றைய தேர்தல் முறை தேசத்தின் மிகப் பெரிய வீண் செலவு ஆகும். பெரிய ஊழல் களை வளர்க்கும் பிறப்பிடமாகும். நன்கு சிந்தியுங்கள். யானையைப் போன்று தியாகி களை ஆட்சிமுறைக்குப் பொறுக்கி எடுங்கள். நாம் உயர்ந்த பண்புடையவர்களாக வாழ முடியாவிட்டாலும் அதைக் குறித்து முயல் வதும் உகந்த சூழ்நிலையைத் தேடுவதும் முறையான பரிணுமமாகும்.

இடையருது நோய்வாய்ப்பட்ட உடல் சாத னத்திற்குத் தகுதியானது அன்று. வறுமை நிலையும் சாதனத்திற்கு உகந்தது இல்லை. பசித்தவயிறுக்குஉபதேசம்பண்ணக்கூடாது. எப்போதும் பிரச்னைகளோடு போராட்ட வாழ்க்கை வாழும் வாழ்க்கையிலும் ஆத்ம முன்னேற்றம் அமையாது. நாம் ஆரோக் கியமாகவும் சுபிக்ஷமாகவும் வாழத் தேசியப் பொருளாதாரம் பெருகவேண்டும். தேசியப் பொருளாதாரம் பெருக அரசியல் சரியாக அமையவேண்டும். நமக்கு நல்ல அரசியலை அமைத்துத்தரஇறைவனைப் பிரார்த்திப்போ மாக. நம்மிடத்தில் சுயநலம் அளவுக்கு மேல்

இருக்கிறது. உழைக்கும் மனப்பான்மை நம்மிடத்தில் இல்லை. தேவையைப் பெருக்குவதிலும், சுகபோக வாழ்விலும் நாம் நாட்டம் கொண்டிருக்கிறோம். ஆகையால் எல்லாத்துறைகளிலும் ஊழல்கள் பெருகிவிட்டன. இக்குறைகளை விரைவில் நிவர்த்தி செய்து முன்னேறுவோமாக.

பொருளாதார வளர்ச்சி பண்பாட்டின் அடிப்படையில் அமையவேண்டும். பண்பட்ட மக்கள் தாம் பொருளாதார வளர்ச்சியை நன்கு பயன்படுத்த முடியும். மனப் பண்பாடு இல்லாவிட்டால் சுயநலம் தோன்றிவிடும். சுயநலமும் பொருளாதாரமும் சேர்ந்து வளருமானால் கேடுதான் நாட்டில் உருவாகும். மக்களிடையே சுயநலமிருக்குமானால் பொருளாதார வளர்ச்சி விரைவில் சீர்குலைந்து விடும். இன்றைக்கு நாடு பொருளாதாரத்தில் முன்னேறி வருவதற்கிடையில் மக்களிடையே சுயநலம் குடிகொண்டிருப்பதால் ஊழல்களும், லஞ்சங்களும், குழப்பங்களும் நாட்டில் பெருகி வருகின்றன. கொலை, கொள்ளை முதலிய கொடிய செயல்களுக்கும் பொருளாதார வளர்ச்சியும், சுயநலமுமே காரணமாகும். எனவே பொருளாதார வளர்ச்சியும், மக்களின் பண்பாட்டின் வளர்ச்சியும் சேர்ந்தே அமையவேண்டும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நாட்டில் பொருளாதாரத்தையும், பண்பாட்டையும் வளர்க்க நாம் செயல்படவேண்டும். (முற்றும்)

பீஷ்மருமா கண்ணீர் சிந்துகிறார்?

அறத்தைக் காக்கவும், கேட்டைத் தகர்க்கவும் செய்வது போர்வீரனுடைய சுதர்மம். இந்த அரிய செயலைச் செய்யத் தயங்கினான் அர்ஜுனன். அத்தருணத்தில் அவன் உள்ளத்தில் கிருஷ்ண பரமாத்மா ஞான விளக்கேற்றி வைத்தார். அவ்விளக்கு யாண்டும் பகவத் கீதை என்னும் பெயர் பெற்றுள்ளது.

அறப்போர் பாண்டவர்களுக்கு வெற்றியை நல்கியது. வெற்றியடைந்த பாண்டவர்களுள் மூத்தவனாகிய யுதிஷ்டிரன் என்னும் தர்மராஜன் ஆட்சிபுரிய மறுத்தான். கணக்கற்ற பேரைக் கொன்றபின் தான் நாடு ஆளமாட்டேன் என்றும், தவம் செய்யக் காடு ஏகுவேன் என்றும் அவன் தீர்மானித்தான். அடுத்தபடியாக அவனைச் சரிப்படுத்தும் பொறுப்பு கிருஷ்ண பரமாத்மாவுக்கு உரியதாயிற்று. அச்செயலை அவர் தாமே செய்யவில்லை. போர்க்களத்தில் அம்புப் படுக்கையின் மீது பீஷ்மாச்சாரியர் படுத்து யோகநிஷ்டையில் இருந்தார். தம் உடலை உகுப்பதற்கு உத்தராயனப் புண்ணிய காலத்தை அவர் எதிர்பார்த்திருந்தார்.

அவ்வேளையில் பாண்டவர்கள் ஐவரைத் தம்மோடு அழைத்துக்கொண்டு கிருஷ்ண பரமாத்மா ஆங்கு எழுந்தருளினார். கண் விழித்து அவரைப் பார்த்ததும் கர்ம வீரராகிய பீஷ்மர் கட கடவெனக் கண்ணீர் சிந்தினார்.

அதைப் பார்த்த அர்ஜுனன் திகைத்தான். பீஷ்மருமா கண்ணீர் சிந்துகிறார்? என்னும் ஐயம் அவன் உள்ளத்தில் உதித்தது. வஜ்ராயுதத்துக்கு நிகரானவர் பீஷ்மர். அறிவிலும் ஆற்றலிலும் கிருஷ்ணனுக்கு நிகரானவர். அத்தகையவருக்குக் கண்ணீர் சிந்தும் கீழ்மை எங்கிருந்து வந்தது என விஜயன் வியந்தான்.

'பாட்டனாரே, இத்தயக்கம் எதற்காக?' என்று கிருஷ்ணபரமாத்மா வினவியதற்குப் பீஷ்மர் விடுத்த விடையாவது: ''பிரபோ! யாண்டும் தாங்கள் இந்தப் பாண்டவர்களுக்கு மாறாத துணையாக இருந்து வருகின்றீர். அப்படியிருந்தும் இந்த மண்ணுலகவாழ்வில் இவர்கள் எத்தனை எத்தனை கஷ்டதசைகளுக்கு ஆளானார்கள். பரமாத்மாவின அருளுக்குப் பாத்திரமானவர்களின் கதியே இத்தகையதென்றால் பரமாத்மாவின் அருளைப் புறக்கணிக்கின்றவர்களுடைய பாங்கு எத்தகையதாகும் என்னும் சிந்தனை என் உள்ளத்தில் உதித்தது. அந்தச் சிந்தனையின் விளைவுதான் இந்தக் கண்ணீர்.''

ஜயதேவர் சரிதம்

பக்தி, ஞானம் இரண்டும் முக்கிய மானவை. பக்திக்கு முதல் இடம் தரவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். பக்தியின் மூலம் பக்தன் தன்னைப் பகவானிடம் ஒப்படைக்கின்றான். தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாது அனைத்தையும் பகவானிடம் ஒப்படைப்பது பக்தனுடைய பாங்காகும்.

யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் [வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்

என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வுயர்நிலையைப் பக்தன் விளையாட்டுப் போன்று அடைந்துவிடுகின்றான். பகவானிடம் முழுதும் தங்களை ஒப்படைத்த பக்தர்கள் நம் நாட்டில் வாழ்ந்திருக்கின்றனர். மஹா பக்தர்களாக வாழ்ந்தவர்களுள் ஜயதேவரும் ஒருவராவார்.

மக்கள் உயர்வு தாழ்வின்றிப் பகவான் நாமத்தைப் பக்தியுடன் உச்சரித்தவண்ணம் இருக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய ஜகந்நாதம் என்னும் புண்ணிய நகரம் உண்டு. அந்நகருக்குப் பக்கத்தில் பில்வகாம் என்னும் ஊர் இருக்கிறது. அவ்வூரில் நாராயண சாஸ்திரி என்னும் ஒரு புண்ணிய சீலர் வாழ்ந்து வந்தார். அவர் நாராயண பக்தி உடையவர். இரவும் பகலும் கல்லும் உருகும் படியாக நாராயணன் திருநாமங்களைப் பாராயணம் செய்வார். அவருக்குத் தம் இயல்புக்கேற்ற குணமுடைய கமலாபாய் என்னும் உத்தமி பத்தினியாக வாய்த்திருந்தாள். இருவரும் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தனர்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

என்பது குறள். அதிதிகள் வீட்டுக்கு வந்தால் அவர்களை அன்போடு வரவேற்று உணவு கொடுத்து உபசரித்து அவர்கள் இருவரும் மகிழ்ச்சி அடைவார்கள். பெரியோர்களிடத்தில் வணக்கமாக நடந்துகொள்வார்கள். சதா ஹரி ஹரி என்று ஜபம் செய்து கொண்டே இருப்பார்கள். வாழ்க்கை அவர்களுக்கு இன்பகரமாக அமைந்திருந்தது. எப்பொழுதும் நாராயணன் நினைவு மனதில் இடம் பெற்றிருக்கும். நாக்கு நாராயண நாமத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும். கை சலிக்காது தானம் செய்துகொண்டிருக்கும். தொல்லைகள் துன்பங்கள் வருமிடத்துச் சஞ்சலம் அடையாது, கோபிக்காது, அமைதியோடு அத்தகைய சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியுற்று இருப்பார்கள். அற்ப ஆசைகளை மனதிலிருந்து அடியோடு அகற்றி இருந்தார்கள். அத்தகைய தம்பதிகளுக்குப் புத்திரபாக்கியம் இல்லாத குறை இருந்தது. புத்திர பாக்கியம் வேண்டும் என்ற விருப்பமும் அவர்கள் உள்ளத்தில் இருந்தது. கமலாபாய் கனவில் ஸ்ரீமந் நாராயணன் தோன்றி, புத்திர பாக்கியம் இல்லாத குறை உங்களுக்கு நீங்கும் என்று அருள்புரிந்தார்.

அவ்விரு தம்பதிகளுக்கும் ஓர் அழகிய புத்திரன் வாய்த்தான். அன்புடன் அப்புத்திரனை வளர்த்து ஜயதேவன் என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டனர். அக்குழந்தைக்கு ஐந்து வயதானதும் உபநயனம் செய்துவைத்தார்கள். தக்க வயது வந்தவுடன் பத்மாவதி என்னும் கன்னியை மணம் செய்து வைத்தனர். மணம் சிறப்பாக நடந்தது. ஜயதேவரும் பத்மாவதியும் இன்பமாக இல்லறம் நடாத்தி வந்தனர். அதிகாலையில் எழுந்து நாராயண நாமத்தை உச்சரிப்பார்கள். பெரியோர்களுக்கு மனமுவந்து பணிவிடை செய்வார்கள். சத்தியத்தைக் கடைப்பிடித்தார்கள். சத்சங்கத்தை நாடிப்போவார்கள். சாதுக்களைக் கண்டால் வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். இவ்விதமாக இருவரும் மனம் ஒத்து மூவரும், தேவரும், முக்தரும், சித்தரும், யாவரும் மனம் மகிழும்படியாக இல்லறம் நடாத்தி வந்தார்கள். மகனுக்கும் மருமகளுக்கும் ஆசீர்வாதம் செய்து பெருவாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்திவிட்டு நாராயணசாஸ்திரியும், கமலாபாயும் தவம் செய்ய வனம் சென்றுவிட்டார்கள். பெற்றோர்களின் ஆசிபெற்று இருவரும் சிறப்புடன் இல்லறம் நடாத்திவந்தார்கள்.

வீடு தேடிவந்த நல்லவர்களுக்கெல்லாம் வாரி வழங்கி வந்தார்கள். தானம் செய்வதில் தங்களுக்கு நிகர் இல்லை என்னும்படியாக விளங்கினார்கள். தங்களிடம் உள்ளதை எல்லாம் வேண்டுபவர்களுக்கு எடுத்து வழங்கிக்கொண்டே இருந்தார்கள். தாங்கள் குடியிருந்த வீட்டையும் விற்றுத் தானம் செய்தார்கள். மனைவியிடமிருந்த மாங்கல்யத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் வறியவர்களுக்கு வழங்கிவிட்டார்கள். சிவபெருமான் உலகனைத்தையும் உடையவனாக இருந்தும் பிக்ஷாடனாக இருப்பது போன்று ஜயதேவரும் பிக்ஷை ஏற்கத் தொடங்கினார். பிக்ஷையில் கிடைத்த பொருளைப் பத்மாவதியிடம் கொண்டுவந்து கொடுக்க அதைப் பக்குவம் செய்து நாயகனுக்குப் படைத்தாள். புறத்தில் வந்த வறுமை அவர்கள் அகத்தில் சிறிதும் இடம் பெறவில்லை. அவர்களுடைய அகமானது யாண்டும் நாராயணனுடைய சிந்தையில் மூழ்கி ஆனந்த நிலையில் இருந்தது.

ஜயதேவர் செய்த கீர்த்தனங்களைப் பில்வகாமில் உள்ள மக்கள் ஒரு நூலாகச் செய்தார்கள். ஜகந்நாதத்தில் திருவிழா நடக்கும்போது பில்வகாமில் உள்ள மக்கள் அத்திருவிழாவுக்குப் போனார்கள். அப்படிப் போகும் பொழுது ஜயதேவர் செய்த கீர்த்தனைப் புத்தகத்தையும் எடுத்துச் சென்றார்கள். ஜகந்நாதருடைய திரு சந்நிதானத்தில் அப்புத்தகத்திலுள்ள தோத்திரங்களைப் பாடும்பொழுது கோயிலின் உள்ளிருந்து ''அங்கீகரித்தேன், அங்கீகரித்தேன்; ஆனந்தம் அடைந்தேன், ஆனந்தம் அடைந்தேன்'' என்னும் சப்தம் ஒரு முகூர்த்த காலம் உண்டாயிற்று. அந்தத் தெய்விக ஒலியைத் திருக்கோவிலுக்கு வந்திருந்தவர்கள் அனைவரும் கேட்டு ஆனந்தம் அடைந்தனர். ஜயதேவ சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய வாக்கியங்களை வேதவாக்கியங்களாக ஏற்றுக் கொண்டார்கள். அவருடைய கீர்த்தனங்களைக் கேட்டு ஆனந்த மேலிட்டால் தங்களை மறந்து கண்ணீர் மல்க ஆனந்தக் கூத்தாடினார்கள் பலர். ஜகந்நாதர் கோவிலில் உற்சவம் நடக்கும்பொழுது கீர்த்தனங்கள் பாடி அவ்வூர் அரசன் அக்கோயிலில் கொண்டு வந்து அரங்கேற்றுவான். அவனுடைய கீர்த்தனங்களை அங்கீகரிக்க அந்தணர்கள்மறுத்துவிட்டனர். ''ஜகந்நாதரைக்குறித்துத்தானே நானும் தோத்திரங்கள் பாடி இருக்கின்றேன்; என்னுடைய தோத்திரங்களை ஏற்க மறுக்கின்றீர்கள்; ஜயதேவர் பாடிய தோத்திரங்களை மட்டும் நீங்கள் ஏன் துதிக்கின்றீர்கள்?'' என்று அரசன் அந்தணர்களைக் கேட்டான். அதற்கு அந்தணர்கள் பகர்ந்ததாவது: '' உன்னுடைய தோத்திரங்களை ஜகந்நாதர்அங்கீகரிப்பாரானல் நாங்கள் அங்கீகரிப்போம்'' என்றார்கள். அரசன் எழுதிய புத்தகத்தையும், ஜயதேவர் எழுதிய புத்தகத்தையும் ஜகந்நாதருடைய திருப்பாதங்களில் வைத்துச்சிலஅந்தணர்களையும், காவலர்களையும் இரவு முழுவதும் காவல் வைத்தார்கள். மறுநாள் காலையில் கோயிலுக்குள் சென்று பார்க்கையில் அரசன் பாடிய புத்தகங்கள் வெளியில் எறியப்பட்டிருந்தன. ஜயதேவர் பாடிய புத்தகத்தின் மேல் அங்கீகரித்தேன் என்று எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்ட அரசன் வாடிய முகத்துடன் வீட்டுக்குச் சென்றான்.

''இறைவா, நான் உனக்குச் செய்த அபசாரம் என்ன? ஸ்ரீ ரகுராமா, வேணுகோபாலா, வாசுதேவா, தேவ தேவா என்னை ரக்ஷிக்கவேண்டும்'' என்று அரசன் இறைவனை வேண்டினான். ஜகந்நாதன் அரசனுடைய கனவில் தோன்றி ''அரசனே, நீ ஜயதேவர் கீர்த்தனங்களைத் துதிப்பாயாகில் நீ செய்த பதின்மூன்று ஸ்லோகங்களை நான் அங்கீகரிப்பேன்'' என்று கூறி மறைந்தார். அரசன் உடனே விழித்தெழுந்தான். ஜகந்நாதர் ஆலயத்தை அடைந்து அங்குள்ள அந்தணர்களுடன் கூடி ஜயதேவர் அருளிச் செய்த பாடல்களைத் தோத்திரம் செய்தான். அப்பொழுது ஸ்ரீ ஜகந்நாதர் அசரீரியாய் ''அரசனே, நீ செய்த பாடல்களில் முதல் பதின்மூன்று பாடல்களை அங்கீகரித்தேன்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அன்று முதல் அரசன் இயற்றிய பதின்மூன்று பாடல்களை ஜயதேவருடைய பாடல்களோடு சேர்த்து அந்தணர்கள் பாராயணம்

செய்யத் தொடங்கினர்கள். பகவானிடம் நம்முடைய ஆணவ அகங்காரத்தை அகற்றி நம்மை அவரிடம் ஒப்படைக்கும் பொழுது தான் அவர் நம்முடைய செயல்களை அங்கீ கரிக்கிருர் என்பது இந்நிகழ்ச்சியின் மூலம் விளங்குகிறது.

ஜயதேவரும், பத்மாவதியும் பகவானிடம் தங்களை ஒப்படைத்துத் தெய்வீக வாழ்க்கை வாழ்ந்துவரும் செய்தியைப் பத்மாவதியின் தந்தையார் கேள்வியுற்ருர். உடனே அவர் கள் இருக்கும் இடத்திற்கு வந்தார். ஜய தேவரை மருமகனகவும், பத்மாவதியை மகளாகவும் பெறுவதற்கு நான் என்ன தவம் செய்தேனே! ஜயதேவர் பகவானே ஆவார். பத்மாவதி ஸ்ரீதேவி ஆவாள். இவர் களைத் தோத்திரம் செய்தால் என்னுடைய பாபங்கள் நீங்கும் என்று எண்ணியவராகப் பத்மாவதியின் அருகில் சென்று மகளே! என்று அழைத்தார். பத்மாவதி சாஷ்டாங்க மாகத் தந்தையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினள். ''இவ்வளவு நாட்களாக என்னை மறந்து நீங்கள் எப்படி இருந்தீர்கள்? என்மீது இருந்த அன்பைத் துறந்துவிட் டீர்களா! என்னை எப்படி மறந்தீர்கள்?'' என்று பத்மாவதி அன்புடன் மொழிந்தாள். அவ்வமயம் ஜயதேவர் நிஷ்டை கலைந்து வந் தார். மாமனரைப்பார்த்ததும் இரு கரங் களையும் கூப்பி அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். ''உத்தமரே, உங் கள் புத்திரியின் உதவியினல் சாதுக்கள் சேவையை நான் நன்கு செய்துவருகின் றேன்'' என்ருர் ஜயதேவர். அதைக்கேட்டுப் பத்மாவதியின் தந்தை மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தாம் கொண்டு வந்திருந்த ஆடை ஆபரணங்களை எல்லாம் அவர்களுக்கு அளித்தார். சிலநாள் அவர்களுடன் தங்கி யிருந்து அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு பத்மாவதியின் தந்தையார் தம் ஊருக்குப் புறப்பட்டார். தந்தையாரை வழி அனுப்புவதற்குப் பத்மாவதி உடன் சென்ருள்.

பத்மாவதி வீடு திரும்புவதற்குள் ஜய தேவர் வீட்டைவிட்டு வெளியே சென்று ஆரண்யத்துக்குப் போய்விட்டார். ஆரண் யத்திலுள்ள ஒரு குகைக்குள் புகுந்து ஆங்கு ஒரு மேடையின் மீது பத்மாசனத்தில் அமர்ந்து கண்களைமூடிப் பகவான் பாதத்தில் மனதை ஒருமுகப்படுத்தித் தம்மை மறந்து பகவானில் கலந்து பிரம்மானந்தம் அடைந் திருந்தார். பத்மாவதி வீடு திரும்பி வந்த பொழுது வீட்டுக்குள் கணவனைக் காண வில்லை. முகவாட்டம்அடைந்தாள்; பரபரப்ப டைந்தாள்; நாலா பக்கங்களிலும் தேடினள்; எங்கும் கணவனைக் காணவில்லை; துயரத் துக்கு ஆளானள்; புலம்பிக்கொண்டு ஆரண் யங்களில் தன் கணவனைத்தேடினள்: மலைக் குகைகளிலும், புதர்களிலும், பர்ணசாலைகளி லும், அடர்ந்த சோலைகளிலும் கணவனைத் தேடிப்பார்த்தாள். மயில்களையும், குயில் களையும் பார்த்து ''என் கணவனைக் கண்டீர் களா?'' என்றுகேட்டாள். ''ஓ! நரிகளே, என் கணவனைக் கண்டீர்களா? ஓ! புலிகளே, புனுகு பூனைகளே, காக்கைகளே என் கணவர் இங்கு வந்தாரா?'' என்று மிருகங்களையும், பக்ஷிகளை களையும் கேட்டுக்கொண்டே பெரிய மலைக் குகைக்குள் புகுந்தாள். அங்குப் பத்மாசனத் தில் கண்களை மூடிப் பிரம்ம நிஷ்டையில் இருக்கும் கணவனைக் கண்டாள். அவரை மும்முறை வலம் வந்து அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினள். ஜயதேவர் கண் விழித்துப் பார்த்தபொழுது மனைவி ஆங்கு வணங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்கிக் காட்டைவிட்டு நாட்டுக்குப்போய்த் தம் வீடு சேர்ந்தார். சில வருடங்கள் மனைவியுடன் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்திவந்தார்.

ஜயதேவர் உள்ளம் நாளுக்கு நாள் பரத்தை நோக்கிச் செல்லுவதில் அதிதீவிரம் அடைந்து வந்துகொண்டிருந்தது. ஒரு நாள் வெகு நேரம் அவர் நிஷ்டையில் அமர்ந்துகொண்டு இருந்தார். நிஷ்டை கலைந்தான பிறகு தம்மை மறந்து தெய்வத் தின்மீது மனதைச் செலுத்தியவராக வீதி வழியே போய்க்கொண்டு இருந்தார். பரவச நிலையில் சென்றுகொண்டிருந்த அவரைப் பகவத்தாசன் என்னும் வியாபாரி ஒருவன் சந்தித்தான். அவன் மிகவும் பக்திமான்.

ஜயதேவரைப் பார்த்ததும் அவன் தன் இரு கைகளையும் குவித்து வணக்கம் செலுத்தினான். ஜயதேவருடைய தரிசனம் கிடைத்ததை ஒரு பாக்கியமாகக் கருதினான். அவரைத் தூக்கிக்கொண்டு போய்த் தன் ரதத்தின்மீது வைத்துப் பில்வகாமில் இருந்து தன் ஊருக்கு ரதத்தை ஓட்டிச் சென்றான். ஜயதேவரைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போய் அவனும், அவன் மனைவியும் பூஜித்து வழிபட்டனர். ஜயதேவருடைய மனைவி பத்மாவதி அவரைத் தேடுவாள் என்று எண்ணிப் பில்வகாமுக்கே அவரைத் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்தான். ஜயதேவரை ரதத்தின்மீது எழுந்தருளச் செய்து பத்மாவதிக்காகப் பல ஆடை ஆபரணங்களையும், ஆயிரம் வராகன்களையும் ஒரு பெட்டியில் வைத்து ஜயதேவருடன் அனுப்பி வைத்தான். விரைவில் ஜயதேவரைக்கொண்டு போய் அவருடைய வீட்டில் விட்டுவிட்டு வர வேண்டும் என்று தேர்ச்சாரதிக்கு உத்தரவு போட்டான்.

ஜயதேவர் வர்த்தகனைப் பார்த்துக் கூறியதாவது: ''பணம் ஓர் உயிர்க்கொல்லி; அது மனதைப் பாழாக்கிவிடும்; பாதகச் செயலைச் செய்யும்படி அது தூண்டும்; பக்திக்கு அது இடைஞ்சல்; அத்தகைய பணம் எனக்கு வேண்டாம்'' என்றார். ஆனால் வர்த்தகன் வற்புறுத்தி என் தாய் பத்மாவதிக்கு இவைகளைச் சன்மானமாகக் கொடுத்து அனுப்புகின்றேன் என்று கூறி அவ்வாபரணங்களையும், வராகன்களையும் ரதத்திலேயே வைத்து அனுப்பினான். ஜயதேவரையும், அப்பொருள்களையும் பத்திரமாகக் கொண்டுபோய்ப் பத்மாவதியிடம் ஒப்படைக்கும்படி சாரதிக்கு எச்சரிக்கை செய்தான். ரதத்தை வேகமாகப் பில்வகாமை நோக்கி ஓட்டுமாறுக் கூறினான். சாரதி ரதத்தை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றான். வழியில் காடு ஒன்று இருந்தது. அக்காட்டின் மத்தியில் ரதம் போய்க்கொண்டிருந்தபொழுது அந்த ரதத்தின் சப்தத்தைக் கேட்டுத் திருடர்கள் வந்து ரதத்தை வழிமறித்து நிறுத்தினார்கள். ரதத்திலுள்ள ஆபரணங்களையும், வராகன்களையும் கொள்ளையடித்துக்கொண்டு சாரதியை வாளால் வெட்ட முற்படுகையில் அவன் ரதத்திலிருந்து குதித்து அவர்களிடமிருந்து தப்பி ஓடிவிட்டான். ஜயதேவர் அமைதியே வடிவெடுத்தவராக ரதத்தைவிட்டுக் கீழே இறங்கினார். உலகப் பொருள்களிடத்தோ, தன் உடம்பினிடத்தோ பற்றுதல் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டினார். பொருள்கள் மீது ஆசை வைத்துள்ள கள்வர்கள் அவற்றை எடுத்துக் கொண்டார்கள். ரதத்தின் மீதும் அவர்களுக்கு ஆசை இருக்குமாயின் அதையும் ஓட்டிக்கொண்டு போகட்டும் என்று ரதத்தை விட்டுக் கீழே இறங்கி பகவத் சிந்தனையுடன் ஜயதேவர் நடந்துபோனார். ஜயதேவரை மேலும் பகவான் சோதிக்க விரும்பினார். கள்வர்கள் ஜயதேவரைத் தாக்க வந்தார்கள். ஜயதேவர் அவர்களுக்கு வந்தனம் செலுத்தி அவர்கள் விரும்பும் பொருள் தம்மிடத்து இல்லை என்றார். கள்வர்கள் ''உன்னிடத்து வஸ்திரம்இருக்கிறது. அது உனக்கெதற்கு?'' என்று கூறி அதையும் பறித்துக்கொண்டார்கள். ஜயதேவர் நிர்வாணமாகப் போய்க் கொண்டிருந்தார். மேலும் கள்வர்கள்அவரை விடவில்லை. ''நீ பாசாங்கு செய்கின்றாய். நாங்கள் தங்கியிருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பதற்காகப் போய்க் கொண்டிருக்கின்றாய். எங்களைப் பலருக்கும் காட்டிக்கொடுக்கத் தீர்மானம் செய்துள்ளாய். திருடர்களாகிய எங்களிடம் உன் திருட்டுத்தனம் பலிக்குமா? உன்னை நாங்கள் சும்மா விடப்போவதில்லை'' என்று கூறிக் கள்வர்கள் அவருடைய கைகளையும், கால்களையும் வெட்டி இரண்டாகத் துண்டித்து அவரைப் பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டுத் தேரின்மீது ஏறிக்கொண்டு போய்விட்டார்கள்.

வினையின் விளைவாக வந்த உடல் அதற்குரிய பலனைப் பெற்றிருக்கிறது. முற்பிறப்பில் கைகால்கள் செய்த பாபச்செயல்களுக்கு ஏற்ற தண்டனை அவற்றிற்குக் கிடைத்திருக்கிறது. இத்தேகத்திற்கு இனி முடிவுகாலம் வந்து விட்டது போல் இருக்கிறது. இத்தேகம் அழிந்து போவதற்கு முன்பு இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீமந் நாராயணனிடம் நம்மை ஒப்படைத்து விடுவோம் என்று தீர்

மானித்தவராக நாராயண தியானத்தில் மூழ்கி விட்டார். ஜயதேவருக்கு ஞானக்கண் திறந்தது. அவருடைய ஹிருதய கமலத்தில் ஸ்ரீமந் நாராயணன் பேரானந்தப் பேருருவமாகக் காட்சி கொடுத்தார். ஜயதேவர் ஆனந்தமடைந்தார். ஜயதேவருடைய மனம் பேரின்பத்தில் மூழ்கியதாய் ஞானத்தில் உறுதி பெற்றதாயிற்று. ஸ்ரீமந் நாராயணனை வேண்டியவாறு புகழ்ந்தார். ''மெய்ஞ்ஞான போதனே, வேணு நாதனே, லீலா விநோதனே, அதீதனே'' எனத் தோத்திரம் செய்தார். மனதைப் பகிர்முகத்தில் போவதைத் தடுத்து அந்தர்முகத்தில் ஆழ்ந்து செலுத்தி அஞ்ஞான இருளைக் கடந்து பகவானைப் புகழ்ந்தார். ஜயதேவர் உடலுக்கு வந்த துன்பத்தை மறந்து பகவத் சிந்தனையில் மனதைச் செலுத்திக் காட்டில் பாழுங் கிணற்றில் இருக்கையில் ஜயதேவரின் பத்தினியாகிய பத்மாவதி நாட்டில் கணவனைப் பல இடங்களிலும் தேடிப் பரிதவித்துக் கொண்டிருந்தாள். ஊரெல்லாம் தேடிப் பற்பல இடங்களிலெல்லாம் சென்று பார்த்து உளம் நைந்தாள்.

பத்மாவதியின் தந்தையார் பத்மாவதிக்குத் தேறுதல் கூறி ஜயதேவரைத் தாம் அழைத்து வருவதாகப் பத்மாவதியிடம் விடைபெற்றுக்கொண்டுவெளியே சென்றார். நாட்டிலும் காட்டிலும் தேடிப்பார்த்தார். எங்கும் ஜயதேவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. வீட்டிற்குத் திரும்பி வந்து பத்மாவதியிடம் ''அம்மா, நான் அவரைப் பல இடங்களிலும் தேடினேன். அவர் எனக்கு அகப்படவில்லை. ஒருவேளை மலைக்குகைக்குள் புகுந்து தவம் செய்துகொண்டிருப்பார் போல் தோன்றுகிறது. நீ கவலைப்படவேண்டாம். இன்னும் சில நாளில் அவர் திரும்பி வந்துவிடுவார்'' என்று கூறினார். ஆனால் பத்மாவதிக்குத் துயரம் தாங்கமுடியவில்லை. அழுதகண்ணும் தொழுத கையுமாக இருந்தாள்.ஒருவேளை உண்டும், தரையில் புரண்டும்,பேச்சற்றும்,உறங்காதும் காலம் கழித்து வந்தாள். ''ஓ பகவானே, என் கணவரைப் பார்க்க எத்தனை நாள் செல்லுமோ? இப்பிறப்பில் காண்பேனோ,காணமாட்டேனோ?'' என்று புலம்பினாள். இங்ஙனம் பத்மாவதி துயரக்கடலில் மூழ்கிக் கிடந்தாள்.இங்ஙனம் நாட்டில் பத்மாவதி துயரத்தில் மூழ்கிக் கிடக்கையில் காட்டில் ஜயதேவருக்கு என்ன நிகழ்ந்தது என்று பார்ப்போம்.

கிரவுஞ்ச ராஜன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றிருந்தான். காட்டில் ஜலம் அருந்துவதற்காக ஜயதேவர் விழுந்து கிடந்த கிணற்றை எட்டிப் பார்த்தான். அக்கிணற்றில் அவன் ஜலத்தைக் காணவில்லை. பரமயோகி ஒருவர் இருப்பதைக் கண்டான். தன் வீரர்களை அனுப்பி அந்த பரமயோகியை மேலே எடுத்து வரச் சொன்னான். அரசன் அவரை யார் என்று விசாரித்தான். அவர் பதில் கூறாது மௌனமாய் இருந்தார். ''மகானே, உங்கள் கைகால்கள் துண்டுபட்டிருப்பதற்குக் காரணம் என்ன? உங்களுக்கு எந்தத் துஷ்டர்கள் இந்தக் கேடு செய்தார்கள்? நீங்கள் யார் என்பதை மறைக்காது சொல்லுங்கள். உங்களுக்கு ஏற்பட்டுள்ள குறையையும் சொல்லுங்கள்.'' இங்ஙனம் அரசன் பலதடவை கேட்டான். சிறிது நேரத்திற்குப் பிறகு ஜயதேவருடைய சமாதி கலைந்தது. கண்களைத் திறந்து பார்த்தார். அரசன் முன்னால் இருப்பதைக் கண்டு ''நீர் ஏன் என்னை மேலே எடுத்து வரச் சொன்னீர்? உன்னதமான என் சமாதி கலைந்துவிட்டது. ஊழின் பயனாக எனக்கு இந்த நிலை வந்து அமைந்திருக்கிறது. குற்றம் இல்லா ராமன் சீதையை இழந்து எவ்வளவு துயரப்பட்டார்? நானும் என் பிராரப்தத்தினால் கைகால்களை இழந்திருக்கின்றேன். இவ்வுடலை அறிஞர்கள் பெரிதாகக் கருதமாட்டார்கள்.'' இங்ஙனம் கூறிவிட்டுக் கண்களை மூடி நிஷ்டையில் ஜயதேவர் ஆழ்ந்துவிட்டார். அரசன் திகைப்பும் பதைபதைப்பும் அடைந்தான். நம்முடைய ஆட்சியில் மகான்களுக்கு இத்தகைய தீங்கு நேரிட்டலாமா? இவர் என் சற்குரு ஆவார். என் இஷ்ட தெய்வமாகிய பரமேசுவரன் என்னை ஆட்கொள்வதற்கு இவர் உருவத்தில் இங்கு எழுந்தருளி இருக்கின்றார். இங்ஙனம் கூறி ஜயதேவரை வலம் வந்து தோத்திரம் செய்து வீழ்ந்து வணங்கினான். (தொடரும்)

குறிப்புகள்

சேரியில் வழிபாடு

'உள்ளத்தனையது உயர்வு' என்பது கோட்பாடு. மக்களுடைய உள்ளத்தை உயர்த்துவது மக்களுக்குச் செய்கின்ற பணிவிடையாகின்றது. மனதை உயர்த்துவதற்குப் பகவந்நாமத்தை உச்சரிப்பது சிறந்த உபாயமாகிறது. கிருஷ்ணகிஷோர் ஒரு தடவை தாகசாந்தி பெறுவதற்காகக் கீழ்க்குல மகன் ஒருவனிடம் நீர் கேட்டார். அவன், தான் கீழ்க்குலத்தைச் சேர்ந்தவனென்றும் தன் கையால் தண்ணீர் இறைத்து அவருக்குக் கொடுப்பது தகாது என்றும் கூறினன். இறைவனுடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டு நீர் இறைத்துக் கொடுத்தால் தோஷமில்லை என்று கிருஷ்ணகிஷோர் கூறினர். அவனும் அங்ஙனமே செய்யக் கிருஷ்ண கிஷோர் அவனிடம் நீர் வாங்கிப் பருகினர். பகவந் நாமத்துக்கு மனதின் கீழான இயல்பை மாற்றி அமைக்கும் சக்தி உண்டு.

உயிர்கள் அனைத்தும் இறைவனுடைய தோற்றங்கள். எனவே எல்லா உயிர்களும் இறைவனுடைய அம்சமாகையால் புனிதமானவைகள் ஆகின்றன. சமுதாயம் கீழ் ஜாதி மேல் ஜாதி என்று பிரித்துவைத்துச் சண்டை சச்சரவுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறது. விவேகத்தைக்கொண்டு ஜாதிப் பிரிவினையை ஒழிக்க வேண்டும். கடவுள் வழிபாடு அனைவரும் செய்தாகவேண்டும். கடவுள் வழிபாடு செய்பவர்களுக்கிடையில் கீழ்ஜாதி மேல்ஜாதி இல்லை. 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார்சடை கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்று நாவுக்கரசர் பகர்கிறார். பக்தர்கள் யாவரும் வணங்கத்தக்கவர்கள் ஆகிறார்கள். ஆழ்வார் ஒருவரும் 'பழிதொழிலும் இழிகுலமும் படைத்தோரேனும் ஆதியாய் அரவணையாய் என்பராகில் அவரன்றே யாம் வணங்கும் அடிகளாவார்' என்று பகர்ந்துள்ளார். இன்றைக்குக் கீழ்க்குல மக்கள் என்று ஒதுக்கியிருக்கும் மக்களை உயர்த்துவதற்கு அருளாளர்கள் கடைப்பிடித்த வழியை நாமும் கடைப்பிடித்தல் வேண்டும். ஒவ்வோர் ஆண்டுப் பாதயாத்திரையிலும் கீழ்க்குல மக்களோடு தொடர்புகொள்வதும், அவர்களோடு சமபந்தி போஜனம் செய்வதும், அவர்களுக்கு உடைகள் வழங்குவதும், அவர்களுக்கிடையில் பக்தியை வளர்ப்பதும் ஆகிய செயல்களைப் பாதயாத்திரிகர்கள் செய்து வருகின்றனர். இவ்வாண்டு மே மாதம் நடந்த யாத்திரையில் விஜயமங்கலத்துக்குப் பக்கத்தில் உள்ள கினிப்பாளையம் சேரிமக்களோடு தொடர்பு வைத்தோம். அவர்களுடைய இல்லங்கள்தோறும் சென்று அவர்களுக்கு அன்பை வழங்கினேம். அவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து அவர்களுடைய அன்பைப் பெற்றேம். அச்சேரியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் முருகன் படம் ஒன்று வழங்குவதாகவும் வாக்களித்திருந்தோம். ஜூன் மாதம் 19ஆம் தேதி சனிக்கிழமையன்று நாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றி வைத்தோம்.

வள்ளி, தெய்வானையோடு கூடிய முருகன் படம் ஐம்பது படங்கள் தயார் செய்தோம். கினிப்பாளையம் சேரி மக்களுக்கு ஜூன் 19ஆம் தேதி வள்ளி தெய்வானையோடு கூடிய முருகன் படங்களையும், விபூதி, சந்தனம், ஊதுபத்தி, சூடம், தேங்காய், பழம் முதலிய பூஜைப் பொருள்களையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தோம். முருகன் திருவருளால் அன்றைய நாள் கிருத்திகை நாளாக அமைந்தது மிகப் பொருத்தமானதாகப் போய்விட்டது. வள்ளி தெய்வானையோடுகூடிய முருகன் படம் ஒன்று, விபூதிப் பொட்டலம் ஒன்று, ஊதுபத்தி ஒரு கட்டு, சூடம் ஒரு பாக்கெட், சந்தனம் ஒரு கட்டி, குங்குமம் ஒரு டப்பி, ஊதுபத்தி ஸ்டான்ட் ஒன்று, தேங்காய் ஒன்று, மாம்பழம் ஒன்று, பன் ஒன்று ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குவதாகத் தீர்மானம் செய்து ஒவ்வொன்றிலும் ஐம்பது செட்டுகள் தயார் செய்தோம். பாதயாத்திரைக்கு வந்திருந்த அன்பர்களும் பக்தர்களும் ஒரு வேனில் அச்சாமான்களை வைத்துக்கொண்டு கினிப்பாளையம் சேரிக்கு

19—6—82 மாலை 7 மணி அளவில் போய்ச் சேர்ந்தோம். கினிப்பாளையம் சேரி மக்கள் மகிழ்ச்சியோடு எங்களை வரவேற்றார்கள். கினிப்பாளையம் சேரி மக்களுக்கு மதுரைவீரன் கோவில் ஒன்று இருக்கிறது. அக்கோவிலில் அனைவரும் கூடினோம். ஐம்பது முருகன் படங்களையும் அக்கோவிலில் வரிசையாக வைத்தோம். ஒரு மணி நேரம் நாம பஜனையும், பஜனையும், தோத்திரப் பாக்களையும்,அர்ச்சனையும் சொல்லி வழிபாடு செய்தோம். அவ்வழிபாட்டில் கினிப்பாளையம் சேரி மக்களும், கினிப்பாளையம் அன்பர்களும், கினிப்பாளையம் பக்தர்களும், விஜயமங்கலம் பக்தர்களும் கலந்துகொண்டனர். வழிபாடு உருக்கமாக அமைந்திருந்தது. வழிபாட்டில் கினிப்பாளையம் சேரிமக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள்.

கினிப்பாளையம் சேரி மக்களுக்கு முருகனுடைய திருவருள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது. கினிப்பாளையம் சேரி மக்கள் முன்பு செய்த தவத்தின் பயனால் முருகனே அவர்களுடைய வீடுகளுக்கு எழுந்தருளத் திருவுள்ளம் கொண்டுள்ளார் என்பது விளக்கப்பட்டது. முருகனை வழிபடுவதற்காக மக்கள் அவனுடைய ஆறுபடை வீடுகளுக்குச் செல்கிறார்கள். கினிப்பாளையம் மக்களுடைய வீடுகளைத் தேடிக்கொண்டு முருகனே இன்று எழுந்தருள வந்திருக்கிறார் என்று சொன்னதும் அம்மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சேரி மக்கள் அனைவரும் முருக பக்தர்கள் என்றும் நாள்தோறும் முருகனை வழிபடுதல் முறையாக நிகழ வேண்டுமென்றும் கூறியதும் அவர்களுடைய உள்ளம் உற்சாகம் அடைந்தது. முருகனை நாள்தோறும் காலையில் எழுந்தவுடன் பல் துலக்கி முடியுமானால் குளித்துவிட்டுக்குளிக்க முடியாதவர்கள்முகங்களைக் கழுவிக்கொண்டு 'ஓம் முருகா, ஓம் முருகா' என்று முருகன் நாமத்தைச் சிறிது நேரம் ஜபித்து ஊதுபத்தி கொளுத்தி முருகன் படத்துக்குக் கற்பூர ஆரதி செய்து, நெற்றியில் விபூதி, சந்தனம், குங்குமம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. அப்படியே செய்கிறோம் என்று அனைவரும் உற்சாகமாகக் கூறினார்கள்.

அன்றைய வழிபாட்டில் சுமார் இருநூற்று ஐம்பது பேர் கலந்துகொண்டனர். வழிபாடு முடிந்ததும் அனைவருக்கும் பன் பிரசாதமாக வழங்கப்பட்டது. பகவான் நாமத்தைச் சொல்லிக்கொண்டு ஒவ்வொரு வீட்டிலும் முருகன் படம் வைத்துத் தீபாராதனைசெய்து ஒவ்வொரு வீட்டிலும் முருகனை எழுந்தருளச் செய்த நிகழ்ச்சி பக்தி பூர்வமாகவும் சிறப்பாகவும் நடந்தது.

ஒவ்வொரு குடிசைக்கும் முருகன்படத்தை எடுத்துக்கொண்டு நாங்கள் சென்றபொழுது அக்குடிசையில் உள்ள மக்கள் முகமலர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும் எங்களை வரவேற்றது எங்களுடைய உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. அச்சேரியில் உள்ள குடிசைகளுக்கு இன்னும் மின் விளக்கு வசதி செய்து தரப்படவில்லை. ஒவ்வொரு குடிசையிலும் மண்ணெண்ணெய் விளக்கு ஏற்றி வைத்திருந்தார்கள். எனவே புறத்தில் வெளிச்சம் மங்கலாக இருந்தது. ஆனால் அவர்களுடைய உள்ளம் அன்று ஒளி பெற்று விளங்கியது. அக இருளை அகற்றும் வழிபாட்டு முறை ஒவ்வொரு வீட்டிலும் முருகன் படம் வைத்துச் செயல்முறையில் விளக்கிக் காட்டப்பட்டது. நாங்கள் செய்து காட்டிய வழிபாட்டுமுறையை ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் கற்றுக்கொண்டார்கள். அன்று இரவு முருகன் படம் வீடுகளில் வைத்துப் பூஜைசெய்து காட்டிய நிகழ்ச்சி முடிவதற்கு மணி பத்து ஆயிற்று. நேரம் போனதே யாருக்கும் தெரியவில்லை. சேரி மக்களும் அன்று இரவு பத்துமணிவரையில் விழித்திருந்து உற்சாகத்துடன் பங்கு கொண்டார்கள். பத்து மணிக்குமேல் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு கினிப்பாளையத்தில் உள்ள ஓர் அன்பர் வீட்டிற்கு நாங்கள் தங்கச் சென்றோம்.

பண்பட்ட நிலத்தில் விழும் விதை நல்ல விளைவைத் தரும். உவர் மண்ணில் விழும் விதை முளைத்து வந்து செடி நிலையில் கருகிப் போகும். கட்டாந்தரையில் விழும் விதை முளை கிளம்பி வரும்போதே கருகிப்போகும்.

பாறையில் விழும் விதை முளைத்தே வராது. இங்ஙனம் ஏகநாதர் பகர்ந்திருக்கிறார். கினிப்பாளையம் சேரி மக்களுக்குச் சொன்ன விஷயங்கள் பண்பட்ட நிலத்தில் விழுந்த விதை போன்று நல்ல பலன் கொடுத்தன. 20-6-82காலை கினிப்பாளையம் சேரிவழியாக நாங்கள் வேறு ஓர் ஊருக்கு அந்தர்யோகத்துக்குச் சென்றுகொண்டிருந்தோம். சேரி மக்கள் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் நெற்றியில் விபூதி, சந்தனம், குங்குமத்துடன் நின்றுகொண்டு இருந்ததைக் கண்டோம். அவர்களை அந்தக் கோலத்தில் பார்ப்பதற்கு ஆனந்தமாக இருந்தது. முதல் நாள்இரவுசொன்னவிஷயங்களைஅடுத்தநாள் காலையிலேயே செயல் முறைக்குக் கொண்டு வந்ததைப் பார்த்து நாங்கள் மகிழ்வு அடைந்தோம். தக்க முறையில் வழிகாட்டுபவர்கள் இல்லாமையால் கீழ்க்குல மக்கள் பிற்போக்கு நிலையிலேயே இருக்கிறார்கள். வழிகாட்டுபவர்கள் இருந்தால் விரைவில் தங்களை உயர்த்திக் கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதை அன்று நிருபித்துக் காட்டினார்கள். கினிப்பாளையம் சேரியில் நடந்த நிகழ்ச்சிகளைக் கேள்விப்பட்ட மற்றோர் ஊர் அன்பர் தங்களூர்ச் சேரியிலும் கினிப்பாளையத்தில் நடந்ததைப் போன்று நிகழ்ச்சி நடத்தவேண்டுமென்று விரும்பினார். விஜயமங்கல வார வழிபாட்டுப் பக்தர்கள் அந்த அன்பருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டிய உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அவர்களும் மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார்கள்.

இன்றைக்கு மேல்நிலையில் உள்ள மக்களைக் கீழ்நிலைக்குக் கொண்டு வருவதுதான் சமுதாயச் சீர்திருத்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு யாரும் முற்பட்டவர்கள் (Forward) என்று சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால் அப்படிச் சொல்லிக்கொள்வார்களானால் வேலை வாய்ப்பும் மற்ற சலுகையும் பெறமுடியாது. தங்களைப் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளவே முயலுகிறார்கள். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற கோட்பாட்டிற்கு இது நேர் மாறானதாகிறது. கீழான எண்ணங்கள் ஒருவனை மேலோன் ஆக்கமாட்டா. எனவே இது சமுதாயச் சீர்திருத்தம் ஆகாது.

மேல் நிலையில் உள்ள மக்களை மேலும் மேல் நிலைக்குச் செல்லுமாறு உதவுவதும், கீழ் நிலையில் உள்ள மக்களை மேல் நிலைக்குக் கொண்டு வருவதும் சமுதாயச் சீர்திருத்தமாகும். சேரி மக்களுக்குப் பண்பாட்டையும், கல்வியையும் கொடுக்கும்பொழுதுதான் அவர்கள் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். சமயத்தின் அடிப்படையில் பண்பாட்டை வழங்கும்போதுதான் அது சிறந்த பண்பாடாக அமையும். இதுநாள் வரையிலும் பாமர மக்களையும், சேரி மக்களையும் புறக்கணித்ததின் விளைவாக நாம் வீழ்ச்சியுற்றோம். இனி மேலாவது அவர்களைப் புறக்கணிக்காது அவர்களுக்கு வேண்டிய உதவி செய்வதற்கு நாம் முன் வரவேண்டும். கினிப்பாளையம் சேரியில் நிகழ்ந்த நிகழ்ச்சி போன்று எல்லா ஊர்ச் சேரிகளிலும் நிகழ்த்துவதற்கு அன்பர்கள் முன்வருவார்களானால் மதமாற்றம் நிகழ்வதைத் தடுப்பதோடு நாட்டுக்கு நற்பணி செய்தவர்களும் ஆவார்கள்.

செய்திகள்

நிகழ்பவை

இவ்வாண்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல ஒன்பது, பத்தாம் வகுப்பு மாணவர்கள் ஐக்கிய வணக்கத்துக்காக ஜுலை மாதம்23, 24 தேதிகளில் கன்னியாகுமரிக்கும், திருச்செந்தூருக்கும் செல்வார்கள். எட்டாம் வகுப்பு மாணவர்கள் திருச்செங்கோட்டுக்கும், ஏழாம் வகுப்பு மாணவர்கள் கும்பகோணத்திலுள்ள கோயில்களுக்கும், ஐந்தாம், ஆறும் வகுப்பு மாணவர்கள் திருவையாறுக்கும், இவ்வாண்டு சேர்ந்த மாணவர்கள் திருச்சியிலுள்ளகோவில்களுக்கும் வழிபாட்டுக்குச் செல்வார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் ஆடி விடுமுறைக்காக ஆகஸ்டு மாதம் 9ஆம் தேதி மாலை 3-00 மணிக்குமேல் அவரவர் ஊர்களுக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

மஹாபாரதம்	பிரசார விலை ரூ.	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	5-50
இராமாயணம்	,, ...	5-00
தினசரி தியானம்	,, ...	4-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	...	3-50
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்குநிறைகின்றபொருள்	ஷை ...	2-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
ஹரிச்சந்திரன்	(நாடகம்) ...	2-00
விரதவீரர் பீஷ்மர்	ஷை ...	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள்	,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	,, ...	1-00
தானவீரன் கர்ணன்	,, ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்) ...	1-00
ப்ரஹ்லாதன்	நாடகம் ...	1-00
தபோபலன்	,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	ரூ.	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
ஆத்ம சக்தி	...	1-00
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவ தத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
சைவன் யார்?	...	0-50
*முருகக் கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-25
The Bhagavad Gita (11th Imp.)	...	24.00
Tirukkural (with plastic cover)	...	8-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	6-00
Sri Krishna-The Manifest Divinity	,, ...	6-00
Ramayana	,, ...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bhagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
Key to Higher Life	...	1-25
The Student	...	1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00
The Nursery School	...	1-00
The School	...	1-00
The Teacher	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக மஞ்ஜரிக்கு ரூ. 1-80ம் இராமாயணத்திற்கு ரூ. 1-60ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-80ம் தினசரி தியானத்திற்கு ரூ 1-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 5.00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில்

மூன்று நாட்கள் சிறப்பு வழிபாடு

ஆகஸ்ட் மாதம் 6 வெள்ளி, 7 சனி, 8 ஞாயிறு

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஆகஸ்ட் மீ 6, 7, 8 தேதிகளில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி முறைப்படி சிறப்பு வழிபாடு நடைபெறும். ஆகஸ்ட் 6ம் தேதி வெள்ளிக்கிழமை 'ஓம் மஹாசக்த்யை நம:' என்னும் மந்திரமும், 7ம் தேதி சனிக்கிழமை 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரமும் 8ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 'ஓம் நமசிவாய' என்னும் மந்திரமும் நாம அர்ச்சனையின் பொழுது ஜபத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதில் அன்பர்களும், தாய்மார்களும் மூன்றுநாட்களிலுமோ அல்லது வசதிப்படும் நாட்களிலோ கலந்து கொள்ளலாம். தங்குவதற்கு இடவசதி தனித்தனியே அமைக்கப்பெறும்.

நிகழ்ச்சி முறை

காலை

5-45	மணி முதல்	6-00	மணி வரை	—	திருப்பள்ளி எழுச்சி
6-00	,,	7-00	,,	—	நாம அர்ச்சனை
7-00	,,	7-10	,,	—	தியானம்
7-30	,,				சிற்றுண்டி
9-00	,,	10-00	,,	—	வாசிப்பு-சத் சம்பாஷணை
11-00	,,	12-00	,,	—	நாம அர்ச்சனை
12-00	,,	12-10	,,	—	தியானம்
12-30	,,			—	நண்பகல் உணவு

மாலை

4-00	மணி முதல்	4-30	மணி வரை	—	சிற்றுண்டி
4-30	,,	5-00	,,	—	பஜனை
5-00	,,	6-00	,,	—	நாம அர்ச்சனை
6-00	,,	6-10	,,	—	தியானம்
6-30	,,	7-30	,,	—	சொற்பொழிவுகள்
7-30	,,	8-00	,,	—	கலாநிகழ்ச்சி
8-30	,,			—	இரவு உணவு

உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஏழு வீதம் நேரில் செலுத்தலாம். கலந்துகொள்ள விரும்புபவர்கள் கலந்துகொள்ளும் நாட்களைக் கடிதத்தின் மூலம் காரியதரிசி, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி ஜில்லா என்ற முகவரிக்கு முன்கூட்டியே தெரிவிப்பது உசிதம்.

இங்ஙனம்

சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.